


கல்கி
ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...
போயஸ் புகைச்சல்!
KALKI • 26.10.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்
பெண்களுக்குச் சொத்து... பதிவுக் கட்டணம் ரத்து..!"
– நரேந்திர மோடி பேட்டி
வாரணம் ஆயிரம் காரணம் ஆயிரம்"
கௌதம் வாசுதேவ் மேனன்


JANSONS
| Shirts | Trousers |
| Club Wear | Sports Wear |
Make a splash, turn he
grab attention
start a conversa
With Jansons Shi
Trousers ra
the spotlight is al
on
Make the most
every mom
Every Moment.
A Jansons Mom
EXCLUSIVE SHOW ROOM
ERODE VELACHERY



கல்கி
02.11.2008
தீபாவளிச் சிறப்பிதழில்...
ஆரம்பம்...ஆரம்பம்...ஆரம்பம்...
முத்தான 3 தொடர்கள்..
ச்சும்மா அதிரச் அதிர வெடிக்கும்
உற்சாகத்துக்கு...
நடிகை ராதிகா
எழுதும்...
ரயில் ராதிகா டு ராடன் ராதிகா
வளர்ச்சி வரலாறு; வெற்றி ரகசியம்!
உத்வேகத்துக்கு...
'மா:ஃபா' பாண்டியராஜன்
எழுதும்...
ஆயிரத்தில் ஒருவன்
'வேலை' வாய்ப்பு; உலகை நடப்பு!
விழிப்புணர்வுக்கு...
ஜி.எஸ்.எஸ்.
எழுதும்...
ஹாஸ்பிடல் எத்திக்ஸ்!
முக்கியத் தகவல்கள்;
முறைகேடு அதிர்ச்சிகள்!
அசத்தலான போட்டிகள்
ஆரவாரப் பரிசுகள்...
இனிமையான மாற்றங்கள்...
ஈர்க்கும் புதுமைகள்...

தமிழக போலீஸ் வசம் இருக்கும் மோப்ப நாய்களுக்கு, விஜய், விக்ரம் என்று நடிகர்களின் பெயர் வைத்திருப்பது பற்றிய கேள்விக்கு, 'அவையும் 'டூப்' கேட்கா மலிருந்தால் சரி' என்ற தராசுவின் பதில் சரியான 'லொள்'ளு!

- வே.ந.கதிர்வேல், வேலூர்-6

புத்தகத் தேடலில் இலக்கிய நேயர்களுக்கு நேரும் சுவையான அனுபவத்தை, அப்படியே இயக்குநர் சிம்புதேவன் சொல்லியிருப்பது மலரும் நினைவில் ஆழ்த்தியது.

- ஆர்.பழனிக்குமார், மதுரை

சந்துரு சொன்ன அபூர்வத் தகவல்கள் மறைந்த பூர்ணம் விஸ்வநாதனுக்குச் செலுத்தப்பட்ட பரிபூரண அஞ்சலி!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

பார்வையற்றோரின் செயல்பாடுகளைப் பதிவுசெய்த புகைப்படங்கள் 'மூன்றாவது கண்' காண கண் கோடி வேண்டும்.

- எஸ். வெங்கடரமணன், சென்னை 3

'Z' பாதுகாப்பு



அன்னத்தைப் போல, நல்ல விஷயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றவற்றை விட்டு விடுவது தான் அறிவு என்ற சுதா சேஷய்யன் விளக்கம் அருமை.

- பி.ஹேமாம்புஜம், சென்னை - 17

இப்படிக்கு ரோஸின் எண்ணங்கள் மலரும் நாட்கள் தூரத்தில் இல்லை.

- ஆர். ரங்கநாதன், சென்னை - 17

எல்லை கடந்த காதல், தொலைவையும் மீறும் என்பதை ஜி.ஆர்.சுரேந்

தர்நாத் சுலபமாகப் புரிய வைத்துவிட்டார்.

- ஜே.துரைராஜ், சென்னை

‘ராஜீவ் மரணத்துக்குக் காரணம்கூட மத்திய அரசு கையாண்ட தவறான கொள்கைகள்தான்’ என்ற ராமதாஸ் கருத்து சிந்தனைக்குரியது.

- ராஜி, கோயம்புத்தூர்

பழுத்த இலை உதிர்வதும் புதிய மொட்டுகள் பூப்பதுமான இயற்கைச் சமன்பாட்டை, கவிதை நன்றாக உணர்த்தியது.

- சி.என்.ரமாதேவி, சென்னை

‘விடுதலைப் புலிகள்’ பற்றிய தலையங்கம்

உண்டா..?

மிகவும் சரி... உங்கள் துணிச்சலுக்குப் பாராட்டுகள். ஆனால், உங்களுக்கு ‘இசட்’ பிரிவு பாதுகாப்பு இருக்கா?

- ஸ்ரீனிவாசன், சென்னை

விடுதலைப்புலிகளைப் பற்றிய கார்ட்டூன் மிகவும் அருமை.

- வி.ஜி. சத்தியநாராயணன், சென்னை

நோயைவிட அது குறித்தான பயம் அபாயகரமானது என்பதை ‘கழுத்தை நெறிக்கும் கற்பனை நோய்’ தெளிவாக விளக்கிவிட்டது!

- ஆர். பிரகாஷ், பொன்மலை

‘ஐயன்’ ஊர்த்துவ தாண்டவர் கோலத்தில் எண்ணமாய்க் காட்சி அளிக்கிறார்! அவரைப் பார்த்துப் பரவசம் அடைந்தாலே பாவமெல்லாம் போகும்.

- என்.பாலசுப்பிரமணியன், சென்னை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி
உதவி ஆசிரியர் : கதிர்பாரதி
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் : 044 - 4343 8899
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள் :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக எழுந்த மோதலில், காங்கிரஸைக் கைகழுவினார்கள் இடதுசாரிகள். தமிழகத்தில் தி.மு.க.வுடன் காங்கிரஸ் இருப்பதால், தி.மு.க.வையும் சேர்த்தே விலக்கி வைத்தார்கள்! இதற்கு முன்பே பா.ம.க., தி.மு.க.வை விட்டு விலகியது. தமிழகத்தில் பெரிய அளவில் அணி மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்ப்புக் கிளம்பியது. இடதுசாரிகளும், பா.ம.க.வும், அ.தி.மு.க.வுடன் இணைந்து, பலமான கூட்டணியை உருவாக்கும் என்று மீடியா அடித்துக் கூறியது. ஆனால் அம்மா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்த இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான உண்ணாவிரதத்துக்கு, தனது பிரதிநிதியை அனுப்பி வைக்கிறேன் என்றவர், சொன்னபடி செய்யவில்லை. எதிர்பார்த்தபடி கூட்டணி மாற்றங்கள், நிகழவில்லை! ஏன்...?

''நீங்கள் சொன்னதுபோல, அது மாதிரி கூட்டணி அமைப்பதற்கு அம்மா ஆர்வமாக இருந்தது உண்மைதான். ஆனால் இடையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் பிரமுகர்கள், விஜயகாந்தைச் சந்தித்துப் பேசியதில்தான் குழப்பம் ஆரம்பமானது. தி.மு.க. மட்டுமல்ல, விஜயகாந்த் கட்சியையும், எங்கள் எதிரிக் கட்சியாகவே பார்க்கிறோம். இந்த விஷயத்தில் அம்மா இன்னும் சீரியஸாக இறங்காததற்கு இன்னொரு காரணம், காங்கிரஸ், தி.மு.க.வுடன் தனது உறவைத் தொடருமா என்ற சந்தேகம்தான். இந்த நிலை தெளிவாகும் வரை இப்போதிருக்கும் நிலையே தொடரும்'' என்கிறார் அ.தி.மு.க. முன்னணி பிரமுகர் ஒருவர்.

காங்கிரஸ் பிரமுகர் சற்று வெளிப்படையாகவே விஷயங்களைப் போட்டுடைத்தார். ''வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிரான மனோபாவம், ஓர் அலையாக அடிக்கும். தமிழகத்தில், ஆளும் தி.மு.க.வுக்கு எதிராகத்தான் மக்கள் வோட்டுப் போடுவார்கள். தேசிய அளவில் காங்கிரஸ் அல்லது பா.ஜ.க. என்ற நிலையில், தமிழகத்தில் பா.ஜ.க.வைக் காட்டிலும் காங்கிரஸுக்கு இயல்பாகவே செல்வாக்கு உண்டு. ஆனால், தி.மு.க.வுடன் கூட்டணியில்



ஆறும் கூட்டணி; அதிர்ச்சியில் கருணாநிதி!

இருக்கும் பட்சத்தில், அதன் மேல் விழப் போகும் அடிகள் எங்களையும் தாக்கினால், எங்களுக்குத் தோல்விதான். வருகிற தேர்தலைப் பொறுத்தமட்டில் ஒவ்வோர் இடமும் எங்களுக்கு முக்கியம். எனவேதான், தே.மு.தி.க.வுடன் உறவுக்குக் கை கொடுக்கலாமா என்ற சிந்தனை உருவாகி பலப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி கண்டு, பின் தி.மு.க.-அ.தி.மு.க. இரண்டையும் ஓரங்கட்டி, சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றிவாகை சூடலாமே'' என்கிறார்.

> ''பாராளுமன்றத்தில் தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி தொடர்ந்தால் காங்கிரஸ் கண்டிப்பாகத் தோற்கும்!''

தே.மு.தி.க. தரப்புடன், தொடர்பில் பல காங்கிரஸ் பிரமுகர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக ஜி.கே.வாசன், விஜயகாந்துடன் நல்லுறவுவில் இருக்கிறார். நடந்து முடிந்த தே.மு.தி.க இளைஞர் அணி மாநாட்டுக்கு, தம் நெருங்கிய நண்பர் மூலமாக முப்பது லட்ச ரூபாய் நிதியுதவி செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிதம்பரம் தரப்பு தே.மு.தி.க.வுடன் நெருக்கமான உறவை வளர்த்து வருகிறது. அடுத்த சட்டமன்றத் தேர்தலில், ப.சிதம்பரத்தை முதல்வராக முன்னிறுத்திப் பிரசாரம் செய்ய, விஜயகாந்தை வலியுறுத்துகிறார்கள். பத்து நாட்களுக்கு முன்னர் சிதம்பரம் தரப்புக்கும், தே.மு.தி.க. தரப்புக்கும் பேச்சுவார்த்தை நடந்ததாகவும் சொல்கிறார்கள்.

உளவுத்துறை மூலமாகக் கிடைத்த இந்தத் தகவல்கள் கருணாநிதியை ரொம்பவே அதிர்ச்சியடைய வைத்தனவாம். நேரில் பார்க்கும்போது உருகும் உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள், மறைமுகமாக இந்த அஜண்டாவுடன் செயல்படுவதைப் பற்றி வருத்தப்பட்ட அவர், மாற்று ஏற்பாடுகள் குறித்தும் யோசித்து வருகிறாராம். இருந்தாலும் காங்கிரஸ் தரப்பைச் சமாதானப்படுத்த, ஆட்சியில் பங்குக்குப் பச்சைக் கொடி காட்டக் கூடும் என்று சொல்கிறார்கள். கருணாநிதியே வலிய வந்து பங்கு கொடுக்கும்போது, சோனியா வேண்டாமென்று சொல்ல மாட்டாரே?! அப்படியே காங்கிரஸ் போனாலும், இடதுசாரிகள், பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகியோர் துணை வருவார்கள் என்று கருணாநிதி நம்புகிறார். இதற்கிடையில் இலங்கைத் தமிழர் பிரச்னையில், எம்.பி.க்கள் ராஜினாமா செய்வது குறித்த சர்வகட்சி முடிவு காங்கிரஸைச் சங்கடப்படுத்தியிருக்கிறது. நவம்பரில் ஐந்து மாநிலத் தேர்தல்கள் முடிந்ததும், பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும்.

– ப்ரியன்

தனித்துவமான சினிமா மொழியின் மூலம் அனைவரது மனத்தையும் வசீகரிக்கத் தெரிந்தவர் இயக்குநர் ராதாமோகன். அவரது இயக்கத்தில் 'அபியும் நானும்' தீபாவளிக்கு ரெடி. படம் குறித்துப் பேசினார்...

முதல் ஹீரோ!

"'அபியும் நானும்' அப்பாவுக்கும் மகளுக்குமான கதை. இருவருக்கும் இடையில் இருக்கும் நேசத்தின் கதகதப்பை, அன்பின் தட்பவெப்பத்தை இம்மியளவுக்கும் குறையாமல் கொடுக்கக்கூடிய படம். ஒரு பெண்ணுக்கு அப்பா என்கிற உறவு அப்பா மட்டுமல்ல; சின்ன வயதில் அவளை வசீகரிக்கக்கூடிய முதல் ஹீரோவே அப்பாதான். இந்த ஸ்கிரிப்டை பிரகாஷ்ராஜ் கிட்ட சொன்னபோது, உணர்ச்சிகளைக் கட்டுக்குள்ள வைச்சிருக்கற அவர் என்னைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டார். இந்தக் கதைக்கு 'ஹோம்-ஒர்க்' எதுவும் பண்ணணுமான்னு கேட்டார். அப்பா - மகள் பாசத்தைக் காட்ட எதற்கு ஹோம்-ஒர்க்? ஸ்பாட்டுக்கு வந்து நீங்க நடிச்சா போதும்னு சொல்லிட்டேன். இயல்பா, யதார்த்தமா வந்திருக்கற இந்தப் படம், 'மொழி'யைப் போல எல்லோரையும் நெகிழ வைக்கும்'' என்றவரிடம், ''ஆக்ஷன் படம் பண்ணும் ஐடியா இல்லையா?'' என்றால், ''ஆசை இருக்கு. ஆனால், கதை யதார்த்தத்தை மீறினதா இருக்கக் கூடாது. பத்துப் பேரை அடிக்கறது. ஃப்ளைட்டிலிருந்து ஓடுற ரயில்ல குதிக்கறதுன்னு இருக்கக் கூடாது. கதைதான் ஹீரோவா இருக்கணும். கதைதான் ஹீரோவைத் தீர்மானிக்கணும். இயக்குநர் பாலா படங்கள் எல்லாமே அப்படித்தான் இருக்கும். அவர் ஹீரோவுக்காக கதை பண்றது கிடையாது. அப்படி கதைக்காக என் படங்கள்ல முன்னணி நடிகர்கள் நடிக்க வந்தா, தாராளமா நான் ஆக்ஷன் படங்கள் எடுக்க ரெடி. அதே நேரத்துல அது ராதா மோகன் படமாகத்தான் இருக்கும்'' என்கிறார்.



* 'அபியும் நானும்' படத்தில்...

- கண்மணி



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 1167/08

எஸ். பக்கிரிசாமி, திருவாரூர்.

? குஜராத் விவசாயிகள் டாடா நிறுவனத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பதைக் கவனித்தீர்களா?

! குஜராத்தில் நானோ தொழிலகத்துக்காக விவசாய நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை; அரசிடமுள்ள நிலம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் மார்க்கெட் விலைக்கு விற்கப்பட்டுள்ளது; இலவசமாக வழங்கப்படவில்லை. இதை மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.



* ஆட்சிக்கு அப்பால்

ரஜினி கட்சி ஆரம்பிக்க வேண்டுமோ?



* மாற்றுக் கனவு!

பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

? தமிழ்நாட்டில் விலைவாசி கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது; இனி மக்கள் மாதம் 400 ரூபாய் செலவு செய்தால் போதும், மீதி பணமெல்லாம் மிச்சம்தான் என்று உணவு அமைச்சர் எ.வ.வேலு ஒரு பொருளாதார மேதை போல் பேசியுள்ளாரே?

! மக்கள் 'பேதை'களாக இருக்கிறார்கள் என்கிற எண்ணத்தில் மேதை போல் பேசுகிறார். ஆனால், அதிகார போதை ஏறிப் பேசுகிற சொற்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

கே. ரமேஷ், எஸ்.பி.பி. காலனி.

? இலங்கைத் தமிழர் பிரச்னையில் தலையிடக் கோரி பிரதமருக்கு இலட்சக் கணக்கில் தந்திகள் அனுப்பும்படி தமிழக முதல்வர் கேட்டுக்கொண்டிருக்கிறாரே?

! அதை விட்டுத் தள்ளுங்க; அதிலேயாவது தபால் தந்தி இலாகாவுக்கு வருவாய் கிடைக்கக்கூடும். ஆனால், இப்போது, சர்வகட்சி மாநாடு கூட்டி, ராஜினாமா மிரட்டல் விடுத்துள்ளார்களே, அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. இந்த அபத்தத்தில் தமிழக காங்கிரஸும் ஈடுபட்டு, பிரதமரை மிரட்டியிருப்பது அசட்டுத்தனத்தின் உச்சம்!

ஜி. வெங்கட்ராமன், மும்பை- 81. ❑


? கிரீமிலேயருக்கான வருமான உச்சவரம்பை, ரூ. 4.5 லட்சமாக அரசு உயர்த்துகிற நிலையில், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முற்பட்ட வகுப்பினருக்கும் இடஒதுக்கீடு செய்திருக்கலாமே?

! செய்திருக்கலாம்; ஆனால், அதனால் பிரித்தாளும் சூழ்ச்சி தோல்வி அடையுமே!

நீங்கள் கேட்டவை - தராசு

இடஒதுக்கீடு சலுகையால், பிற்படுத்தப்பட்டவர்களிலேயே வசதி படைத்தவர்கள்தான் மேன்மேலும் பயனடைய வேண்டும் என்கிற நோக்கில், அதற்கு வழி வகுக்கும் சட்டம் இது. பிரிவுக்குள் பிரிவினை!

மு.ரா. பாலாஜி, கோலார்.





* மாறும் ரூட்!

? பிரதமர் பதவிக்கு, அத்வானியைக் காட்டிலும் மாயாவதியே சிறந்தவர் என உமா பாரதி திடீர் ஆதரவு தருகிறாரே?

! மீண்டும் தம்மை பி.ஜே.பி.யில் சேர்த்துக்கொள்ள அத்வானி சம்மதிக்கவில்லை என்பதால், உமா பாரதிக்கு அவர் மேல் கோபம் இரட்டிப்பாகி உள்ளது.

அ. சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21.

? மின்சார வாரியத்தை இரண்டாகப் பிரிக்கப் போகிறார்களாமே... அதன் பிறகாவது தமிழகம் தப்புமா?

! மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டும்; மின் விநியோகம் செம்மைப்பட வேண்டும்; இரண்டிலும் பொருளாதார, விஞ்ஞான அணுகுமுறை மேம்பட வேண்டும். இவை நடக்காவிடில், மின்வாரியத்தை நான்காகப் பிரித்தாலும், எட்டாக வகுத்தாலும் பயன் ஏதுமிராது; பிரச்னைகள்தான் அதிகமாகும்.

ச. நாகரத்தினம், திருப்பூர்.

? நூற்றைம்பது நாட்கள் 'குருவி' பறந்ததா? பறக்கவிடப்பட்டதா?

! பறப்பதைப் போல் கிராஃபிக்ஸ் காட்டப்பட்டது.

சி. இந்து, விழுப்புரம்.

? லண்டனைச் சேர்ந்த ஒரு பெண் அமைச்சர், தமது குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக, பதவியை ராஜி

னாமா செய்துள்ளார் என்று பத்திரிகையில் படித்தேன். உங்கள் கருத்து...?

! குடும்ப நலனைக் கவனிக்க ஆட்சியை/பதவியைத் தக்கவைத்துக் கொள்ளும் அரசியலுக்கும், குடும்ப க்ஷேமத்துக்காக பதவியைத் துறப்பதற்குமான வேறுபாடு பற்றிக் கேட்கறீங்களா? அதுதாங்க பிரிட்டனுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்!



★ எதிர்ப்புக்கு டாடா!



★ புதிய பொருளாதாரம்!



★ டபுள் கேம்!

▢ ரூ. 100 பரிசு பெறுபவர் :
ஜி. வெங்கட்ராமன், மும்பை - 81.
★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
பவானி கிருஷ்ணா, பெங்களூரு.

க. வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

? மதுவால் விதவைகளான பெண்களை அழைத்து வந்து, பா.ம.க. தலைவர் மது ஒழிப்புப் போராட்டம் நிகழ்த்தியிருப்பது எதைக் காட்டுகிறது?

! ஆட்சியைப் பிடிப்பது பற்றிய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட, சமூக அக்கறையைக் காட்டுகிறது. இதுபோன்ற விழிப்புணர்வு இயக்கங்களை வரவேற்கத் தானே வேண்டும்!

பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? பேரண்டத்தில் மானுடர் வாழ, மாற்று வாழ்விடத்தை உருவாக்க வேண்டும் என்று அப்துல்கலாம் சொல்கிறாரே?

! சூரிய மண்டலத்தில் உள்ள வேறு கிரகங்களில், உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்று தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இல்லையென்றாலும், அங்குள்ள வளங்கள் என்ன, எந்த அளவுக்கு அவை நமக்குப் பயன்படும் போன்ற ஆய்வுகளையும் விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். எனவே, கலாம் கனவு காண்பதில் வியப்பில்லை. எனினும், நமது பூமியை நமது பிழைகளாலும் தவறுகளாலும் பாழடித்து விட்டு, புதிய வாழ்விடங்களைத் தேடுவதில் நமக்கு ஒப்புதல் இல்லை!

பவானி கிருஷ்ணா, பெங்களூரு. ★

? தெலுங்கானா மாநிலம் அமைக்க, தெலுங்கு தேசம் கட்சி திடீர் ஆதரவு தருவது பற்றி?

! சிரஞ்சீவி பாலிடிக்ஸில் நுழைந்து விட்டார் இல்லே, அதனாலேயே சூழ்நிலை மாறிட்டுது! இன்னைக்குப் போணியாகும் பாலிடிக்ஸ் எதுன்னு நாயுடு தெலுஸுகுன்னாரு!

★ அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

? ரசிகர்களின் வேண்டுகோளை ஏற்று, ரஜினி கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்கிறாரே திருநாவுக்கரசர்?

! அப்படி அவர் சொன்ன முகூர்த்தம், உருவான ரஜினி ராஜ்யத்தையும் எச்சரிக்கை விடுத்துக் கலைத்துவிட்டார் ரஜினி! அது சரி, திருநாவுக்கரசருக்கு பா.ஜ.க. அதற்குள் அலுத்துவிட்டதா, என்ன!



கண்ணைக்கவரும்
"வண்ணமயம்" கலக்ஷென்
84 வருடங்களாய் தனது
படைப்புகளில் முத்திரை பதித்து
வரும் ஆரெம்கேவி. இந்த வருட
தீபாவளியை கலாச்சாரமும்,
நவீனமும் கலந்த
கலைப்படைப்புகளை அளித்து
கொண்டாடவிருக்கிறது.
அத்தனையும் அணிந்தோர்
மனதை ஆனந்திக்க செய்யும்
அற்புத படைப்புகள்.
ஆரெம்கேவிக்கு வருகை தாருங்கள்!
வண்ணமயம் கலக்ஷெனோடு
தீபாவளியைக் கொண்டாடுங்கள்.
வாடிக்கையாளர் நலனுக்காக
வழங்கிக் கொண்டிருக்கிறோம்,
ஆரெம்கேவியின் போனஸ் கார்டு
பதிவு செய்யுங்கள் பயன்
பெறுங்கள் உங்கள் சேமிப்பு!
எங்கள் பூரிப்பு!
பாரம்பரியத்தில்
புதுமை
RmKV
diwali specials
வண்ணார்பேட்டை
திருநெல்வேலி
ph 0462 2503105
பனகல்பார்க் | சென்னை
ph 044 28144445
www.rmkv.com

குருகிரந்த் சாகிப், "ஒரு மனிதனுக்கு மனிதன் பிறப்பு பற்றித் தெரியாது" என்பார். அதைப் போலத்தான் இந்தப் பிரபஞ்சம் குறித்து இந்த மனிதனால் அறிய முடியாது என கருதிக் கொண்டிருக்கையில், சமீபத்தில் பெரும் பரபரப்பை உருவாக்கியது புரோட்டான் மோதல் ஆய்வு. அந்தச் செய்தி அடங்கிவிட்ட பின்பும் அதிலுள்ள சந்தேகங்களைத் தீர்க்க, விக்ரம் சாராபாய் விண்வெளி மைய விஞ்ஞானி நெல்லை சு. முத்து அவர்களைச் சந்தித்தோம். அந்த உரையாடலில் சில பகுதிகள்...



விஞ்ஞானி நெல்லை சு.முத்து பேட்டி

செப்டெம்பர் 10 அன்று ஐரோப்பிய அணு ஆராய்ச்சியின் மகாவெடி தினம் (Big Bang Day) பற்றி உங்கள் கருத்து என்ன?

"உலகின் முக்கியமான நாள். மனிதன் இன்னொரு உலகத்தையே சிருஷ்டிக்கும் முயற்சியில் முன்னேறி விட்டானோ என்று நம்மைச் சிந்திக்கத் தூண்டிய நாள். இந்தப் பரிசோதனை குவார்க் குளூவோன் பிளாஸ்மா என்கிற பிரபஞ்சக் குழம்பினைக் கண்டுபிடிக்க உதவுவது.

அப்படியானால் இது மனிதன் கடவுளாகும் முயற்சியா?

"மூலத்தை நோக்கிய, பிரபஞ்சத் தோற்ற ரகசியத்தை அறியும் முயற்சி இது! உதாரணத்துக்கு சூரியனுக்கு வெளியே -269 டிகிரி சென்டிகிரேட் உறை பனி. (பனிக்கட்டியின் உறைநிலையை விட 269 டிகிரி சென்டிகிரேட் குறைவு) ஆனால், சூரியனுக்கு உள்ளே பல லட்சம் டிகிரி அளவு வெப்பம் இருக்கிறது. இந்த அதீத முரண்பாடு எப்படி? சூரியனின் விளிம்பு எதனால், எப்படி உருவாகியுள்ளது? இதையெல்லாம் அறிய வேண்டும். அறிவதாலேயே நாம் இன்

னொரு சூரியனை உருவாக்கிவிட முடியாது. இன்னொரு பூமிக்கான சாராம்சத்தை உருவாக்க, கோடி ஆண்டுகளுக்குப் பின் சாத்தியமாகலாம்.''

அந்த மகா வெடிப்பு ஆய்வின் முடிவுதான் என்ன?

''10,000க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கேற்ற, பல கட்டங்களில் பல பாகங்களில் நிகழும் அச்சோதனை பாதியிலேயே கைவிடப்பட்டது. அடுத்த ஆண்டு வசந்தத்தில்தான் இனி தொடரும்.''

அந்த அணு மோதல் பரிசோதனையைச் சிலர் எதிர்த்தது ஏன்?

''ஆல்ப்ஸ் மலைகளுக்கு

இந்த ஆய்வையொட்டி உலகில் நிகழ்ந்த வேறு சம்பவம்?

''அமெரிக்காவில் காத்தே மக் ஆல்பைன் 'நாக்க... முக்க' பாணியில் ஒரு குத்துப்பாட்டுப் போட்டார் ''புரோட்டான் முட்ட... புரோட்டான் முட்ட...'' என்று.

மின்துகள்கள் மோதுவதை ரொம்ப சிம்பிளா காட்ட (அல்லது) சொல்ல முடியுமா?

''மக்களைக் கட்டிப் போட்டுப் பாடாய்ப்படுத்தும் டி.வி.தான் உதாரணம். அதனுள் மோதுவது மின்துகள்கள்தான். வெற்றிடமும் திரையும் இருப்பதால் படமாக மாறித் தெரிகிறது. அது இல்லாவிட்டால் அத்துகள்கள் டி.வி. பெட்டியைத் தாண்டி வெளியே ஓடிக்கொண்டிருக்கும்.''

புரோட்டான் முட்ட...முட்ட...

நடுவே, பூமிக்கு அடியில் 175 மீட்டர் ஆழத்தில் குகையில், புரோட்டான்களை மோத வைத்திருந்தார்கள். ஆற்றல்மிக்க புரோட்டான்கள் மோதல் 7 டன் யுரேனியம் அணுவெடிப்புக்குச் சமம். அதாவது 400 கிலோ ஹைட்ரஜன் குண்டு வெடிப்புக்கு இணையானது என்பதால்தான்.''

இம்முயற்சி ஆன்மிகத்துக்குச் சவால்தானே?

''தேடலைப் பொறுத்தமட்டில் அறிவியலும் ஆன்மிகமே!''

பொருளாதாரத்தில் பின்தங்கிய இந்தியா, இதில் இந்திய விஞ்ஞானிகளின் திறத்தையும் பணத்தையும் செலவழிப்பது அவசியமா?

''எனக்குத் தெரிந்தவரை இது அதிகாரப்பூர்வமான தகவல் அல்ல.''

இன்னொரு சந்தர்ப்பத்தில் நிலா பற்றிய சந்தேகங்களை, நிலா ஆய்வு முடிவுகளை விரிவாகக் கேட்பதற்கு நேரம் ஒதுக்கித்தரக் கேட்டுவிட்டு, தற்காலிகமாய் விடைபெற்றோம்.

- அமிர்தா



கல்கி



2008 அக்டோபர் 26
ஸர்வதாரி ஐப்பசி 10
மலர் : 67
இதழ் : 13

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


அமெரிக்காவுக்குத் தேள்கடி; இந்தியாவுக்கு நெருக்கடி!


அமெரிக்கப் பொருளாதாரம் வாங்கியிருக்கும் பலத்த அடியின் அதிர்வுகளை இந்தியா இன்று சந்திக்கிறது. கச்சா எண்ணெய் விலை உயர்வைத் தொடர்ந்து நாம் அனுபவிக்க நேர்ந்த விலைவாசி உயர்வைச் சமாளிக்கவே, சராசரி இந்தியன் திணறிக்கொண்டிருக்கிற நிலையில், அவன் நேரடியாகப் பெரிய அளவில் சம்பந்தப்படாத பங்கு மார்க்கெட்டின் வீழ்ச்சி வேறு அவனை ஆட்டிப் படைக்கிறது!

உலகப் பொருளாதார வீழ்ச்சியில் பணம் இழந்த அயல்நாட்டு முதலீட்டாளர்கள் பலர், இந்தியப் பங்கு மார்க்கெட்டில் தாங்கள் செய்த முதலீடுகளைத் திரும்பப் பெற முனையவே, பங்குகளின் விலை சரிந்தது. அச்சத்தில் இந்திய முதலீட்டாளர்களும் தங்கள் பங்குகளை விற்கப்போக, இந்தியப் பங்கு மார்க்கெட் வீழ்ச்சியுற்றது.

இதைச் சமாளிக்க, கோடிக்கணக்கான ரூபாய் வரிப்பணத்தை மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனங்களுக்கு வாரிக் கொடுத்துள்ளது மத்திய அரசு. உற்பத்திப் பணிகளுக்கென ஒதுக்கிய நிதி இவ்வாறு வாரி விடப்படும்போது, உற்பத்திப் பெருக்கம் தடைப்படும். அதனால் மீண்டும் விலைவாசி உயரும்.

அரசின் தற்காலிக நடவடிக்கைகளால் பொருளாதாரம் ஸ்திரமடையாது. இன்றையப் பொருளாதாரப் பிரச்னைக்கு என்ன அடிப்படைக் காரணங்கள் என்பதைக் கண்டறிந்து, அவற்றைக் களைய வேண்டும். முக்கியமாக மூன்று காரணங்கள் பொருளாதார நிபுணர்





களால் ஏற்கெனவே கண்டறியப்பட்டுள்ளன. விவசாய உற்பத்தி பெருகிய அளவுக்கு, விவசாயம் சார்ந்த தொழில்கள் பெருகவில்லை; தொழில் வளர்ச்சி பெருகியுள்ள அளவுக்கு அடிப்படை வசதிகள் பெருகவில்லை; அரசாங்கச் செலவுகளும் சமூக நலத் திட்டங்களுக்கான செலவுகளும் அதிகரித்துள்ள அளவுக்கு உற்பத்திப் பணிகள் பெருகவில்லை.

சுருக்கமாகச் சொல்வதென்றால், வரவுக்கு அதிகமாகச் செலவழிப்பதில் அரசே முன்னோடியாக இருந்து வழிகாட்டிக்கொண்டிருக்கிறது. நாட்டில் பரவிவிட்ட நுகர்வோர் கலாசாரமும் மக்களைச் செலவுகள் நோக்கி இழுக்கிறது. இன்னொரு பக்கத்தில் நிலவும் லஞ்ச-ஊழல் நடைமுறையானது, பல்லாயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பண உற்பத்திக்கு வழிகோலிக்கொண்டிருக்கிறது. கணக்கில் வராத கறுப்புப் பணப் புழக்கத்தால் பண வீக்கமும் விலைவாசி உயர்வும் மேலும் அதிகரிக்கின்றன.

அமெரிக்காவில் மிக அதிகமான மக்கள் வீட்டுக் கடன், கிரெடிட் கார்ட் கடன்கள் போன்றவற்றைத் திருப்பித் தர இயலாமல் திணறியதால்தான், மிகப் பெரிய வங்கிகளும் கடனுதவி நிறுவனங்களும் வீழ்ந்தன; அதனால்தான் அங்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை நமது தேசத்து மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் நல்லதொரு பாடம்.

தன்னிறைவு, எளிமை போன்ற காந்தியக் கோட்பாடுகளை நிராகரித்து, இன்றைய இந்தியா நுகர்வோர் கலாசாரம், ஆடம்பரம், இவற்றை ஊக்குவிக்கும் கிரெடிட் கார்ட்-கடன் மோகம் என அமெரிக்கா சென்ற திசைகளிலேயே பயணம் செய்து வருகிறது. நாம் இப்போது நின்று, யோசித்து நிதானப்படுத்திக் கொள்ளாவிட்டால் நமக்கு நேரக்கூடிய சரிவு, அமெரிக்காவுக்கு நேர்ந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானதாக இருக்கும். ○



ராங் நம்பர்

இற்றுப்போன கயிற்றுக் கட்டிலில், உடல்நலக் குறைவால் இளைத்துப்போய்க் கிடக்கும் பூபதியைப் பார்த்ததும் ராஜேஷின் மனம் கனத்துப் போனது.

பொலிவிழந்த அவர் மனைவியையும், நோஞ்சான் குழந்தைகளையும் கண்ட போது இதயத்தில் ரத்தமே வடிந்தது.

பூபதியின் தந்தை பெரியநிலக்கிழார். இல்லை என்று வருபவர்களுக்கு, இல்லையென்று சொல்லாமல் வாரி வழங்கியவர். அவரிடம் உதவிபெற்று நிமிர்ந்த எத்தனையோ குடும்பங்களில் அவனுடையதும் ஒன்று. இன்று ஓரளவுக்குப் படித்து சுமாரான வேலையில் கௌரவமாய்க் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான் என்றால் அதற்கு பூபதியின் தந்தைதான் காரணம்.

தந்தை இறந்த பிறகு, இருந்த சொற்ப சொத்தையும், உறவுகள் ஏமாற்றிப் பிடுங்கிக் கொள்ள, கடைசியில் இப்படி ஒண்டுக்குடிசையில் அடுத்த வேளை கஞ்சிக்கு வழியின்றி விழி பிதுங்கிக் கொண்டிருக்கும்படி ஆகிவிட்டது பூபதியின் கதி.

இப்போது இவர்களுக்கு உதவும் நிலையில் நானில்லை. ஆனால் என்றாவது என் வாழ்க்கைப் பாட்டுக்கு மீறிய பொருளாதார உயர்வு ஏற்பட்டால், அதை முழுக்க இவர்களின் நல்வாழ்வுக்கே செலவிடுவேன். இது உறுதி... என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டான் ராஜேஷ்.

பூபதியைச் சந்திக்க வந்திருந்த ராஜேஷின் செல்ஃபோன் அலறியது.

''ஹலோ ராஜேஷ்தானே பேசறது. உங்க ஆம்பூர் அத்தையோட வக்கீல் பேசறேன்... காலையில் உங்கத்தை இறந்திட்டாங்க. வங்கியில அவங்க பேர்ல இருக்கிற பத்து லட்ச ரூபாயை, உங்களுக்குத் தரணும்னு உயில் எழுதி வெச்சிருக்காங்க...'' என்றது மறுமுனை.

மத்தாப்பாய் வெடித்த மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டான் ராஜேஷ்.

''யா... யார் ஃபோன்ல...'' என்றார் உடனிருந்த பூபதி இருமலுடன்...

''ராங் நம்பர்...'' என்றான் ராஜேஷ். ●

சுபாகர்



போயஸ் புகைச்சல்!

★ 'மதுரை நாயக்க மன்னர்கள் காலத்துக்குப் பிறகு, ராமனாதபுரம் சேதுபதிக்கு வழங்கப்பட்ட கடற்கரைக் கிராமங்கள் 69; தீவுகள் 8. இந்த எட்டு தீவுகளில் கச்சத் தீவும் ஒன்று. ராமேஸ்வரம் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட கால்நடைகள் கச்சத் தீவில் மேய்ச்ச லுக்கு விடப்பட்டன. அங்கே பால் கறந்து, கோயில் பயன்பாட்டுக்கு எடுத்து வரப்பட்டது' போன்ற தகவல்களைச் சொல்கிறது கே.எஸ்.இராதா கிருஷ்ணன் எழுதிய 'கனவாகிப் போன கச்சத் தீவு' என்ற புத்தகம். கச்சத் தீவு இந்தியாவுக்கே சொந்தமானது என்று நிரூபிக்க, வரலாற்று ரீதியாக முக்கிய ஆதாரங்கள் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. 1974ல் கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்த பிறகு, அந்தப் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது எட்டாயிரம் முறை சிங்களக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறதாம். எண்ணூறு தமிழக மீனவர்கள் இதுவரை இறந்திருக்கிறார்கள். கேட்கவே பகீரென்று இருக்கிறது. ம.தி.மு.க. நடத்திய பகத்சிங் நூற்றாண்டு நினைவு விழாவில் இந்தப் புத்தகத்தை வெளியிட்டவர் வை.கோ.

★ போயஸ் தோட்டத்தில் ஒரே புகை மூட்டமாம். பரிகாரப் பூஜைகள் ஒரு பக்கம் இருக்க, சசிகலா வகையறாக்களை ஓரங்கட்டிவிட்டு அம்மா செயல்படுவது கண்டு புகைச்சல் கிளம்பியிருக்கிறது. குறிப்பாக, தினகரனுக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்காமல் ஓரங்கட்டி வைத்திருக்கிறார் ஜெ. இந்த நிலை நீடித்தால், பெரியகுளம் தொகுதியில் தனக்கு வாய்ப்பு கொடுக்கமாட்டார் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாராம் தினகரன். இந்த நிலையில், நடராஜன் சகோதரர் ராமச்சந்திரன் செல்வாக்கோடு உலா வருகிறாராம். கட்சி விவகாரங்களைப் பொறுத்தமட்டில், இனி சசிகலா உறவினர்கள் மூலம் டீல் பண்ணாமல் ஸீனியர் தலைவர்களைப் பயன்படுத்த முடிவு செய்திருக்கிறாராம் ஜெ. தேர்தல் வருகிறதே!

- ஸ்ரீநி



நம்மில் பலருக்கு நம்முடைய தோற்றம், குரல், உயரம், நிறம் பற்றி ஏகக் குறைகள் உண்டு. தன்னைக் கண்ணாடியில் பார்த்துத் திருப்தி யடைவதேயில்லை. நம்மால் மாற முடியாதா. அழ காகத் தெரிய மாட்டோமா என்றெல்லாம் கண்ணீர் விடாமல், இருக்கிற தோற்றத்தை வைத்தே பேரழகியாக/பேரழகனாக மாறலாம்... எப்படி...?

● இந்த உலகில் அத்தனை மனிதரும் ஒரே சாயலில், ஒரே நிறத்தில் இருந்தால் எப்படி இருக் கும்? 'போர்' என நீங்கள் ஓடுவது தெரிகிறது. ஒவ்வொருவருமே வித்தியாசமாகத் தெரிவதுதான் ஸ்பெஷாலிட்டி. யாருமே பர்ஃபெக்ட் கிடை யாது. பெரிய புகழ் பெற்ற நடிகர், நடிகைகள்கூட தங்களுடைய தோற்றத்தை, குறைகளை நினைத்து அழுவதுண்டு. ஆனால், அவர்கள் தங்களைக் கூட் டத்திலிருந்து தனிப்படுத்திக் காட்டிக் கொள்வதற் காக எவ்வளவு கடுமையாக உழைக்கிறார்கள். ஸோ, முதல் ஸ்டெப்பாக உங்களுடைய தோற் றத்தை அவமானப்படுத்தாதீர்கள்.

● உங்களைப் பிறருடன் ஒப்பிட்டுப் பார்க் கவே பார்க்காதீர்கள். தாழ்வு மனப்பான்மைக்கு ஒரு குட்பை சொல்லிவிட்டு, சுறுசுறுப்புக்கும் தன்னம்பிக்கைக்கும் பொக்கே கொடுத்து வெல் கம் சொல்லுங்கள்.

● எல்லோரிடமும் ஒரு ப்ளஸ் பாயிண்ட் இருக்கும். உங்களுடையது என்ன என்று கண்டு பிடித்து அதில் ஷைன் பண்ணப் பாருங்கள்.

● சிநேகமாகச் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங் கள். பர்ஸனாலிட்டி தானாக எகிறும். அழகான சிடுமூஞ்சி என்று யாரையாவது பார்த்திருக் கிறீர்களா?

● ரொட்டீன் வொர்க்கைத் தவிர்த்து ஏதா வது ஒன்றிரண்டு ஹாபி கண்டிப்பாக இருக்க வேண்டும். பாட்டு, டான்ஸ், தோட்டக் கலை, கராத்தே, நடிப்பு, சமூக சேவை என செய்யலாம். அட... நம்மாலும் பாட முடி கிறதே, ஆட முடிகிறதே என நீங்களே உங்களை வியந்து பாராட்ட ஆரம்பித்து விடுவீர்கள்.

● பிறரை எந்நேரமும் குஷிப் படுத்துவதுதான் என் கடமை என எப்போதும் தாஸானுதாஸனாக இருக்காதீர்கள். தன்னைச் சிறுமைப் படுத்திக் கொள்வதும் அழகல்ல!

● உங்களைப் பார்த்து எந்நேரமும் குறை சொல்பவர்களை, கமெண்ட் அடிப்பவர்களைக் கழட்டி விடுங் கள். பாஸிடிவ் எண்ணங்களைக் கொண்டு வருபவர்கள்தான் என் ஃப்ரெண்ட்ஸ் என 'கைப்புள்ள' ரேஞ்சுக்கு பந்தாவாகச் சொல்லி விடுங்கள். தவறில்லை!

● எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் நீங்களாக இருப்பதுதான் ரியல் அழகு. பிறருடைய சௌகர்யத்துக் காக நீங்கள் ஏன் வேண்டாத ஒரு முகமூடியை மாட்டிக்கொள்ள



உடையழகு... நடை பழகு..!



வேண்டும்? இதுதான் நான். நான் இப்படித் தானிருப்பேன் என ரியலாக இருங்கள்.

● அடிக்கடி உங்களுக்கே நீங்கள் ஏதாவது ரிவார்ட் கொடுத்துக்கொள்ளுங்கள். நல்ல பியூட்டி ட்ரீட்மெண்ட், ஹேர் மஸாஜ், ஹேர் ஸ்டைல் சேஞ்ச், புது ட்ரஸ், பெல்ட், ஹேண்ட்பேக்... இப்படி ஏதாவது புதிதாக வாங்கலாம்/செய்யலாம்.

● தன்னம்பிக்கையைக் குபீரென்று உயர்த்தும் இன்னொரு வேலை வாலண்டியர் பணி! உங்கள் ஏரியாவில், பள்ளிக்கூடங்களில், மைதானத்தில் ஏதேனும் பிரம்மாண்ட விழா, கச்சேரி, ஊர்வலம் என்றால் கபாலென்று பாட்ஜைக் குத்திக்கொண்டு வாலண்டியராகச் செயல்பட்டுப் பாருங்கள். இதில் வரும் சந்தோஷம் இருக்கிறதே அடடா... ஒரு ஹீரோ/ஹீரோயின் அளவுக்கு உங்கள் புகழ் பரவுவது உறுதி!

● ஐய்யோ, நாம அழகாயில்லையே, நிறம் கம்மியாயிருக்கே, குள்ளமாயிருக்கோமே... எனப் புலம்பிப் புலம்பியே வாழ்க்கையை வீணாக்க வேண்டுமா...

அழகாகலாம் வாங்க!

யோசியுங்கள்! உங்களை நீங்களே மதிக்கவில்லை என்றால் பிறரிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்? நான் அழகு, ஐயாம் க்ரேட் என படுகான்ஃபிடண்டாகச் செயல்படவும்.

● நாம் ஒவ்வொருவருமே ஒரு விதத்தில் ஸ்பெஷல்தான். இதில் குறை கண்டுபிடிக்கக் கூடாது. குறையை நிறையாகவும், பலவீனத்தைப் பலமாகவும் மாற்றலாமே!

● அழகு என்பது தோற்றத்தில் அல்ல, தன்னம்பிக்கையில்தான் என்ற ஃபார்முலாவை நம்புங்கள்!

- லதா சேகர்



பசி... ருசி...

அந்தக் காலத்தில், திருவாரூரிலிருந்து மாயவரம் செல்லும் ரயில் பயணிகள் பேரளம் ரயில் நிலையம் வருகிறதா என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஏன்? அந்த ஸ்டேஷன் ரயில்வே கேண்டீனின் மசால் வடையை ருசிக்கத்தான். ''பேரளம் ஸ்டேஷனை வண்டி நெருங்கும்போதே மசால் வடை வாசனை தூக்கும்'' என்று இப்போதும் நாக்கைச் சப்புக்கொட்டுகிறார் ஓய்வுபெற்ற தபால்துறை ஊழியர் சந்திரன்.

''நான் விஜயவாடாவில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, சாப்பாட்டுக்கென்றே ரயில்வே ஸ்டேஷன் கேண்டீனுக்கு வந்துவிடுவேன்'' என்கிறார் தனியார் துறையிலிருந்து ஓய்வு பெற்ற விஸ்வநாதன்.

காலப்போக்கில் சுகாதாரமின்றி தரமற்ற உணவுதான் ரயில்வே ஸ்டேஷனில் கிடைக்கும் என்ற நிலை உருவானது. ஓடும் ரயிலில் கொடுக்கப்படும் உணவு, ஆறிப்போய், வாயில் வைக்கக் கூட லாயக்கற்றதாக மாறிவிட்டது.

மக்களிடையே கடுமையான விமர்சனமும், எதிர்ப்பும் இருந்ததால், ரயில்வே நிர்வாகம் விழித்துக்கொண்டது. பயணிகளின் உணவு மற்றும், சுற்றுலாத் தேவைகளைக் கவனிக்க, 'இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா நிறுவனம் (IRCTC)' என்ற அமைப்பைத் துவங்கியது. 2001ல் இந்த நிறுவனம் அமைக்கப்பட்ட பின், உணவுத் தரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தனியார் துறையையும் இணைத்துச் செயல்படத் துவங்கியது ஐ.ஆர்.சி.டி.சி. ரயில்வே ஸ்டேஷனில் உணவகங்கள் நடத்தும் உரிமை தனியாருக்கு விடப்பட்டது.

தெற்கிலிருந்து வடக்கே போகும் வண்டிகளில், ஒப்பந்தம் எடுத்திருக்கும் வட பகுதியைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்கள், தென்னிந்திய உணவான இட்லி, வடை, பொங்கல் ஆகியவற்றை விற்பதில்லை; அப்படியே விற்றாலும் அவற்றின் தரம் படுமட்டம். ஸ்டேஷனில் உள்ள கேண்டீன்களில் பெரும்பாலும் இட்லி கிடைப்பதில்லை. தோசை, ஊத்தப்பம்தான் இருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். ஸ்டேஷனில் உள்ள பிஸ்கெட் ஸ்டால்களில், பிரபல நிறுவனங்களின் தரம்வாய்ந்த பிஸ்கெட்டுகள் கிடைப்பதில்லை. அதேசமயம் குளிர் பானங்கள், குடிக்கும் தண்ணீரைப் பொறுத்தமட்டில் பன்னாட்டு கம்பெனிகளின் தயாரிப்புகளே கிடைக்கின்றன. இந்த வகையில் சிறு உற்பத்தியாளர்களை ரயில்வே அலட்சியம் செய்கிறது. குளிர்பானங்கள், பிஸ்கெட் ஆகியவை பல ஸ்டால்களில் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. 'தனியார்த் துறையிடம் உணவுத் துறையை விட்டுவிட்டு, தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது ரயில்வே' என்று கண்டனக் குரல்கள் எழுகின்றன.



ஐ.ஆர்.சி.டி.சி..!

இது சாப்பாட்டுப் பிரச்னை!

''இந்திய ரயில்வே, 500 ரயில்கள் மற்றும் ஆறாயிரம் ஸ்டேஷன்களைக் கொண்டது. தினசரி லட்சக்கணக்கான மக்கள் பயணம் செய்யும் ரயில்களில் உணவுத் தேவையைத் திருப்தி செய்வது சாதாரண விஷயமல்ல. தனியார்த் துறையை இணைத்துச் செயல்பட்டாலும், தர விஷயத்தில் எந்தச் சமரசமும் கிடையாது. ஐ.ஆர்.சி.டி.சி.யே பல ஸ்டேஷன்களில் உணவகங்களை நடத்துகிறது. குறைந்த விலைக்குத் தரமான உணவு கொடுக்கிறோம்.

ரயில்வே ஸ்டேஷன் இடத்தை, குத்தகைக்கு வாங்கி தனியார் நடத்தும் உணவகங்களை நாங்கள் தொடர்ந்து கண்காணிக்கிறோம். அதிக விலைக்கு விற்றாலோ அல்லது தரம் மட்டமாக இருந்தாலோ, இரண்டு மூன்று எச்சரிக்கைகள் கொடுத்து, பின்னரும் திருந்தவில்லை என்றால் உரிமத்தை ரத்து செய்துவிடுகிறோம். முக்கிய ஸ்டேஷன்களில் கிச்சன் அமைக்கப் போகிறோம். ஸ்டேஷன் ஸ்டால்களில் பிஸ்கெட், சிப்ஸ், மற்றும் குளிர்பானங்கள் விற்க, உள்ளூர்த் தயாரிப்பாளர்களும் முயற்சி செய்யலாம். அவர்களின் தயாரிப்பை நன்கு ஆய்வு செய்தபிறகே, எங்கள் பட்டியலில் அவர்கள் பெயரைச் சேர்ப்போம். குடிதண்ணீர், இனி நாங்களே விநியோகிக்கப் போகிறோம். ஓடும் ரயிலிலேயே நவீன கிச்சன் அமைக்கும் திட்டமும் இருக்கிறது'' என்கிறார் ஐ.ஆர்.சி.டி.சி.யின் மண்டல இயக்குநரான ஸ்ரீராம்.

ரயில்வே இணையமைச்சர் வேலு, ''வடக்கே செல்லும் ரயில்களில் தென்னிந்திய உணவு தரமான வகையில் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், கடந்த சில நாட்களாக, முனைப்புடன் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடஇந்திய ஒப்பந்தக்காரர்கள், தங்கள் பணியாளர்களில் தென்னிந்திய சமையல் கலைஞர்களை நியமிக்கவேண்டும் என்றும் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறோம். அதிக விலைக்கு விற்பவர்களின் உரிமங்களை, ரத்து செய்வோம். இது ஒரு தொடர் கண்காணிப்பு. யாரும் தவறு செய்ய முடியாது'' என்கிறார்.



* இணையமைச்சர் வேலு

- ஸ்ரீநி



“அப்பாவுக்கு ஜே!” - கௌதம் வாசுதேவ் மேனன்



கௌதம் வாசுதேவ் மேனன் - சூர்யா - ஹாரிஸ் ஜெயராஜ். அதே காக்க...காக்க... கூட்டணி. 'வாரணம் ஆயிரம்' என்ற வாணவேடிக்கையோடு தீபாவளிக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். இயக்குநர் கௌதமுடன் பேசினோம்.

அதென்ன ஆண்டாளின் பக்தி இலக்கியத்திலிருந்து சினிமாவுக்கு டைட்டில்?

''அப்பா மலையாளம் என்றாலும் அம்மா தமிழ்தான். நான் வீட்டில் தமிழ் பேசி சென்னையில் வளர்ந்தவன். பள்ளிக்கூடத்தில் தமிழ் படிக்கவில்லை என்றாலும் தமிழ் ரொம்பப் பிடிக்கும். அதைக் காதல்னு கூடச் சொல்லலாம். அந்தப் பாதிப்புலதான் என் படங்களுக்குத் தமிழ் டைட்டில்களா வைக்கறேன். ஒரு பெண், எப்படிப்பட்ட ஓர் ஆணைக் காதலிக்க விரும்புவாள் என்கிற கோணத்துல டைட்டில் வைக்க விரும்பினேன். உடனே எனக்கு நினைவுக்கு வந்தது ஆண்டாளோட வரிகள்தான். கவிஞர் தாமரையுடன் கலந்தாலோசித்தேன். 'வாரணம் ஆயிரம் சூழன்னு'தான் முதல்ல யோசிச்சேன். அதைத்தான் 'வாரணம் ஆயிரம்'ன்னு சுருக்கிட்டேன். படத்துக்கு மட்டுமல்ல; கதாபாத்திரங்களுக்கும் தமிழ்ப் பெயர்தான்.

ஸ்கிரிப்ட் எழுதுகிறபோது முக்கிய கேரக்டர்களுக்கு என்ன பெயர் வைக்கிறதுன்னு மூணு, நாலு மணி நேரம் யோசிக்கிறேன். ஒரு மனிதனுக்கு மிக முக்கியமான அடையாளம் அவனோட பெயர்தான். ஐ லவ் நேம்ஸ். அதுவும் நல்ல தமிழ்ப் பெயர்களா இருக்கணும்னு நினைக்கிறேன். என் பட கேரக்டர்களுக்கு வைக்கும் பேர் எல்லாமே, என் பள்ளி, கல்லூரி நண்பர்கள், உறவினர்கள் என்று எனக்குத் தெரிந்தவர்களோட பேர்கள்தான்.''

கதைக்கு சூர்யாவா? சூர்யாவுக்குக் கதையா?

''இது சூர்யாவுக்காக உருவாக்கப்பட்ட கதைதான். வாழ்க்கையில் என் தந்தை எனக்கு ரொம்ப இன்ஸ்பிரேஷனாக இருந்தார். சின்ன வயசுல கிரிக்கெட் சொல்லிக் கொடுத்தது அவர்தான். வாலிப வயசுல ஒரு பெண்ணை விரும்பியபோது, 'வெளியில கண்டபடி சுத்தாதே! வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு

வந்து பேசு' என்று என்கரேஜ் செய்தவர். என் அப்பாவைப் பற்றி சூர்யாவிடம் பகிர்ந்துக்கிட்டபோது, அவர் தனக்கும், தன் அப்பாவுக்கும் இடையிலான விஷயங்கள் பற்றி நிறைய சொன்னார். என் நண்பர்கள் பலருடைய அனுபவங்களையும் தெரிஞ்சுக்கிட்டேன். அவை எல்லாவற்றையும் இணைத்து ஒரு ஸ்கிரிப்ட் எழுதினேன். ஸ்கிரிப்டைப் படிச்சதும், சூர்யா சில நிமிடங்கள் கண்ணை மூடிக்கிட்டு இருந்தார். 'இப்பவே என் அப்பாவை சில நிமிடங்கள் கட்டிப்பிடிக்கணும் போல இருக்கு' என்றார். சமீபத்துல ஃபிலிம்ஃபேர் விழாவில், சிவகுமாரைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டதைப் பார்த்திருப்பீங்களே!''

கௌதம் - ஹாரிஸ் ஜெயராஜ் காம்பினேஷன்ல பாட்டு எல்லாமே ஹிட்டாவதன் சீக்ரெட் என்ன?

''எனக்கும், ஹாரிஸுக்கும் உள்ள உறவு வெறும் டைரக்டர் - இசையமைப்பாளர் என்பதில்லை. நாங்க ரெண்டு பேரும் திக் ஃப்ரெண்ட்ஸ். படம் பண்ணாலும், பண்ணாவிட்டாலும் அடிக்கடி பார்த்துப்போம்; பேசுவோம்; இரண்டுபேர் குடும்பங்களிலேயும் எது ஒண்ணுன்னாலும் அங்கே இருப்போம். நான் படத்துக்கான கருவை முதலில் சொல்றதே ஹாரிஸ் கிட்டேதான். ஸ்கிரிப்டை டிஸ்கஸ் பண்ணறதும் அவர்கிட்டேதான். படத்தைப் பத்தி, கதை, கேரக்டர்கள், சிச்சுவேஷன்ஸ் என்று விரிவாப் பேசுவோம். அவர் எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்டு டியூன் போடுவார். இதுவரை அவர் போட்ட டியூன்கள் எதையுமே 'இது நல்லா வரலை; இன்னொரு டியூன் போடுங்க'ன்னு





நான் சொன்ன தில்லை. அவ்வளவு பெஸ்ட் டியூன்களா எனக்குக் கொடுத்திருக்கார்.''

உங்களோட ஒவ்வொரு படத்தின் போதும், புரொடியூசரோட பிரச்னை வருதே?

''டைரக்டர் என்ற முறையில் படம் சம்பந்தமாக நான் எதிலும் காம்ப்ரமைஸ் செய்துக்க மாட்டேன். ஆனால், தயாரிப் பாளர்கள் ஒரு லிமிட்டுக்கு மேல் செல வழிக்க மாட்டார்கள். ஆனால், படத்துக்காக ஒப்பந்தம் போடும்போது, பட்ஜெட் விஷ யத்தில் உடன்பாடு ஏற்படவில்லை என் றால், பட வாய்ப்பே கை நழுவிவிடுமே! எனவே, எப்படியாவது சமாளித்துக்கொள்ள லாம் என்று படத்தை ஒப்புக்கொண்டு விடு வேன். நினைத்தாற்போலவே, கடைசியில் சிக்கல் வரும். ஆனால், அந்த எக்ஸ்டிரா பட்ஜெட் பளுவை நான் புரொடியூசர் தலையில் ஏற்ற மாட்டேன்.

'காக்க காக்க' படத்தின்போது, இரண் டரை கோடி பட்ஜெட் படத்தை முடிப் பதற்கு, அதிகப்படியாக முப்பது லட்சம் வரை தேவைப்பட்டது. எனது சொந்த முயற்சியில் படத்தை முடித்தேன். தெலுங் கில் ரிலீஸானபோது, கிடைத்த கூடுதல் வருமானத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்தேன்.

முந்தைய 'பச்சைக்கிளி முத்துச் சரம்' படம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறாமல் போனதற்குக் காரணம் என்ன?

''படத்தில் சரத்குமாரை ஹீரோவாகப் போட்டதுதான் தவறு. அந்தக் கேரக்டருக்கு முதலில் சேரனையும், அப் புறம் மாதவனையும் கேட்டு, அவர்கள் நடிக்க முடியாமல் போகவே, சரத்குமாரை அணுகினேன். அவ ரும் ஒப்புக்கொண்டார். அவரது சாஃப்ட் கேரக்டரில் மிகை இல்லாமல் சிறப்பாக நடித்தார். ஆனால், சரத்குமார் என்ற பெரிய ஹீரோவைக் கட்டிப்போட்டு, வில் லன் அடிக்கும் ஸீன் அவரது ரசிகர்களிடம் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. அந்த ஸீன் எடுக்கும்போது சரத்கூட, 'இது மாதிரி யான ஸீன்களை என் ரசிகர்கள் ஜீரணிக்க மாட்டார்கள்' என்றார். ஆனால், நான் 'இது தான் கதை; இதுதான் ஸீன். அதை நான் மாற்றமாட்டேன்' என்று சொல்லிவிட்டேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.''

சின்ன பட்ஜெட் படங்கள் எடுக்க முடி யாதா?

''எப்படியோ அப்படி ஒரு கருத்து ஏற் பட்டு விட்டது. என் நண்பர்கள் சிலர்கூட, ஷங்கர் மாதிரி பெரிய பட்ஜெட் படங்கள் தான் உன்னால் பண்ண முடியும் என்று சொன்னபோது, 'அப்படி கிடையாது' என்று சொல்லி சுமார் நாலரை கோடியில் 'பச்சைக்கிளி முத்துச்சரம்' படத்தை எடுத் தேன். அடுத்து எடுக்கப் போகும் 'சென்னை யில் ஒரு மழைக்காலம்' புதுமுகங்கள் கொண்ட ஒரு சின்ன பட்ஜெட் படம் தான்.''

- எஸ்.சந்திரமௌலி



சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது



1304 பக்கங்களில் வியாச பாரதத்தின் சுருக்கம். 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள். பலரும் கேட்டிராத நுணுக்கமான தகவல்கள். பீஷ்மர் அருளிய பல உபயோகமான தகவல்கள். இவற்றுடன் முக்கிய இடங்களில் பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும், இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கும் விதம் புதுமையானது.

இரண்டு பாகங்கள் ரூ. 600/- 9 வருடங்களில் 9 பதிப்புகள்

வால்மீகி ராமாயணம்



வால்மீகி ராமாயணத்தை சுருக்கமாகவும், எளிமையாகவும் எழுதியுள்ளார். முக்கியமான இடங்களில் வால்மீகி ராமாயணம் - கம்ப ராமாயணம் மற்றும் துளசி ராமாயணங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இரண்டு பாகங்கள் ரூ.600/-

ஹிந்து மஹா சமுத்திரம்



யுகங்களின் கணக்கு, யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், மரணத்திற்குப் பின்..., யோக வாஸிஷ்டம், ஸூக்தங்கள், சட்ட தத்துவங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், நாரதர் பெற்ற உபதேசங்கள் - இப்படி ஏராளமான இந்து சமயத் தகவல்கள்.

பாகம் - 1 ரூ.200/- பாகம் - 2 ரூ.225/- பாகம்-3 ரூ. 175/-



நடிகர் சிவகுமார் தமிழகத்தின் சமூக, கலாச்சார, வரலாற்றுப் பதிவுகளைத் தன் டைரியிலிருந்து வழங்கியுள்ளார்.

விலை ரூ.300/-

டைரி 1946-1975



இப்படிக்கு சூர்யா

நடிகர் சூர்யா

விலை ரூ.250/-

இது ராஜபாட்டை அல்ல...

சிவகுமார்

விலை ரூ.220/-





எஸ். குருமூர்த்தி எழுதிய

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்

அரசியல், ஆன்மிகம், கலாச்சாரம், தொழில் முன்னேற்றம், மத நம்பிக்கை, மதப் பிரச்சினை, ஹிந்து மதத் தத்துவங்கள், ஜனநாயக தத்துவம், அரசியல்வாதிகள்... இப்படி ஏராளமான விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

(3 - பாகங்கள் - விலை ரூ.525/-)

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(ப.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com

வேலையாள்!

பகலுணவு முடிந்த கையோடு தூக்கம் கண்ணைச் சுற்றியது ஜானகிக்கு. சற்றுக் கண்ணயரலாம் என்று நினைத்து வாசற் கதவு தாழிடும்போது, வந்து நின்றாள் அந்தச் சிறுமி.

அவளுக்குப் பதினைந்து வயது இருக்கலாம். அவள் உடுத்தியிருந்த பாவாடை, சட்டையில் கிழிசல்களை மறைக்க நிறைய ஒட்டுத் தையல்கள்.

''யார் நீ? என்ன வேணும் உனக்கு?'' எனக் கேட்டாள் ஜானகி.

மலங்க மலங்க விழித்தவள், ''பெரியம்மா! அக்கம் பக்க வீடுகள்ல வேலை பார்க்கும் அன்னம்மாவோட பொண்ணு நான். என்னோட பேர் ராணி. கொஞ்ச நாளா எங்கம்மா கை கால் முடியாம வீட்டுலேயே முடங்கிக் கிடக்கறாங்க. வருமானமே இல்லை. ரொம்பக் கஷ்டமாயிருக்கு...'' என்று நிறுத்தி விசும்பினாள்.

''சரிம்மா! நான் என்ன உதவி செய்யணும்னு சொல்லு. என்னால முடிஞ்சதைக் கண்டிப்பாகச் செய்யறேன்.''

முந்தானையால் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டவள், ''உங்க வீட்டுல வேலை ஏதாவது இருந்தா கொடுங்க பெரியம்மா. வீடு கூட்டறேன்; துணி துவைக்கறேன்; பாத்திரம் தேய்க்கறேன்... அப்புறம் வெளிமார்க்கெட்டுக்குப் போய் காய்கறி வாங்கறது... கரண்ட் பில் கட்டுறது, எல்லா வேலையும் நானே பார்த்துக்கறேன். சம்பளம் எவ்வளவு கொடுத்தாலும் பரவாயில்லை.''

''அடி பைத்தியக்காரி! நீ சொல்ற எல்லா வேலையும் செய்ய இங்கே ஏற்கெனவே ஆளிருக்கு. என்ன அப்படிப் பார்க்கறே? நான்தான் அது. இந்த வீட்டு எஜமானனோட அம்மா. இதுக்காக, எனக்கு ரெண்டு வேளை டிஃபன் காப்பி, ஒருவேளை சாப்பாடு; அப்புறம் அப்பப்போ கைச்செல



வி.கே.லக்ஷ்மிநாராயணன்

வுக்குக் கொஞ்சம் பணமும் கிடைக்கறது.

இங்க நீ வேலைக்கு வந்துட்டேன்னு வெச்சுக்கோ. அப்புறம், எனக்குக் கல்தா தான். இந்த வயசான காலத்துல, வயிற்றுப் பாட்டுக்காக என்னால வெளியில போய் அல்லாட முடியாது. ஆனாலும், உன்னைப் பார்த்தால் பாவமாயிருக்கு. கொஞ்சம் இரு'' என்று கூறிவிட்டு, பர்ஸை எடுத்தாள். அதிலிருந்து ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து ராணியிடம் நீட்டினாள்.

''இந்தாடிம்மா! இந்தப் பணத்தை வாங்கிண்டு நடையைக் கட்டு.''

நோட்டையும், ஜானகியையும் மாறி மாறிப் பார்த்த ராணி என்ன நினைத்தாளோ, அந்த நோட்டை வாங்காமலே திரும்பி நடக்க, ஜானகிக்கு நெஞ்சு கனத்துப் போனது... ●





''எதிரி நாட்டு அரசன் படையோடு வர்றான்னு தெரிஞ்சும் மன்னர் புன்சிரிப்போடு இருக்காரே...?''

'' 'வடை'யோட வர்றான்னு புரிஞ்சுட்டார்.''

- தமாஷ்காரன்

''நீயா? நானா பார்த்துவிடலாம். வா என்று எதிரி மன்னர் அழைக்கிறார்..''

''அந்த ப்ரோக்ராம் நான் பார்ப்பதில்லை என்று ஓலை அனுப்பிச் சமாளியுங்கள் அமைச்சரே!''

- தமாஷ்காரன்



நடக்குமென்பார்; நடக்கும்!





மேஷம்: இந்த வாரம் கலக்கல் வாரம்தான்! உறவினர்கள் அனுகூலம் ஏற்பட்டு, திருமணம் கூடிவர, எடுத்த காரியம் வெற்றி பெற்றால் அதைவிட குஷி என்ன? ராகுவும் கேதுவும் கூடவே சனியும் சேர்ந்து, பாச மழை கொட்டறாங்க. அவங்களுக்கு தினமும் ஒரு சல்யூட் அடிச்சிட்டுக் கிளம்புங்க.

ரிஷபம்: மகான்களைச் சந்திக்கும் வாய்ப்பும் புண்ணியஸ்தலம் போகும் வாய்ப்பும் ஒன்றாக அமையும். வேலை மாற்றம் ஏற்படுவதால், வீடு மாறுதலும் தவிர்க்க முடியாது. அட! குறைந்தபட்சம் உறவினர் வீட்டிலாவது இருக்க வேண்டியிருக்கும் ஸ்வாமி!

மிதுனம்: எல்லா நேரத்திலும் நமது அறிவு நமக்கு சாதகமா இருக்காது. இந்த வாரம் சிவனேன்னு நான் உண்டு என் வேல உண்டுன்னு போயிக்கிட்டே இருங்கோ. வாக்கு வாதத்துக்கு ஒரு வாரம் தடா! எல்லாமே நன்மைக் குன்னு நெனச்சி, போய்க்கிட்டே இருங்க.





கடகம்: சில விஷயங்களில் கொஞ்சம் காம்ப்ரமைஸ் செய்து கொள்வது தவறல்ல. நமக்கும் நம்மைச் சுற்றி உள்ளவர்க்கும் பயன் என்றால், இந்த விட்டுக் கொடுத்தல் நல்லதுதானே! ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அம்மாதிரியான தருணம் உங்களுக்குச் சவாலாக வர இருக்கிறது. நல்ல செயலுக்குக் கடன் வாங்கிச் செலவழிப்பது நிகழும். கொஞ்சம் எதிர்ப்பும் குழப்பமும் இருக்கும். பரம்பொருளை நெனைச்சுக்கோ, பாரம் குறையும்.

சிம்மம்: மனம்போல் வாழ்வு என்பார்களே, அது உங்க விஷயத்தில நிஜம். பண வரவு கூடி, வாகன வசதி தோன்றும். வழக்கு வெற்றியும், வியாபார முன்னேற்றமும், இல்லறக் குதூகலமும் ஒண்ணா சேந்து வந்தா... வந்திடுச்சே... உங்களைக் கையில பிடிக்க முடியாது, ம்ம்... ஜமாய்ங்க!

கன்னி: இந்த வாரம் உங்களுக்கு ஃபிஃப்டி ஃபிஃப்டி வாரம். சொத்து பாகப் பிரிவினை நடக்கும் - பணம் வரும் - வந்தால்... தொல்லை பிடித்த கடன்காரன்களுக்கு செட்டில் பண்ணி நிம்மதியாவீங்க. இப்படித்தான் எல்லா விஷயத்திலும் 'வரும்; ஆனா வராது' மாதிரி. புரிஞ்சுக்கிட்டு இருப்பீங்க. ராகு, கேதுவை வழிபட்டு வாங்க, நல்லதா முடியும்.

துலாம்: ஏங்கிக் காத்திருந்த உத்யோக உயர்வு செய்தி ஒரு வழியா இந்த வாரம் ஊர்ஜிதமாகும். நீண்ட காலப் பிரச்னையும் முடிவுக்கு வரும். நண்பர்கள் உதவியோடு புதுவீடு போகப் போறீங்க. அம்மாவின் ஆரோக்கியம் மட்டும் கொஞ்சம் கெடும். மற்றபடி, இந்த வாரம் நார்மல் தாங்க.


விருச்சிகம்: கடல் கடந்த மனிதரால் ஒரு நல்ல அனுகூலமான சேதி உங்

தஞ்சை பரத்வாஜ்

19.10.2008 முதல் 25.10.2008 வரை

களைத் தேடி வந்து சந்தோஷப்படுத்தும். கூடவே திருமணச் செய்தியும் குஷிப்படுத்தும். கடன் சுமை குறைந்து வேலையில் இன்கிரிமென்ட் கூடும். இனி ஒரு பயலும் அசைக்க முடியாதுல்ல.

தனுசு: நான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்தான்னு அடம் பிடிச்சா கூட, இருக்கிற எல்லாரையும் விட்டு விலகி, தனியா நிற்பீங்க. ஜாக்கிரதை... விட்டுக் கொடுத்துப் போங்க. வேலைப்பளு அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. நைட் ஷிஃப்ட் டிரைவர் மாதிரி ரொம்ப விழிப்பா இருக்கணும்.



மகரம்: இல்லத்தில் உங்கள் அறிவுத் திறனைக் காட்டும் வாக்குவாதம் வேண்டாங்க. பண வரவு அதிகமாகும். வாகனங்களில் செல்லும்போது வேறு யோசனை வேண்டாம். மனக்குழப்பமும் உடல் நிலை பாதிப்பும் சேர்ந்தே இருக்கும். கொஞ்சம் சங்கடமான வாரந்தான். சனி பகவானைக் கும்பிடுங்க. துயரம் பனி போல விலகும்.

கும்பம்: கல்வி வளம் கூடி, வருவாய் தேடி, பகைவன் தொல்லை விலகி, நண்பர்களின் ஆதரவு பெருகி, உத்யோக உயர்வு வந்து, வழக்கு வெற்றி பெற்று, இல்லத்தில் சந்தோஷம் சேர்ந்து... இருப்பா... முற்றுப் புள்ளி இல்லாம, மூச்சு முட்ட எஸ்.பி.பி. பாடினா மாதிரி சொல்ல நெனைச்சேன், முடியல. தூள் கௌப்புங்க. அம்புட்டுதான்.

மீனம்: ஹலோ... ஒரு லாங் டூர் போய்ட்டு வர்ற வாய்ப்பிருக்கு. புதுசா பிஸினஸ் துவங்க நேரம் கூடி வந்திருக்கு. வழக்கு உங்களுக்குச் சாதகமா அமைஞ்சு, கடன் தொல்லை தீர்ந்து, இந்த வாரம் உங்க காட்டில சந்தோஷ மழைதான். 'குரு' வழிபாடு கோடி நன்மை. குரு வணக்கம் வெச்சிட்டு வழியைப் பாத்துக்கிட்டுப் போ.



அழகின் வடிவே...அருளின் வடிவே... 13

□ த.கி.நீலகண்டன் □

எமனுக்கு எமன்!

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒரு சில நியதிகளுக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இவற்றில் ஒரு நியதிதான் காலம் என்பது. உயிர்கள் பிறக்கிறதும் வாழ்கிறதும் மறைகிறதும் ஆகிய காலச் சுழற்சி என்கிற நியதி; இதை நிர்வகிக்க என்று ஒரு கடவுள். அவன் பெயர் எமதர்மன். மற்ற உயிர்கள் எல்லாம் இந்தக் காலச் சுழற்சியை மதித்து அடங்கி நடக்கையில், மனிதன் மட்டும் இந்த நியதியை மாற்ற பல முயற்சிகள் செய்து கொண்டேயிருக்கிறான். மரணத்துக்கும் மனிதனுக்கும் ஓயாத போராட்டம்! மனிதன் இதில் தோற்றுக்கொண்டே இருப்பதுதான் மானுடத்தின் வெற்றியும்கூட!

மரணத்தை வெல்வது என்பது என்ன? காலம் தனிமனிதனை மட்டுமல்ல; அவன் வாழ்ந்த சுவடுகளைக் கூட அழித்து விடுகிறது. தனிமனிதன் அழிந்துவிட்ட பிறகும் அவன் சுவடு அழியாமல் இருப்பதுதான் மரணத்தை வெல்வது!

மார்க்கண்டேயன் கதை உணர்த்தும் தத்துவம் இதுதான். காலத்தின் நியதிக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியை அவன் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டான். அந்தச் சக்தி அவன் பெயரை அழியாப்புகழ் கொண்டவர்கள் பட்டியலில் சேர்த்துவிட்டது. திருக்கடவூரில் உள்ள காலசம்ஹாரமூர்த்தியைத் தரிசிக்கும் பேறுபெற்றவர்கள், அதன் தத்துவத்தையும் உணர்ந்துகொண்டால் மரண பயம் அகலும்.

இந்தத் திருத்தலத்தில் உள்ள மூலமூர்த்திக்கு அமிர்தகடேசுவரர் என்ற திருநாமம். இறவாத் தன்மையைத் தேவர்களுக்குத் தந்த அமிர்தமே, இங்கு சிவலிங்க உருவில் காட்சியளிக்கிறது. உத்ஸவமூர்த்தியாக ஞான சபையில் எழுந்தருளியிருக்கும் திருமேனிக்கு அமிர்த மிருத்யுஞ்சயர் என்கிற திருநாமம். அருகில் உள்ள அம்பிகை, என்றும் மாறாத இளமையுடன் விளங்கும் பாலாம்பிகை. மார்க்கண்டேயனுக்காக சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, அவன் உயிரைப் பறிக்க வந்த எமதர்மராஜனை உதைத்துத் தள்ளியதால் அமிர்த



மிருத்யுஞ்சயர் (மரணத்தை ஜெயித்தவர்) என்கிற திருநாமம்.

பெருமான் காலனை சம்ஹாரம் செய்த கதை மிகப் பிரசித்தியான கதை. மானிட உலகுக்கு மிகப் பிடித்த கதை. இங்குள்ள பெருமானின் அருள் வேண்டி, நிறைவாழ்வு வாழ்ந்தவர்கள் சஷ்டியப்தபூர்த்தி, பீமரத சாந்தி, சதாபிஷேகம் என்று தம் வாழ்வின் வெற்றியைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

''அமிர்த மிருத்யுஞ்சயர்'' என்னும் கால சம்ஹார மூர்த்தியின் வடிவம், அழகும் கம்பீரமும் பொருந்திய அருட்கோலம். வலது திருப்பாதத்தை அழுத்தமாக ஊன்றி, இடதுகாலால் எமனை உதைத்துத் தள்ளி வீர நடனம் புரியும் கோலம். நான்கு திருக்கரங்களுள் இரண்டில் மழுவும் பாசக்கயிறும் ஏந்தியிருக்கிறார். வலக்கரத்தில் மழுவை ஓங்கி அடிக்கும் விதத்தில் ஏந்தியிருக்க, இடக்கரம் பாசக்கயிற்றை ஏந்தியிருக்கிறது. மார்க்கண்டேயனுக்கான பாசக்கயிறு எமன் கையில் என்றால், எமனுக்கான பாசக்கயிறு எம்பெருமான் கையில்! நீண்ட சூலத்தை எய்வதற்குத் தயாராக, கீழ்நோக்கிப் பிடித்திருக்கிறார். நான்காவது திருக்கரம், தன் காலடியில் தலைக்குப்புற வீழ்ந்து கிடக்கும் எமதர்மராஜனை சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. திருவடி நிலையின் வலதுபுறம் மார்க்கண்டேயன் கரம் கூப்பி நிற்கிறான். அவன் முகத்தில் இன்னும் முழுமையாகத் தெளியாத பயமும், நடந்து முடிந்த சம்பவத்தால் உண்டான அதிர்ச்சியும், கூடவே ஒரு நிம்மதியும் கலந்திருப்பது போல நமக்குத் தோன்றுகிறது. பெருமானின் காலடியில் வீழ்ந்து கிடக்கும் எமதர்மராஜன் முகத்தில் கலவரமும் அதிர்ச்சியும்! உயிர்களைத் தன் கால பாசத்தால் கட்டியிழுக்கும் எமனையே, ஒரு சிவபூதகணம் கயிறு கட்டி இழுக்கிறது. எமனுக்கு எமன்!

காலத்துக்கு அப்பாற்பட்டு விளங்குபவன், காலத்துக்குக் கட்டுப்பட்டு நின்றே அதை வென்றான்!

பெருமானின் இடது பாகம் பெருமாட்டியினுடையது என்று முன்பே பார்த்தோம். இங்கே எமதர்மனை உதைத்துத் தள்ளுவது இடது திருப்பாதமே! அது அம்பிகையின் பாதம். பக்தனான மார்க்கண்டேயனுக்கு அனுக்கிரகம் செய்யும் முனைப்பில் அம்பிகையின் பங்கே அதிகம் என்பதால், நிக்ரகத்தின்போது ஒதுங்கிக்கொள்ளும் இடது பாதம் அனுக்கிரகத்தின்போது முந்திக் கொள்கிறது. அதனால்தான் எமதர்மன் கூட ஒட்டுமொத்தமாக அழிந்துவிடாமல், மீண்டும் உயிர்பெற்றான். அவனிடமிருந்து பெருமான் பறிமுதல் செய்த காலதண்டத்தை அவனிடமே திருப்பி அளித்தார். சிவபக்தர்களின் உயிரைக் கவரும்போது மரணாவஸ்தையில் இருந்து விலக்கு அளிக்குமாறு ஆணையிட்டாராம். காலத்துக்கு அப்பாற்பட்டு விளங்குபவன், கால்த்துக்குக் கட்டுப்பட்டு நின்றே அதை வென்றான் என்பதே காலசம்ஹார வடிவத்தின் தத்துவம்!

(பெருகும்)

உதவுங்கள்... உதவுங்கள்... உதவும் கரங்களுக்கு....



Lakshmanan

உதவி செய்தேன்... உள்ளம் தெளிந்தேன்


எனக்கும், என் குடும்பத்தினருக்கும் சில மாதங்களுக்கு முன்பு பிரச்சினை ஏற்பட்டதால், நான் வீட்டில் இருந்து வெளியேறி தனியாக வசித்து வந்தேன். குடும்பத்தோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று என் மனதின் ஒரு ஓரத்தில் ஆசையும், ஏக்கமும் இருந்தது. ஆனால் விட்டுக் கொடுத்து சகித்துக் கொண்டு வாழ இயலாது என்று வறட்டு கவுரவத்துடன் தனியாக இருந்தேன்.

வாழ்க்கையில் சலிப்புடனும், வேதனையுடனும் இருந்த எனக்கு உதவும் கரங்கள் அமைப்பின் சேவைகள் பற்றித் தெரியவந்தது. ஆதரவற்றவர்களை அரவணைத்துக் கொள்ளும் அவர்களது ஈடு இணையற்ற சேவைகளை அறிந்து அங்கு போய் சேர்ந்தேன். என் மனம் தெளிவு அடைந்து அங்குள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்தேன்.

ஒவ்வொரு நாளும் எனக்கு ஒவ்வொரு புது அனுபவம் கிடைத்தது. ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காமல் மற்றவர்களுக்கு உதவத் தொடங்கினேன். அது மெல்ல, மெல்ல என் குணத்தை மாற்றியது. குடும்பத்தோடு சேர்ந்து வாழ வேண்டியது அவசியம் என்று எனக்கு உணர வைத்தது.

உதவும் கரங்கள் இல்லத்தில் இருந்த 2 மாதமும் நான் நிறைய பாடம் கற்றேன். நான் செய்த சேவைக்காக ஏராளமானவர்கள் என்னை வாழ்த்தினார்கள். சேவைக்கு முன் எதுவுமே சமம் ஆகாது. மற்றவர்களுக்கு உதவ, உதவ என் மனம் பக்குவப்பட்டுவிட்டது. தற்போது நான் குடும்பத்தோடு சேர்ந்துவிட்டேன். இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவரும் எப்படி வாழ வேண்டும் என்று எனக்கு வழிகாட்டியது உதவும் கரங்கள் இல்லம்தான். நீங்களும் ஒரு தடவை சேவை செய்து பாருங்கள், அந்த உன்னதத்தை புரிந்து கொள்வீர்கள்.

அன்னதானம் செய்யுங்கள்.. வாழ்வில் மகிழ்ச்சி கிடைக்கும்..



Veni Mahadevan

நானும் எனது கணவரும் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வருகிறோம். எங்களுக்கு இரண்டு மகன்கள். அவர்கள் இருவரும் திருமணமாகி அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். நாங்கள் மட்டும் தனியாக சென்னையில் இருக்கிறோம்.

சமீபத்தில் ஒரு நாள், என் கணவருக்கு கடுமையான மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவரைப் பரிசோதித்த டாக்டர், என் கணவருக்கு உடனடியாக இருதய அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று கூறினார். என் கணவருக்கு ஏற்கனவே வேறு சில உடல் நலப் பிரச்சினைகளும் இருந்தன. எனவே இருதய அறுவை சிகிச்சைக்குப் பிறகு என் கணவர் முழுமையாக குணம் அடைவார் என்று உறுதியாகச் சொல்ல இயலாது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். என்ன முடிவு எடுப்பது என்று குழப்பமாக இருந்தது

அந்த சமயத்தில் எங்கள் மனையில் அக்கறை உள்ள ஒருவர் என்னிடம் வந்து, "ஆதரவற்ற வயதான முதியவர்களுக்கு அன்னதானம் செய். எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என்றார். உடனே எனக்கு உதவும் கரங்கள் அமைப்பு தான் நினைவுக்கு வந்தது. மறுநாளே உதவும் கரங்கள் இல்லத்திற்குச் சென்றேன். அங்கிருந்த முதியவர்களுக்கு உணவு வழங்கினேன். அவர்கள் எனக்காக கண்ணீர் மல்க இறைவனிடம் கை ஏந்தி பிரார்த்தனை செய்தனர். அவர்களது பிரார்த்தனை வீண் போகவில்லை.

நான் அன்னதானம் கொடுத்த தினமே என் கணவரின் உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. மிகக் குறுகிய காலத்தில் அவரது இருதயக் கோளாறு சரியாகி விட்டது. இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்த அவர், உதவும் கரங்கள் இல்லத்துக்கு சென்று குழந்தைகளுக்கு உணவு வழங்கினார்.

கடவுளிடம் நாம் வைக்கும் உண்மையான பிரார்த்தனைக்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.

உதவும் கரங்கள்

440 என்.எஸ்.கே நகர், அரும்பாக்கம், சென்னை 600 106. தொலைபேசி எண்கள் : 26216321, 26260818, 99401 88011

உதவும் கரங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80 ஜியின் கீழ் வரி விலக்கு உண்டு

ஆகா... ஆலிஸ்

துள்ளிக் குதித்து ஓடும் அந்த முயலைப் பார்த்து ஆச்சரியத்தில் கண்களை விரித்தாள் ஆலிஸ். வெள்ளை முயல். கையில் கடிகாரம். 'ஐயோ லேட் ஆயிடுச்சே' என்றபடி ஒரு குழிக்குள் ஓடிச் சென்று மறைந்து போனது முயல். ஆச்சரியத்துடன் ஆலிஸ் அந்தக் குழியை நெருங்கினாள். குதித்து



தான் பாரேன் என்றது உள்மனம். குதித்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு புதிய உலகத்துக்குள் இழுத்துச் செல்லப்பட்டாள்.

ஒரு கதவு. அருகே சாவி. ஆனால், அந்தக் கதவு மிகவும் சிறியதாக இருந்ததால் ஆலிஸால் உள்ளே நுழைய முடியவில்லை. அப்போதுதான் அந்த பாட்டிலைப் பார்த்தாள் ஆலிஸ். 'என்னைக் குடி' என்று ஒரு குறிப்பு. எடுத்துக் குடித்தாள் ஆலிஸ். என்ன மாயம்! அந்த பாட்டில் அளவுக்குக் குட்டியாகச் சுருங்கிப் போனாள் ஆலிஸ். ஆனால், சாவி, மேஜையின் மீது இருக்கிறது. பொடிசாக இருக்கும் ஆலிஸால் சாவியை எப்படி எடுக்க முடியும்?

'என்னைச் சாப்பிடு' என்னும் குறிப்புடன் ஒரு கேக் மேஜையின் கீழே இருந்ததைக் கண்டாள் ஆலிஸ். அவளுக்குப் புரிந்துவிட்டது. 'சரி சரி, இதோ இந்த கேக்கைச் சாப்பிட்டால் வளர்ந்துவிடுவேன். பிறகு, சாவியால் கதவைத் திறந்துகொண்டு வெளியில் போய்விடலாம். என்ன மாய உலகமப்பா இது!' என்று வியந்தபடி கேக்கைக் கடித்தாள் ஆலிஸ். அவள் எதிர்பார்த்ததைப் போலவே அவள் உயரம் அதிகரித்தது. கூரையே தலையில் முட்டும் அளவுக்கு.

இது புத்தகத்தின் முதல் அத்தியாயம். மொத்தம் பன்னிரண்டு அத்தியாயங்கள். அடுக்கடுக்காகப் பல்வேறு அதிசயங்கள். நம்பமுடியாத திருப்பங்கள். முயல், சுண்டெலி, கம்பளிப்பூச்சி, பன்றி, ஆமை... என்று கலகலப்பான கதாபாத்திரங்கள். காற்றில் சிக்கிய இறகு போல் ஒவ்வொரு இடமாக மிதந்து மிதந்து செல்கிறாள் ஆலிஸ். சீட்டுக்கட்டு ராஜாவும் ராணியும் பேசுகிறார்கள்; சண்டை போடுகிறார்கள்; கத்துகிறார்கள். நீங்கள் யாரும் நிஜமானவர்கள் அல்லர். நீங்கள் வெறும் சீட்டுக்கட்டுதான் என்று ஆலிஸ் பதிலுக்குக் கத்துகிறாள்.

'ஆலிஸ் எழுந்திரு, உறங்கியது போதும்' என்று அவள் தங்கை எழுப்பும்போது, அவள் முகத்தில் சீட்டுக்கட்டுகள்.

ஆம்; இது ஒரு கனவு. குழந்தை இலக்கியத்தில் நிரந்தரமாகப் பதிந்துபோன கனவு. ஒரு சுவையான

கற்பனைக் கதை என்று நினைத்துதான் லூயிஸ் கரோல், ஆலிஸையும் மந்திர உலகத்தையும் உருவாக்கினார். ஒன்றல்ல; இரண்டு புத்தகங்கள். Alice in Wonderland மற்றும் Through the Looking Glass. தொடக்கத்தில் குழந்தைகளே இவற்றை அதிகம் வாசித்தார்கள். வெகு விரைவில், மற்றவர்களையும் ஆலிஸ் வசீகரித்தாள்.



* லூயிஸ் கரோல்





இயல்பை மீறி ஒரு பொருள் சிறியதாகவோ பெரியதாகவோ ஒருவருக்குத் தோற்றமளித்தால், அவருக்கு ஆலிஸ் கோளாறு என்கிறது மருத்துவம்.

1865ம் ஆண்டு இந்தப் புத்தகம் வெளிவந்தது. 1931ல் சீனா இதை தடைசெய்தது. அதற்கு அவர்கள் சொன்ன காரணம் இதுதான். அதெப்படி... ஆடும் கோழியும் பூனையும் முயலும் மனிதர்களும் விலங்குகளும் ஒன்றா?

1865ல் வெளியான பதிப்பில் எஞ்சியிருந்த ஒரு பிரதியை 1998ம் ஆண்டு ஏலம் விட்டார்கள். ஒன்றரை மில்லியன் அமெரிக்க டாலருக்கு விலை போனது. குழந்தை இலக்கியத்தில் இது ஒரு மைல்கல்!

ஜப்பான், அமெரிக்கா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் குழந்தைகளை உட்கார வைத்து, தேநீர், பிஸ்கட் கொடுத்து, ஆலிஸ் கதையைப் படித்துக் காட்டுகிறார்கள். குழந்தைகளின் கற்பனைவளம் பல மடங்கு பெருக, ஆலிஸ் அவசியம் என்று இவர்கள் கருதுகிறார்கள். ❑

அந்த மனிதர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலக எழுத்தர். ஒப்பந்தக்காரருக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருந்தது. எழுத்தர் இல்லாத போது கவர் ஒன்றினை மேசை டிராயருக்குள் வைத்துவிட்டுப் போய் விட்டார். டிராயரைத் திறந்த எழுத்தருக்குக் கடும் அதிர்ச்சி! கவருக்குள் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய். மறுநாள் காலை ஒப்பந்தக்காரர் முகவரிக்கு மணியார்டர் செய்துவிட்டார். கூடவே, கண்டனக் கடிதமும்... 'என்ன...? இந்தக் காலத்திலும் இப்படியா?' என்று யோசிக்க வைக்கிறதா? இது நடந்தது பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு!

அந்த எழுத்தர்தான் கருப்பூர் மாவடியான். குறிப்பிட்ட நிகழ்வுக்குப் பின்னர் பணியிலிருந்து விலகி, அவர் உருவாக்கிய காந்திய நல வாழ்வுச் சங்கம் எனப்படும் கவ்டெசி தொண்டு நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்.

''பதினாறு வயதிலேயே ஊரில் முப்பது இளைஞர்களை ஒன்றுபடுத்தி, முத்தமிழ் மன்றம் உருவாக்கினேன். அந்தக் காலத்தில் கருப்பூர் கட்டப்பஞ்சாயத்து என்றால் அத்தனை பிரபலம். கல்லூரி நாட்களில் கருப்பூர் மற்றும் சுற்று வட்டாரக் கிராமங்களில் பரவிக்கிடந்த கள்ளச் சாராயம், கட்டப்பஞ்சாயத்து மற்றும் தீண்டாமை போன்ற சமூக அவலங்களை எதிர்த்து மிகக் கடுமையாகப் போராடித் துரத்தியது எங்கள் முத்தமிழ் மன்றம். அன்று முப்பது நபர்களுடன் துவங்கிய முத்தமிழ் மன்றம், இன்று முப்பத்தெட்டாயிரம் உறுப்பினர்கள் கொண்ட காந்திய நல வாழ்வுச் சங்கமாக விரிவடைந்துள்ளது!'' என்கிறார் மாவடியான்.

''மூங்கில் கூடை முறம் பின்னுற குறவன் சமூக ஆளுங்க நாங்க. குடிப்பழக்கத்தையும் எங்களையும் பிரிக்கவே முடியாதுங்க. பதினைஞ்சு வருசத்துக்கு முன்னால கவ்டெசியில மெம்பரா சேர வந்தோம். அவங்களோட முதல் நிபந்தனையே குடிப்பழக்கத்தை விட்டுடணும் என்பதுதான். ஒத்துக்கிட்டு உறுப்பினர் ஆனோம். கவ்டெசியும் கடனுதவி பெற்றுத் தந்தது. சம்பாதிக்கற பணமெல்லாம் செலவு போக சேமிப்பு ஆனது. இப்ப எங்க சமூகத்து ஆளுங்க, பொருளாதாரத்துல உயர்ந்திருக்கோம்'' என்கிறார் மாதவன்.

* மாவடியான்



* தையல் பயிற்சியின்போது...





காந்திய நலவாழ்வுச் சங்க வளாகத்தின் உள்ளே கணிப்பொறி பயிற்சி மையம் இயங்கி வருகிறது. குறைந்த விலையில் பள்ளி நோட்டுகள் தயாரிக்கும் ரூலிங் அன்ட் பைண்டிங், பெண்களுக்கென இருபது தையல் மிஷின்களுடன் கூடிய தையல் பயிற்சி நிலையம், சுற்று வட்டாரக் கிராமப் பொதுமக்களுக்குப்



* கணினி மையம்...



* மாதவன்



* மாலா

பயன்படும் வகையில், பால் குளிரூட்டும் நிலையம் என... கவ்டெசி சார்ந்து, கருப்பூரைச் சுற்றியுள்ள சுமார் முன்னூறு கிராமப் பொதுமக்கள் இயங்கி வருகின்றனர்.

''பத்து வருஷத்துக்கு முன்னாடி நான் ஒரு சாதாரணத் தையல் தொழிலாளி. கவ்டெசியில ஆண்கள் சுய உதவிக் குழுவுல வந்து சேர்ந்தேன். இப்ப நான் நாலு தையல் மிஷின் போட்டு கருப்பூர்ல தையல் கடை வைச்சு நடத்தி வர்றேன்!'' என்கிறார் மகாலிங்கம். ''கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றத்தில் கவ்டெசியின் பங்கு மிக முக்கியமானது. அவரவர்க்கான வேலைத் திறன்களைக் கண்டறிந்து, அவற்றுக்கான கடன் உதவி பெற்றுத் தந்து எங்களுக்கான கலங்கரை விளக்காக வெளிச்சம் அளித்து வருகிறது கவ்டெசி'' என்கிறார் வெள்ளாம்பெரம்பூர் மாலா.

''காந்தி கிராமத்தில் முப்பது நாள் பயிற்சிக்காகச் சென்றிருந்தபோது அமெரிக்க டாக்டர் கெய்த்தான் என்பவரைச் சந்தித்தேன். காந்தியச் சிந்தனைத் தூண்டுதல் எனக்கு அப்போதுதான் ஏற்பட்டது. காந்தியப் பொருளாதாரத்தை வாழ்க்கையாகக் கொள்ளும் வல்லமைக்கு என் மனத்தை உட்படுத்திக் கொண்டேன். ஊருக்கு வந்து, கிராம சேவையினை மேலும் விரிவுபடுத்தினேன். கடந்த பதினாறு ஆண்டுகளில் காந்திய நலவாழ்வுச் சங்கத்தில் முப்பத்தெட்டாயிரம் உறுப்பினர்களின் மொத்த சேமிப்பு பதினாறரைக் கோடி ரூபாய். சுழல் முறைக் கடனாக அவர்கள் பெற்றிருப்பது நாற்பது கோடி ரூபாய்'' என்கிறார் மாவடியான்.

- புதியவன்

கருப்பூர் காந்தி

போட்டிக்கதை-10

பவுனு

''நீங்க பாட்டுக்கு ஒத்துக்கிட்டு வந்திருக்கீங்க? தலையை அடமானம் வைச்சா கல்யாணம் நடத்த முடியும்? அஞ்சு பவுன் எவ்வளவு ஆச்சு? அதுவும் இப்ப பவுன் விக்கற விலையில? விஷம் மாதிரி ஏறிக்கிட்டிருக்கு. மாப்பிள்ளைகிட்டே வேற ஜெயின்ல ஜம்பமா மோதிரம் ஆர்டர் கொடுத்துக்கச் சொல்லிட்டீங்க. கல்யாணம் வேற கொளஞ்சியப்பர் கோயில்ல. இதெல்லாம் நடக்கிற கதையா?'' அஞ்சலையின் அலறலில் விதிர்விதிர்த்துப் போனான் போஜன்.

''வீட்டுல நுழையறப்ப பேசாதன்னு எவ்வளவு தடவை மண்டையிலடிச்சுக்கறது?''

''அதுக்கென்ன இப்ப?''

''ஒண்ணும் கவலைப்படாதே. வேப்பூர் போய் என் சேத்தாளியைப் பார்த்துட்டு வர்றேன்''

''இது ஒண்ணுதான் தெரியும் உங்களுக்கு'' சற்றே இளக்காரமாகச் சொன்னாள் அஞ்சலை.

பெண்கள் உலகமே தனி என்ற ரீதியில் யோசித்த போஜன், இரண்டாவது நாளே, நண்பனின் யோசனைப்படி பொக்கிஷத்தோடு வந்து இறங்கினான்.

'கிர் கிர்'

'புர் புர்'

இந்த ஒலிகள் ஸ்வரமாய்க் கேட்டதும் என்னவோ ஏதோ என்று மெல்லிய பதைப்பில் கண்விழித்த அஞ்சலை, வீட்டுக் கொட்டகையில் போய்ப் பார்த்தாள்.

ஒரு காட்சி வெள்ளைவெளேரென்று. முயல்குட்டி வெள்ளைக்கும் கொஞ்சம் குறைவாய். செம்பஞ்சு இலேசாகக் கலந்துவிட்டாற்போல்.

எல்லாம் பன்றிக் குட்டிகள். விசித்திரமாய்ப் பார்க்க வந்த அஞ்சலை உட்பட எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து வைத்தான் போஜன்.

''காய்கறி மிச்ச சொச்சம், கழனித் தண்ணி, கஞ்சி எல்லாம் அள்ளிக்கிட்டு வாங்க'' என்றான் அவர்களைப் பார்த்து.

''எம் பவுனுங்க ஒரேயடியா காஞ்சு கிடக்கும். பட்டினியால சுருண்டுடப் போவுதுங்க'' என்றான் மீண்டும்.

அதே தெருவில் கொலுத்து வேலை செய்யும் மேஸ்திரியாக இருப்பவனிடம், சில கான்கிரீட் வேலைகள் சொல்லி வைத்திருந்தான்.

தரைமட்டத்திலிருந்து இறக்கமாய் உள்ளே படிக்கட்டுகள் போல வைத்து எட்டடிக்கு மூன்றடியாக செங்கல் வைத்து ஒரு தொட்டியாகக் கட்டினார்கள்.

அந்தத் தொட்டிக்குப் பத்தடி தள்ளி வேகவேகமாய் நான்கு முளை அடிக்கச் சொன்னான். பெரிதாய் ஒவ்வொரு முளைக்கும் இடையே ஆறு அடி இடைவெளி இருக்கும்படி பார்த்துக் கொண்டான். புரோக்கர் ஷெட்டில் வாங்கி வந்த லாரி டயரை வெட்டி அதன் உள்பக்கம் கவிந்து வரும்படி, முளைகளுக்கு இடையே கட்டி வைத்தான். இரண்டு உள்ளங்கைகளையும் குவித்தது போல் ஆயிற்று.

பெரிய தொட்டியில் முக்கால் திட்டத்துக்கு மரவள்ளிக்கிழங்கு மாவு கொட்டி நிரப்பி வைத்தார்கள்.

மரவள்ளி மாவும், கழனித் தண்ணீர்

எல்லாம் நீர்க்கக் கலந்து டயர் வாய்க் காலில் ஊற்றி வைத்ததும், அந்தப் பன்றிக் குட்டிகள் முட்டி மோதிக் கொண்டு குடித்தன. அதன் உச்சுக் கொட்டும் ஒலியே அவனுக்குச் சந்தோஷ சங்கீதம் ஆயிற்று.


அஞ்சலைக்கும் தன் பிள்ளைகள், பால் அருந்தியபின் நாவைச் சுழற்றி ருசி காட்டிய காலத்தை நினைவூட்டியது.

டயர் கால்வாயில் மாவு நீரை ஒன்றோ டொன்று முட்டி உறிஞ்சிக்கொண்டு அவனுடைய பவுனுகள் சுவைக்கும்போது ஏற்படுத்தும் இசையே, இப்போது வெகு பாந்தமாக அவன் குடிசையின் கூரைபோல ஆகிவிட்டது!

போஜன், கொஞ்சம் மாறித்தான் விட்டான். முன்பெல்லாம் அவனோ, பெண்ணோதான் அவனை எழுப்புவார்கள். இப்போதோ பன்றிக்குட்டியின் மீசை மயிர்க்கால்களில் குத்திட்டு நிற்கும் பான கம் பூவாளியில் இருந்து தெளிப்பது போல் போஜன் மேல் தெளிக்கும். அந்தச் சிலிர்ப் பில்தான் அவன் பொழுதே விடிகின்றது. ஒருநாள் அப்படித்தான் இருந்தாற் போலி ருந்தது. ''களவாணிப்பய புள்ளைங்க? மாவை லவுட்டிட்டிங்களாட்டம் இருக்கு?'' என்றான் திடீரென்று.

இது எப்படி அவனுக்குத்

பறியன்



தெரிந்தது என்று யோசிப்பதற்குள், தெறிக்கும் நீர்த்திவலையின் சுவைப்பிலேயே அதன் நீர்மைத் தன்மையைக் கண்டு பிடித்து விட்டான் என்று தெரிந்துவிட்டது.

''வெறும் தண்ணியைக் குடிச்சு எப்படி எம்பவுனுங்க புஷ்டியாகும்?'' என்று இரையத் தொடங்கிவிட்டான்.

இதில்லாமல், அவை உஷ்ணம் தாங்காது என்று மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் என்று தண்ணீர் ஊற்றச் செய்வான்.

சித்திரை வெய்யில் ஓய்ந்து விட்டது. வைகாசி மேகம் திரள ஆரம்பித்துவிட்டது. காற்றும் ஈரப்பதமாய் வீச ஆரம்பித்தது. அந்த வெண் குட்டிகள் இப்போதெல்லாம் எப்போதாவது சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. ஆறு மாத போஷாக்கில் விளைச்சல் கண்ட நிலம் போலத் திரண்டு நின்றன.

காரில் இரண்டு பேர் இறங்கி வந்து பண்ணையை நோட்டம் விட்டவர்களாக திருப்தியைத் தெரிவித்தார்கள். ''ஒரு இருபது வைச்சுக்குங்க'' என்று முன் பணமாய்க் கொடுத்தனர்.

இன்னும் இரண்டு வாரத்தில் அந்தப் பன்றிகள் எல்லாம் விற்பனைக்குப் போய் விடும். வேலையும் அலைச்சலும் சந்தோஷமுமாய் இருந்த நாட்கள் காணாமல் போய்விடும். ஆனால், அவற்றை வைத்துத்தான் வாழைத் தோரணமே கட்ட வேண்டும்.

இப்போது வேறு வழியுமில்லை.

திடீரென்று ஒருநாள் காலை வெயில் சுணக்கமான வேளையில், முனிசிபல் லாரி வந்து நின்றது. அதிலிருந்து ஆட்கள் விதவிதமாகக் குதித்தார்கள்.

''மூளைக்காய்ச்சல் இந்தப் பன்றிகளால் தான் ஆரம்பிக்குதுங்க; இதுங்கதான் பரப்புதுங்க!'' - சுகாதார இன்ஸ்பெக்டர் சொன்னார்.

லாரியின் பின் கதவை இறக்கி விட்டனர். சாய்மானமாகப் பலகையை வைத்தனர். வந்தவர்கள் 'உஸ் உஸ்' என்று விரட்டலும் வீச்சுமாய் வேகம் காட்டினர்.

போஜன் ஆக்ரோஷம் கொண்டவனாய்க்



கத்தினான். இரும்புப் பூண் போட்ட உலக்கையை எடுத்துக் கொண்டு, அவற்றை அடித்துக் கொன்று போட்டு விடலாமா என்று ஓடினான். 'இதுங்களாலதானே பிரச்னை? யாருக்கும் வேணாம்னு தொலையட்டும்' என்று ஓடிய வேகத்தில் விழுந்தும் விட்டான்.

அவன் மேல் திட்டுத் திட்டாக படிந்திருந்த மரவள்ளி மாவினை அவை நாவினால் துடைத்து விழுங்கின.

பன்றிகளே வெள்ளந்தியாய் ஏறி லாரியின் உள்ளே அடைந்துகொண்டன.

கேள்விப்பட்டு ஓடிவந்த அவன் பையன், ''ஸார்... நாங்க ஸ்குரோஃபாங்கிற ஐரோப்பிய வகை வளர்க்கிறோம் ஸார். இதுக்கும் காய்ச்சலுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பேச்சு வழக்கில் யார்க்ஷயர்னு

தூறல் கவிதைகள்

காதல் கிறுக்குகள்

● படிக்கும் பருவத்தில்
காதலித்தவளை
பல வருடம் கழித்து
பார்த்தபோது
இருவரும் கவனமாக
குழந்தைகளின் பெயர்
என்ன என்று கேட்பதைத்
தவிர்த்தோம்...
நாங்கள் எதிர்பார்க்கும்
பெயர் அல்லாமல்
வேறு பெயராக இருந்தால்
தாங்கிக் கொள்ள
முடியாதே என்று...!
கிறுக்குத்தனமாகத் தெரிகிறதா...?
அப்படியாயின்... நீ
காதலித்திருக்க மாட்டாய்
அல்லது தோற்றிருக்க மாட்டாய்!

– திருமாளம் புவனா நித்திஷ்

● என்னை
சிலகணங்கள்
அசைத்து
உன்னை
அடையாளப்படுத்திக்
கொள்வதைத் தவிர
ஒன்றும்
செய்ய இயலாது.
காயம்பட்ட
என்னை
தென்னங்கீற்றை
மோதும்
காற்று போலவே நீ...

– ஷோபா கிரிதரன்

பேர் சொல்லுவாங்க'' என்றான்.

''வியாதியப் பரப்பறது விட்டாட்டஸ் என்று சொல்லப்படற ஜாதி'' என்றான் போஜனின் பையன். கல்லூரிப் படிப்பில் காலடி எடுத்து வைத்தவன், சுற்றிலும் நடப்பதைப் பற்றியும் தெரிந்து வைத்திருந் தான்.

''வேணும்னா ஒண்ணு பண்றோம்பா. ஒரு மூணு மணி நேரம் அப்படியே வெச் சிருக்கோம். எங்க ஆஃபீஸர்கிட்ட வேணும்னா பேசிப்பாரு. அவரு ஒத்துப் பார்னா அப்படியே விட்டுடறோம்'' என் றார்கள்.

''ஐயோ! எல்லாம் போச்சே... என் பொண்ணு கல்யாணம்... பவுனுங்க எல்லாம் பாழாய்ப் போச்சே'' என்று தலையிலும் நெஞ்சிலும் அடித்துக்கொண்டான் போஜன்.

குலுங்கிக் கொண்டிருந்த பூகம்பத்தின் ரிக்டர் அளவு தெரியாதவர்களாக அம்மா வும், பெண்ணும் நகைக்கடையில் ரகம் தேர்வு செய்து கொண்டிருந்தார்கள். சேதாரம் அளவு குறைக்கச் சொல்லி பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாவட்ட ஆட்சியர் தலைமையிலோ விஷக்காய்ச்சல் தடுப்புக்காகப் பிடிக்கப் பட்ட பன்றிகளை, சுகாதார அதிகாரி கைத் தட்டல்களின் அரவணைப்பில் பட்டிய விட்டுக் கொண்டிருந்தார்.

போஜன் தன்னுடைய பன்றிகள் எழுப்பும் 'ரூகரூக' ஒலி கேட்கும் என்று வழி பார்த்திருந்தான். அவன் மகளோ கல் யாணத்துக்காகக் காத்திருந்தாள். ❑

''காலனி லேடீஸ் கிளப் மீட். நீ கண்டிப்பாக அட்டெண்ட் பண்ணணும்.'' வற்புறுத்தி அழைத்தாள் ரம்யா. ''சரி'' என்று கிளம்பினாள் அருணா. மீட்டிங்கில் கிரிஜா உடல் எடை மற்றும் யோகா பற்றிப் பேசியது அருணாவைக் கட்டிப்போட்டது. அறு பத்தைந்து வயதான அவரை நாற் பத்தைந்து என்றுதான் சொல்ல முடியும். முகத்தில் அவ்வளவு இளமை. கொடி இடை. உருவி விட்டாற்போல் உடல் வாகு.

அருணா முடிவு செய்துவிட்டாள், நல்ல யோகா டீச்சரைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று. ஆய்ந்து ஓய்ந்து வந்த ஹரியிடம் சொன்னாள். அசதியில் வந்த அவன், ''உனக்கு வேற வேலையில்லை, எல்லாத்துலயும் காலை வைச்சுட்டுப் பாதியில நிறுத்திட்டு, அடுத்ததுக்கு ப்ளான் பண்ணுவே'' என்று கடித்துக் குதறினான்.

ஆனாலும் விடாது தேடி... ஒரு வழியாக யோகா வகுப்பில் சேர்ந்தாள் அருணா. முதலில் உடல் வலித்தது. 'நோ பெயின் நோ கெயின்' என்று மிரட்டி, கிட்டத்தட்ட குச்சி வைத்து அடிக்காத குறையாகச் சொல்லித் தந்தாள் டீச்சர்.

காலை ஒரு மணி நேரம் வாக். ஸ்பூனில் சாதம். தட்டு நிறைய காய்கறி. ஸ்நாக்ஸுக்கு பழம் என்று சீரான டயட் தொடர்ந்தது. பழம், காய் வகைகளால் பர்ஸ் பழுத்தது உண்மைதான். ஆனாலும் ஆரோக்கியம் கிடைத்தது. டாக்டர் ஃபீஸில் அது ஈடுகட்டப்பட்டது.

சொல்லிக் கொடுத்த ஆசனங்களை அழகாக வீட்டிலும் செய்து வந்தாள் அருணா. முதல் இரண்டு மாதங்கள் பெரிய அளவில் மாற்றம் இல்லை. மூன்றாவது மாதம் வாவ்... என்ன ஆச்சரியம்... ஐந்து கிலோ குறைந்திருந்தாள். அவள் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை.

பதஞ்சலி முனிவர் முதல் பல்வேறு முனிவர்களும் மூளையைக் கசக்கி மனிதனின் உடல் நலம் காக்கக் கண்டுபிடித்து



50 Kg தாஜ்மஹால்!

13 லக்ஷ்மி மோகன்

கொழுப்பு பள பள

வைத்த ஆசனங்களை அமெரிக்கா, ஆஸ்திரேலியாவிலிருந்து எல்லாம் வந்து கற்றுக்கொள்கிறார்கள். அங்கு சென்று வகுப்பு எடுக்கிறார்கள். பரப்பி எல்லோரும் பலனடைகிறார்கள்.

யோகாவின் மகத்துவத்தைச் சொல்லக்கூட நமக்கு ஒரு நடிகை தேவைப்படுகிறார்.



சரி, யோகாவினால் உடல் எடை குறையுமா? கண்டிப்பாக. யோகா பயில்வதால் ஆழ்ந்த சுவாசம் கிடைக்கிறது. மனம் நிம்மதி பெறுகிறது. முதுகெலும்பு, இதயம், அடிவயிறு ஆகியவை பலம் பெறுகின்றன. தொடர்ந்து செய்து வரும்போது எண்டோக்ரேன் எனும் சுரப்பி தூண்டப்படுகிறது. இதனால் கொழுப்பு கரைய ஆரம்பிக்கிறது.


எடை குறைப்பு மட்டுமல்ல. பிராணாயாமம் செய்வதன் மூலம் பத்தடி நடந்தாலோ மாடி ஏறினாலோ ஏற்படும் மூச்சுத் திணறல் கண்டிப்பாகக் குறைகிறது. உடலில் ஏற்கனவே இருக்கும் பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வாக யோகா இருக்கும்.

முக்கியமாக, யோகா செய்ய வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம். ஒரு சிறியரூமும், யோகா மேட்டும்(பாய்) போதும். வேறு எந்த சாதனமும் வேண்டாம். மழையோ, வெயிலோ காரணமாய் இருக்காது. ஆனால், கண்டிப்பாக சி.டி.க்களையும் புத்தகத்தையும் பார்த்து தானாக யோகா செய்யக்கூடாது. ஒரு நல்ல குருவிடம், குறைந்தது ஒரு வருடமாவது கற்றுக்கொண்டு பிறகு வீட்டிலேயே செய்யலாம்.

சிலர் நன்கு சாப்பிடுவார்கள். அதேசமயம் உடற்பயிற்சியும் செய்வார்கள். போலார் கரடிகள் நன்கு கொழுக்மொழுக் என்று இருக்கும். எல்லோருக்கும் தெரிந்ததே. பனிப்பொழிவு காலத்தில் இவைகளுக்குச் சாப்பிடக் கிடைக்காது. கிட்டத்தட்ட மாதக்கணக்கில் பட்டினி கிடக்க நேரிடும். அப்போது

அவை எப்படி உயிர் வாழ்கின்றன? அவற்றின் உடலில் உள்ள கொழுப்பு தான் இங்கு கை கொடுக்கிறது. அதுபோல்தான் ஓ.பி.ஸி.டி.க்காரர்கள் கொழுப்புணவைத் தவிர்த்து யோகா செய்து வரும்போது, ஏற்கனவே படிந்துள்ள கொழுப்பு எரிசக்தியாக மாற்றப் பட்டு எரிக்கப்படுகிறது. இதனால் பலன் தெரிய ஆரம்பிக்கிறது.

மிகவும் பசிக்கும்போது ஒரு கப் காய்கறி சாலட்டோ, முளை கட்டிய தானியமோ எடுத்துக்கொள்ளலாம். தட்டு நிறைய சாதம் போட்டுக் கொண்டு சாப்பிட்டால்தான் சாப்பிட் டாற் போலிருக்கும் என்பது, தலை முறை தலைமுறையாக நமக்கு





சொல்லிக் கொடுக்கப்பட்ட ஒன்று.

யோகா பயில்வதால் கொழுப்பு போய்ட்டு வர்றேன்னு பறக்க ஆரம்பிச் சுடும்; உடல் நல்ல வடிவம் பெறுவது கண்கூடு. யோகா மட்டுமே இதயம், சிறு நீரகம், கல்லீரல், நுரையீரல் என உடலின் அனைத்து உள் உறுப்புகளின் நலனுக்கும் உத்தரவாதம் அளிக்கிறது. தைராய்டு போன்ற ஹார்மோன் பிரச் னைக்கும் தீர்வளிக்கிறது.

எங்கே கிளம்பிட்டீங்க? யோகா கிளாஸ் விசாரிக்கவா? வாக்கிங் ஷூ வாங்கவா? எனி வே 50 கே.ஜி. தாஜ்மஹாலா மாறப்போகும் உங் களுக்கு ஆல் தி பெஸ்ட்!

(முற்றும்)



ராஜா சந்திரசேகர் கவிதைகள்

- நதி பற்றிய கவிதையை
நான் எழுதியபோது
அருகில் வந்த மகள்
வரைந்த நதியைக் காட்டினாள்
தாளில் ஓடியது
பென்சில் நதி
என் கவிதையை
அதில் கரைத்துவிட்டு
மறுபடி பார்க்க
இன்னும் முடியவில்லை
எனச் சொல்லியபடியே
ஓடிய அவள்
கண்களில் மீதி நதி

- பிரசாதம் வாங்கிய
சிறுவனிடம்
கும்பிட்ட சாமியின்
பெயர் தெரியுமா கேட்டேன்
'எனக்குப் பசிக்குது சாமி!'
சொல்லியபடியே ஓடினான்

- வந்து பார்க்காத
கடிதம் போடாத
மகனுக்கு
தந்தை எழுதினார்
'ஊர் பக்கத்தில்
இருக்கிறது
நீதான் தொலைவாக
இருக்கிறாய்.'

- பார்த்த வானவில்
அடுப்புக் கறியில்
வரையும் சிறுமி!



கண்ணுக்குள்

புதுமைப் பெண்ணுக்கு வெகு முன்னாடியே தோன்றியது ஈல் மீன். தொட்டால் எக்கச்சக்கமாக ஷாக் அடிக்கும். கொஞ்ச நஞ்சமில்லை; அறுநூறு வோல்ட். நெருங்கி வந்தவர்களை உடனடியாக வைகுந்த பதவி அடைய வைக்கும் ஹை வோல்டேஜ் மின்சாரத்தை, ஈலுக்குத் தருவது இயற்கை அன்னை. ஈல் மீனுடைய உடலின் மூல ஆதாரமான, நுண்ணிய செல்களில் உற்பத்தியாவது இந்த மின்சாரம்.

எலக்ட்ரோஸைட் என்ற இப்படியான சிறப்பு செல்கள், ஈல் மீனின் உடலில் ஆயிரக்கணக்கில் உண்டு. தான் போகும் பாதையில் ஆபத்து என்று உணர்ந்ததுமே, ரசாயன சமிக்ஞை ஒன்றை ஈல் மீனின் உடம்பு பிறப்பிக்கும். உடனே ஒரு சில எலக்ட்ரோஸைட் செல்களின் சவ்வுப் பரப்பில் அமைந்த நுணுக்கமான வாய்க்கால்கள் திறக்கப்படும். சோடியம் அணுத் துகள்கள் வெளியே பயணமாக, பொட்டாசியம் துகள்கள் வாய்க்கால் வழி பாய்ந்து உள்ளே வரும். இந்த எதிரெதிர் திசைப் பயணங்களால் உருவாவதே மின் சக்தி.

இப்படிப் பிறக்கும் மின்சாரம் அடுத்தடுத்து அமைந்த மற்ற எலக்ட்ரோஸைட் செல்களில் இன்னும் அதிகம் வாய்க்கால்களைத் திறக்க, மின் சக்தியின் அளவும் அழுத்தமும் அதிகரிக்கின்றன.

ஈல் மீனின் எலக்ட்ரோஸைட் செல்களில் குறைந்தது ஏழு விதமான வாய்க்கால்கள் உள்ளன. இவை மின் உற்பத்தியைச் சக்தி வாய்ந்ததாக, நீண்ட நேரம் நிலைத்திருக்கும்படி உருவாக்க உதவுவதால், பவர் கட் போன்ற பிரச்னைக்கே இடமில்லை. மீனின் எலக்ட்ரோஸைட்களை ஆராய்ந்த அறிவியல் வல்லுனர்களின் மூளையில், பல்ப் போட்டது போல் ஒரு யோசனை. மனித உடம்பில் இப்படியான செல்களை உருவாக்கினால் என்ன? உடலுக்குள் பதித்த சின்னஞ்சிறு நானோ கருவிகளைச் சீராக இயக்க செல் மின்சாரம் உதவுமே!

நானோ கருவிகள், உடல் உறுப்புகளின் பணியை நேர்த்தியாகச் செய்யக்கூடியவை. உதாரணமாக, நானோ விழித்திரை (Nano retina). நம்முடைய கண்

டிஜிட்டல் கேண்டீன்


கரெண்ட்!

எப்படிப் பார்க்கிறது? நம் எதிரில் தட்டுப்படும் எந்த உருவத்திலிருந்தும் சிதறும் ஒளியானது, நம் விழிப்படலத்தில் புகுந்து, விழித்திரையில் பிம்பமாகப் படிகிறது. விழித்திரையில் அமைந்திருப்பவை ராடுகள் மற்றும் கோன்கள் என்ற லட்சக்கணக்கான செல்கள். இந்த இரண்டு வகை செல்கள் ஏற்று வாங்கிய பிம்பம், அதே விழித்திரையில் உள்ள காங்க்லியன் செல்கள் மூலம் தகவலாக உருமாறுகிறது. பார்வை நரம்புகள் மூலம் அந்தத் தகவல் மூளைக்குப் போய்ச் சேர்கிறது. அதை அலசி ஆராய்ந்த மூளை, நம் கண் முன்னால் பார்ப்பது திருப்பதிக் குடையா அல்லது த்ரிஷாவா என்று உடனே புரிய வைக்கிறது.

செயற்கை விழித் திரை என்பது சிலிக்கன் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு மைக்ரோ சில்லுதான். இதில் உள்ள கிட்டத்தட்ட 3500 செல்கள் எதிரிலுள்ள பொருட்களில் இருந்து சிதறும் ஒளியை வாங்கி, தகவலாக்கும் பணியைச் சிறப்பாகச் செய்கின்றன. பாதிக்கப்பட்ட விழியின் வெண்பரப்பில் ஊசிமுனை அளவுக்குக் கீறி அறுவை சிகிச்சை நடக்கும்.

எல்லா மைக்ரோ சில்லையும் போல், இந்த சிலிக்கன் விழித்திரை இயங்கவும் கொஞ்சம் போல் மின்சாரம் தேவை. தூங்காத நேரம் எல்லாம் பார்க்க வேண்டியிருப்பதால், செயற்கை விழித்திரைக்கு எந்தத் தடையும் இல்லாமல் தொடர்ந்து மின்சாரம் வேண்டியிருக்கும். கண்ணுக்குள் கரண்ட் வைப்பது எப்படி?

ஏற்கனவே பார்த்த ஈல் மீன் பற்றிய ஆராய்ச்சியின் பயனாக, அண்மையில் செயற்கை எலக்ட்ரோஸைட் செல்லை உருவாக்கியிருக்கிறார்கள். மீனின் உடலில் உள்ள இயற்கை செல்லைவிட, நாற்பது சதவிகிதம் அதிகம் மின்சக்தி உற்பத்தி செய்யக்கூடிய விதத்தில் இதில் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படியான



செல்களை வரிசையாக அடுக்கிய தொகுதிக்குப் பெயர் பயோ பேட்டரி (Bio battery). ஒரு பயோபேட்டரி முன்னூறு மைக்ரோவாட் மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கக்கூடியது. நானோ கருவியை இயக்கத் தேவையான மின்சக்தி இவ்வளவே.

ஆற்காட்டார் தயவின்றி ஆயுசு முழுவதும் மின்சாரம் கிடைக்க, சிலிக்கன் விழித்திரையோடு பயோபேட்டரியையும் உடம்பில் பொருத்திவிட்டால் போதும். தீர்க்கதரிசனம் வாய்ந்த கூட்டணி வெற்றிகரமாகச் செயல்பட ஆரம்பித்து விடும்.


(முற்றும்)

இரா. முருகன்

Empee Institute of Hotel Management and Catering Technology-யின் பக்கம் எம்பி எம்பி நாம் சென்றபோது, தீபாவளிக்கென புதுசுபுதுசா என்னென்ன பலகாரங்கள் செய்யலாம் என்ற சுவாரஸ்யமான பேச்சில் ஈடுபட்டிருந்தார்கள்...

''சூப்பரா ஒரு தீபாவளி ரெஸிப்பியோட ஆரம்பியுங்களேன்'' என்றதும், நளபாகச் சக்ரவர்த்திகளிடம், 'நான் நீ' என ஏகப்பட்ட போட்டி. ''சரி... சரி... நானே சொல்லிடறேன்'' என ஆரம்பித்தார் சாய்ராம். ''இது ரொம்ப ஈஸியா செய்யக்கூடிய அல்வா. கவனமா எல்லோரும் குறிச்சு வெச்சுக்குங்க. முதல்ல கோதுமை மாவு 2 கப் எடுத்துக்குங்க. அடுப்பைப் பத்த வைச்சு அதுல ஒரு கடாயை வெச்சு, கோதுமை மாவைப் போட்டு நன்றாக வதக்கி தண்ணீர் ஊற்றிக் கிண்டவும். அது கொஞ்சம் கெட்டியானதும், நெய், ஒண்ணரை கப் சர்க்கரை சேர்த்துக் கிண்டவும். பின் திராட்சை, ஏலக்காய், முந்திரி சேர்த்து அடுப்பி







கோந்து கோயிந்தசாமி!

விருந்து மெல்ல இறக்கிவிட்டு வாயில் போடவும். வாயில் ஒட்டிக்கிட்டா கோந்து: ஒட்டலேன்னா அல்வா. எப்படி ரெஸிப்பீ?'' என்று சொன்னவரை, ''ஏய், அந்த கோந்து கோயிந்தசாமி நீதானா?'' என்று ஜோயல் ஜோஷுவா வார்த்தைகளில் ஜாம் தடவினார்.

''அவங்க கிடக்கறாங்க. நீங்க கண்டுக் காதீங்க. இந்த அசத்தல் மன்னனின் கதையைக் கேட்டீங்கன்னா அசந்துடுவீங்க!'' என்று ஆரம்பித்தார் மோகன். ''அது பிராக்டிக்கல் எக்ஸாம். தேங்காய் பர்பி செய்யச் சொல்லி எனக்கு மெனு வந்தது. நான் எக்ஸாம் ஜுரத்துல தேங்காயை நல்லா வறுவறுன்னு வறுத்துத்

தீச்சுட்டேன். மாஸ்டர் பார்த்தா மாட்டிக்கு வோமேன்னு அதை அப்படியே கபால்னு மறைச்சு வெச்சுட்டு, வேற புது டிஷ் செய்ய ஆரம்பிச்சேன். ரோந்து வந்த மாஸ்டர், 'தம்பி... வாசனை மூக்கைத் துளைக்குதே... நாளைக்கு என் பொண் ணோட பர்த்டே பார்ட்டி. அதுக்கு நீ செஞ்சு மறைச்சு வைச்சிருக்கற டிஷ்தான் வேண்டும்' என கலாய்க்க, என்னோட burnt coconut cake ஓவர் நைட் ஸ்டார் ஆனது'' என்று சொன்னவரின் கண்கள் கைதட்டச் சொல்லிக்



கெஞ்சின.

"GRT Grandல ஆறு மாசம் பயிற்சிக் காகப் போயிருந்தேன். ஒரு நாள் நம்ம சூப்பர் ஸ்டாரே அங்க வந்து ஃப்ரைட் ரைஸ் ஆர்டர் பண்ணார். சூப்பர் ஸ்டா ரைப் பார்த்த அமர்க்களத்துல தலை கால் புரியாம, யாரோ ஆர்டர் பண்ணியிருந்த lobster டிஷ்ஷைக் கொண்டு அவருக்குக் கொடுத்திட்டேன். அவரும் சிரிச்சுக் கிட்டே அதைச் சாப்பிட்டுட்டு, 'தம்பி... நீ கொடுத்த lobster fried rice ரொம்ப நல்லா இருந்தது' என்று கலாய்க்க lobster பாபுவாவே மாறிட்டேங்க'' என்றவரைத் தொடர்ந்தார், குணசேகரன்.

''சமையல் கலைல நிறைய காமெடி நடக்கும். ஒரு பிரபலமான ஹோட்டல்ல கேட்டரிங் செய்யறதுக்காக நான் போனேன். அங்க பார்த்தா ஏகப்பட்ட ஃபாரினர்ஸ். எல்லாருக்கும் ஸெர்வ் பண்ண ஃபிங்கர் ஃபிஷ் எடுத்துக்கிட்டுப் போனேன். ஒரு கொரியாகாரர் மட்டும் என்னைப் பார்த்து வணக்கம் சொல்றா மாதிரி கையைக் கையை ஆட்டினார். பதிலுக்கு நானும் அவருக்கு வணக்கம் சொல்லிட்டு அவரை ஸ்பெஷலா கவனிச்சேன். எங்க காப்டன் அப்ப என்கிட்ட ஓடிவந்து, அவரு போதும் போதும்னு அவங்க பாஷைல சைகை பண் றாரு. நீ பாட்டுக்கு போட்டுக்கிட்டே இருக்கியேன்னாரு பாருங்க'' எனக் கிக்லிபிக்லித்தார்.

''ஹைலைட்டா நான் ஒரு சின்ன ரெஸிப்பீ கொடுத்திட்டு உங்களுக்கு ஒரு பெரிய பை சொல்லிடறேங்க'' என்றார் தினேஷ்பாபு. ''இது இல்லத்தரசிகளுக்கானது... ஒரு பாக்கெட் மேகி எடுத்துக்குங்க. கவனமா பிரிங்க. அத எடுத்து கடாய்ல போடுங்க. கரண்டி எடுத்து உங்க கணவர்கிட்ட கொடுத்துடுங்க. அவர் சமைச்சிப்பார்' என்றவரைச் சுற்றி ஒரே வெடி இடி சிரிப்பு மத்தாப்புக்கள்தான்.

- நளினி சம்பத்குமார்

படங்கள் : குமார்

அருள்வாக்கு


கோபம்

நம் கோபம் எதிராளியை மாற்றாது. அவனுக்கும் நம்மிடம் கோபத்தை உண்டாக்குவதுதான் அதன் பலன். இரண்டு பக்கங்களிலும் துவேஷம் வளர்ந்துகொண்டே போகும். ஒருத்தன் தன் தப்பைத் தானே உணர்ந்து திருந்தச் செய்யாமல், நம் கோபத்துக்குப் பயந்து சரியாக நடந்துகாட்டுவதில் நமக்குப் பெருமையில்லை. இது நிலைத்தும் நிற்காது. அன்பினாலேயே பிறரை மாற்றுவதுதான் நமக்குப் பெருமை; அதுதான் நிலைத்து நிற்கும்.

ஒருத்தன் பாபம் செய்ய அவனுடைய மனசு, சந்தர்ப்பம் இரண்டும் காரணமாகின்றன. நாம் பல பாபங்களைச் செய்யமுடியாமல் சந்தர்ப்பமே நம்மைக் கட்டிப் போட்டிருக்கலாம். எனவே, ஒரு பாவியைப் பார்க்கும்போது, "அம்பிகே! இந்தப் பாபத்தை நானும்கூடச் செய்திருக்கலாம். ஆனால், அதற்குச் சந்தர்ப்பம் தராமல் நீ கிருபை செய்தாய். அந்தக் கிருபையை இவனுக்கும் செய்யம்மா" என்று பிரார்த்திக்க வேண்டும்.

இரண்டாவதாக, நம்மை ஒருத்தர் துவேஷிக்கிறார் என்றும் கோபம் கொள்ள வேண்டியதில்லை. நாம் எத்தனை தூஷணைக்குத் தக்கவர் என்பது நம் உள் மனசுக்குத் தெரியும். ஒருகால் நம்மைத் தூஷிக்கிறவர் நாம் செய்யாத தவற்றுக்காக நம்மைத் திட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் செய்த தவறுகள் அதை விடப் பெரியவை என்று நம் அந்தரங்கத்துக்குத் தெரியும். நம் தவறுகளைக் கழுவிக் கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் அம்பாளிடம் பச்சாதாபத்துடன் அழ வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். இந்த நிலையில் உள்ள நாம் பிறரைத் தப்பு கண்டுபிடித்துக் கோபிக்க நியாயம் ஏது?

நாம் தப்பே செய்யவில்லை என்றால் அப்போது பிறரைக் கோபிக்கலாமா என்றால், இப்படித் தப்பே பண்ணாத நிலையில் நாம் அன்புமயமாகி விடுவோம். அப்போது நமக்குப் பாவியிடமும் கருணை தவிர வேறு எந்த பாவனையும் இராது. கோபமே உண்டாகாது.



- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

குஜராத்தின் நவராத்திரிக் கொண்டாட்டத்தைக் காண முதல்வர் அலுவலகத்திலிருந்து 'கல்கி'க்கும் சிறப்பு அழைப்பு வந்தது. விழாவின் போது குஜராத் காந்தி நகர் சர்க்யூட் ஹவுசில், பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார் முதலமைச்சர் நரேந்திர மோடி. அதில் முக்கியமான பகுதிகள் இதோ இங்கே...



''பெண்களுக்குச்

நவராத்திரி விழாவை அரசாங்கமே நடத்துவதற்குக் காரணம்?

''குஜராத்தில் நவராத்திரி, வீட்டுக்குள்ளே மட்டும் இல்லாமல், மக்கள் பெருமளவில் கூடி நடனமாடிக் கொண்டாடும் முக்கியமான திருவிழா. உலகம் முழுக்க குஜராத்தி மக்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் நவராத்திரியும், கார்பா (கோலாட்டம்) நடனமும் நடக்கின்றன. Commerce with Culture, Trade with Tradition என்பதே எங்கள் லட்சியம்.

இந்தியாவுக்கு வருகிற, அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் டெல்லி, ஆக்ரா, ராஜஸ்தான் என்று சுற்றிப்பார்த்துவிட்டு, ஹெல்த் டூரிஸம் என்று கேரளாவுக்குப் போகிறார்கள். அவர்களை குஜராத்துக்கும் வரவழைக்கும் நோக்கத்துடன்தான் இது போன்ற திருவிழாக்களை நடத்துகிறோம்.

நவராத்திரியைப் போலவே கட்ச் கடற்கரையில், முழு நிலவின் மகிழ்ச்சியை அனுபவிக்கத் திருவிழா, அகில உலக அளவில் காற்றாடித் திருவிழா என்று சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறோம். குஜராத்துக்கு வரும் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்திருக்கிறது.''

குஜராத் குண்டுவெடிப்புச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை எப்படி போக்கப் போகிறீர்கள்?

''குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன என்றாலும்கூட, உடனடியாக அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பல இடங்களில் குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. மக்களே விழிப்புணர்வுடன்





"சொத்து... பதிவுக் கட்டணம் ரத்து!"

- முதல்வர் நரேந்திர மோடி பேட்டி

காவல் துறைக்குப் பேருதவி புரிந்திருக்கிறார்கள். இந்த விழாவில் கூட எந்த வித அசம்பாவிதங்களும் நடக்காமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை நீங்களே பார்த்திருப்பீர்களே!''

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான 'சிரஞ்சீவித் திட்டம்' ஆசியாவின் புதுமையான திட்டத்துக்கான விருதினைப் பெற்றுள்ளதே?

''சிரஞ்சீவித் திட்டத்தால் மாநிலம் முழுவதிலுமாக, சுமார் ஒரு லட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். இன்னொரு சிறப்புச் சலுகை... பெண்கள் பெயரில் சொத்துப் பதிவு செய்தால் பதிவுக் கட்டணம் கிடையாது. முதல் உரிமையாளராக மனைவியும், இரண்டாம் உரிமையாளராக கணவரும் இணைந்து பதிவுசெய்துகொண்டாலும் இந்தச் சலுகை உண்டு.

பா.ஜ.க. அணு ஆயுத ஒப்பந்தத்தை எதிர்ப்பதால், குஜராத்தின் மின்சாரத் தேவையைச் சமாளிக்க, மத்திய அரசு இங்கே ஓர் அணு மின் நிலையம் ஆரம்பிக்க முன் வந்தால் அதை ஏற்க மறுப்பீர்களா?

''பா.ஜ.க., அணு மின் நிலையத்தை எதிர்க்கவில்லை; அணுசக்தி ஒப்பந்தத்தைத்தான் எதிர்க்கிறது. தற்போது, நிலக்கரி பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மின்சாரம் ஒரு யூனிட் ரூ. 1.90க்குக் கிடைக்கிறது. ஆனால், இந்தியா இறக்குமதி செய்யப் போகும் யுரேனியத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் மின்சாரத்தின் விலை, யூனிட்டுக்குப் பத்தொன்பது ரூபாயாக இருக்குமாம். அவ்வளவு விலை கொடுத்து மக்களால் வாங்க முடியுமா? நம் நாட்டில் வடகிழக்கு மாநிலங்களிலும், ஆந்திராவிலும் யுரேனியம் கணிசமாக இருக்கிறது. அதை எடுத்துப் பயன்படுத்த உதவலாமே?

குஜராத்தின் மின் உற்பத்தி நிலையங்களில் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி மின் உற்பத்தியை சுமார் பதினைந்து சதவிகித அளவுக்குப் பெருக்கியிருக்கிறோம். இதை மற்ற மாநிலங்களும் பின்பற்றினால் நாட்டின் மின் உற்பத்தி அதிக முதலீடு இல்லாமலேயே அதிகரிக்கும்.''

இந்தியாவில் திட்டமிடப்பட்ட

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஐம்பது சதவிகிதம் குஜராத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்தப் பட்டதில் மக்களின் எதிர்ப்பு துளியும் இல்லையே எப்படி?

''குஜராத்தில் நிலம் விற்பது, வாங்குவது குறித்த சட்டங்கள் தெளிவாகவும், வெளிப்படையாகவும் இருக்கின்றன. அது மட்டுமில்லாமல், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிலங்களை, சம்பந்

பல நூற்றாண்டுகளுக்கு முன், இந்தியா வந்த பார்ஸி இனத்தவர்கள் குஜராத்தில் இறங்கியபோது, குஜராத் மன்னர் 'புதிதாக வந்தவர்களை வரவேற்க, இந்த மண்ணில் இடமில்லை' என்பதை அவர்களுக்கு உணர்த்த, பால் நிரம்பிய பாத்திரம் ஒன்றை அனுப்பி வைத்தாராம். ஆனால், பார்ஸி இனத்தவர்கள், 'நாங்கள் உள்ளூர் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருப்போம்' என்பதை உணர்த்தும் விதமாக, மன்னர் அனுப்பி வைத்த பாலில் சர்க்கரை கலந்து திருப்பி அனுப்பி வைத்தார்களாம். இது ஒரு குஜராத்தியக் கதை. டாடாவின் நானோ கார் தொழிற்சாலைக்கு, குஜராத்தில் இடமளிப்பதாக மீடியாவுக்கு அறிவித்த நிகழ்ச்சியில், இந்தக் கதையைக் குறிப்பிட்ட மோடி, ரத்தன் டாடாவுக்கு நான் இன்று சர்க்கரை அளிக்கிறேன் என்று கூறினார்!

கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா என்று பலரும் நானோவை ஈர்க்க முயன்றாலும், கடைசியில் ஜெயித்துவிட்டது குஜராத்!

அண்மையில் அகமதாபாதில் நடைபெற்ற நவராத்திரித் துவக்கவிழாவின் போது, குஜராத் பற்றிய சில குறும்படங்கள் காட்டப்பட்டன. அதில், ''குஜராத்தில் தொழில் துவங்க வாருங்கள் என்று நரேந்திர மோடி, யாரையும் அழைக்க வேண்டிய அவசியமே இல்லை. குஜராத்தில் தொழில் துவங்க முன்வராத தொழிலதிபர்களை மற்றவர்கள், 'முட்டாளே! நீ குஜராத்தில் இல்லையா?' என்பார்கள்'' என்று பேசியிருந்தார் ரத்தன் டாடா!

அகமதாபாத் அருகில் உள்ள சனாந்த் பகுதியில், நானோ தொழிற்சாலைக்காக ஆயிரத்து நூறு ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு மூன்றரை லட்சம் நானோ கார்கள் உற்பத்தி செய்யப்படும். டாடா மோட்டார்ஸ் நிறுவனம் இங்கே 2000 கோடி ரூபாய் முதலீடு செய்யவிருக்கிறது. இதன் மூலமாக பத்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். சி.என்.ஜி. எரிவாயு மற்றும் மின்சாரத்தால் இயங்கும் நானோ கார்களையும் இங்கே தயாரிக்கத் திட்டம் உள்ளது.

ரத்தன் டாடாவுக்குச் சர்க்கரை!



— சி.எம்.

தப்பட்டவர்களே நிலங்களின் சொந்தக்காரர்களிடம் பேசி, பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். தனியார் சார்பாக நிலம் கையகப்படுத்தும் பணியை அரசாங்கம் செய்வதில்லை.''

பாராளுமன்றத் தேர்தலை மனத்தில் கொண்டுதானே, கோத்ரா சம்பவம் சம்பந்தமான நானாவதி கமிஷன் அறிக்கையைத் தற்போது சட்டசபையில் சமர்ப்பித்திருக்கிறீர்கள்?

''பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றனவே! தேர்தலை மனத்தில் வைத்துக்கொண்டு செய்திருந்தால் கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது அல்லவா செய்திருக்க வேண்டும்? உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் சேர்ந்துதான் நானாவதியின் பெயரை முடிவு செய்தன. அவர் தமது அறிக்கையின் முதல் பகுதியைச் சமர்ப்பித்தார். உடனடியாகக் கூடிய சட்டமன்றத் தொடரில் அதைச் சமர்ப்பிப்பதுதானே முறை?''

பேட்டி, படங்கள் :
எஸ். சந்திரமௌலி





"பக்கத்து நாட்டு மன்னர் நல்லா சமைப்பார்னு எப்படிச் சொல்ற?"

"நம் மன்னருக்கு ஓலையில் சமையல் குறிப்பு அனுப்பி இருக்காரே."

- வே. சித்ரா



"உங்க எம்.எல்.ஏ ரெண்டு நாளா வீட்டை விட்டு வெளியே வரலியாமே!"

"மினிஸ்டர் போஸ்ட் கிடைச்சா என்ன செய்யணும்... கிடைக்கலைன்னா என்ன செய்யணும்னு ஒத்திகை பார்த்திட்டிருந்தாராம்!"

- பி.ஜி.பி. இசக்கி



"இதுல யாரு பட்டத்து ராணி?"

"காத்தாடி விடறாங்களே... அவங்கதான்...!"

- சிவகுமார்



‘‘உங்க மாமியாருக்கு ‘ஷாக்’ அடிச்சப்போ, நீங்க என்ன பண்ணினீங்க?’’

‘‘அவங்களைத் தொடாம, ஒரு கட்டையால அவங்களை அடிச்சேன், டாக்டர்!’’

- அனன்யா

உருட்டுக் கட்டை ட்ரீட்மெண்ட்!



‘‘ஏன்யா... வீட்டுக்கு லேட்டா கிளம்பற...?’’

‘‘தூங்கிட்டேன் ஸார்...’’

‘‘காலைல ஆஃபீஸுக்கு லேட்டா வந்ததுக்கும் இதே காரணம்தான் சொன்னே...’’

- வி. சாரதிடேச்சு



‘‘உன் புது மருமகள் எப்படி?’’

‘‘பரவாயில்லை; ஓரளவுக்கு ஈடு கொடுத்துச் சண்டை போடறாள்!’’

- அனன்யா



கராத்தே

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான். அந்தக் குடும்பத்தின் மூன்று பிள்ளைகளும், கராத்தே வீரர்கள். இத்தனைக்கும் அந்த வீட்டில் பெரியவர்களோ உறவினர்களோ எவரும் கராத்தே மாஸ்டர்கள் அல்ல. அப்பா ராஜாராமன் லாரி டிரைவர். அம்மா கலைச்செல்வி இல்லத்தரசி. மூன்று பிள்ளைகளில் கடைக்குட்டி பாலாஜி சிவா, சமீபத்தில் ஸ்டேட் ஓபன் சாம்பியன்ஷிப் கோப்பையை வென்று வந்துள்ளான். எப்படி இது சாத்தியமாயிற்று?

''என் பசங்க மூணு பேருமே வலங்கைமான் கார்மெல் மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் படிச்சுட்டு இருக்காங்க. ஸ்கூல்ல கராத்தே கத்துத் தர்றாங்க, சேர்ந்துக்கட்டுமான்னு முதல் பையன் வந்து கேட்டான். நான்கூட நம்ம புள்ளைங்களுக்கு எதுக்குனு யோசிச்சேன். அவங்கப்பா காதுக்கு சேதி போச்சு. அவரு உடனே சரின்னுட்டாரு. நானும் மாசா மாசம் ஃபீஸ் கட்டப் போறவரு அவருதானேன்னு சம்மதிச்சுட்டேன். ஆனா, அந்தப் பலனை இப்ப நான் தெரிஞ்சுக்கிட்டேன். எங்க பொண்ணு முந்தியெல்லாம் நைட்டு நேரத்துல தெருக்கோடி கடைக்குத் தனியா போய்ட்டு வர மாட்டா. இப்ப அப்படியில்ல. பவர்கட் ஆயிடுச்சுன்னா ஓடிப்போயி அவதான் மெழுகுவர்த்தி வாங்கிட்டு வர்றா. கராத்தே கத்துக்கறது, அவ மனசுல தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் தந்திருக்கு!'' எனக் கூறுகிறார் கலைச்செல்வி.



* பாலாஜி சிவா

''ஒரு நபருக்கு மாசம் அறுபது ரூபான்னு, கராத்தே கிளாஸுக்கு ஃபீஸ், அது இல்லாம வெளியூர் டோர்னமெண்ட் போனா கொஞ்சம் பணம் ஆகும். புள்ளைங்களுக்கு இது ஒரு வகையில தற்காப்புப் பயிற்சி. சுறுசுறுப்பா இருக்காங்க. உடல் ஆரோக்கியமா இருக்காங்க. அவங்களோட மனசும் ரிலாக்ஸா இருக்கு. அதனால படிப்புல மூணு பேருமே நல்ல



குடும்பம்!



✱ ராஜா

மார்க் வாங்கி வர்றாங்க. கராத்தேவுக்கு ஆகுற செலவை நான் சுமையா நெனைச்சது கிடையாது!'' என்கிறார் ராஜாராமன்.

''என்னோட தம்பிக்கு முன்னாடிலேருந்து நான் கராத்தே கத்துக்கிட்டு வர்றேன். திரும்பிப் பார்க்கறதுக்குள்ளார அவன்போயி ஸ்டேட் லெவல்ல கோப்பைய வாங்கிட்டு வந்து நிக்கறான்! வெளியூர்லேர்ந்து சொந்தக்காரங்க எல்லாம் ஃபோன் பண்ணி வாழ்த்து சொல்றாங்க. எங்களுக்கு இது சந்தோஷமான விஷயம்தானே. கராத்தேல மஞ்சள் பெல்ட்டுலேர்ந்து வரிசையா ஒவ்வொரு பெல்ட்டா வாங்கிட்டேன். இப்போ பிளாக் பெல்ட்டுக்காக ஒரு வருட கால கராத்தே பயிற்சித் தேர்வுல ஈடுபட்டிருக்கேன்'' என்கிறான் விஜய் சிவா.

''ஆறு வயசுலேருந்து கராத்தே கத்துக்கிட்டு வர்றேன். எங்க ஸ்கூல் கராத்தே மாஸ்டர் ராஜா, எனக்களித்த பயிற்சியாலும் உற்சாகத்தினாலுமே என்னால் போட்டியில் வெல்ல முடிந்தது! சமீபத்துல திருப்பூர்ல நடந்த ஸ்டேட் ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்கள்லேருந்து கராத்தே வீரர்கள் வந்து கலந்துக்கிட்டாங்க. இருபத்தைந்து கிலோ எடைப் பிரிவுல, முதல் இடம் பெற்று ஸ்டேட் ஓபன் சேம்பியன்ஷிப் 2008 கோப்பையை வென்று வந்துள்ளேன்!'' எனக் கூறுகிறார் பதினோரு வயதாகும் பாலாஜி சிவா.

''பன்னெண்டு வருஷமா கராத்தே கத்துக் கொடுத்துட்டு வர்றேன். எழுநூற்றைம்பது மாணவ - மாணவிகள் என்னிடம் கராத்தே கத்துக்கிட்டு இருக்காங்க. பாலாஜி சிவாவிடம் கொஞ்சம் கூடுதல் திறமை இருக்கறதை உணர்ந்தேன். அவனுக்குத் தீவிர பயிற்சி தந்தேன். அவனைக் களமிறக்கிவிட்ட முதல் போட்டியிலேயே ஸ்டேட் ஓபன் சேம்பியன் கோப்பையை வென்றது, எங்களுக்கு இன்ப அதிர்ச்சி!'' எனத் தெரிவிக்கிறார் கராத்தே மாஸ்டர் ராஜா.

– ஸ்ரீரங்கம் திருநாவு

டூயட் கதை - 10

இந்தப் புன்னகை என்ன விலை?

அந்தக் குறத்தியைப் பார்த்துக்கொண்டேயிருக்கத் தோன்றியது பானுவுக்கு. பூமியின் வண்ணங்களான பச்சை, பழுப்பு, செங்காவி கலந்த கந்தல் புடைவையைக் கொசுவி புசுபுசுவென்று ஒரு பாவாடை. நீலக்கரை வைத்த சிவப்புத் துணியில் வெள்ளைப் பொட்டுகளைச் சிதறிய பாந்தினி ரவிக்கை. இன்ன நிறமென்று சொல்லமுடியாத அழுக்கு மேலாக்கு. உடலை மறைக்கவின்றி, அலங்கரிக்க மட்டுமே உடுத்தியதுபோன்ற அச்சமின்மை. கண்களில் மின்னிய துணிவு, வாழ்க்கையின் இடையூறுகளைப் புறந்தள்ளி தன் வழி நடக்கக் காத்திருந்தது. அந்த அதிகாலையிலும் அழகொழுகச் சிரித்தது அவள் இடுப்புக் குழந்தை. 'தாயின் இடுப்பில் இருக்கும் சந்தோஷம், பாதுகாப்பு!' ஒரு மஞ்சள் துணித் தூளியில் அதை உட்காரவைத்து, தன் கழுத்தைச் சுற்றிக் கட்டியிருந்தாள். அவள் கழுத்தில் தொங்கிய சிவப்பு மணிகளைப் பிடித்து அது விளையாடியது. குப்பைத் தொட்டியை நோக்கி அவள் குனிந்தபோது, அவள் நெற்றியில் சிமிட்டிய கண்ணாடி பதித்த பொட்டைச் சுரண்ட சிறுவிரல் நீட்டியது. அவள் அதன் கையை இலேசாகத் தட்டிவிட, ஏதோ புது விளையாட்டைக் கண்டாற்போல இன்னும் விரியச் சிரித்தது குழந்தை.

தினேஷின் அதே சிரிப்பு, அதே விளையாட்டு. தன்னிடம் அவன் கொள்ளும் அதே பாதுகாப்புணர்வு! ஆனால் தினேஷ் குழந்தையில்லை.

''நான் வேணா வெங்காயம் நறுக்கட்டுமா?''

''ஒண்ணும் வேணாம்!'' கைக் காரியத்தைப் பிடுங்கும் அவனைத் தட்டி விட்டால் சளைத்துவிட மாட்டான்.

''வெங்காயம் அரிந்து தள்ளும் கண்ணழகே, பெண்ணழகே! முன்னாடி நீ இருந்தா முந்நூறு பாட்டு வரும்...'' - இடது காதில் ஒரு கை வைத்து மூடிக் கொண்டு, வலது கையை உயர்த்தி, அவன் சினிமா நாயகன்போல் பாடும் குழந்தைத்தனமான குரல் இன்னமும் காதில் ஒலிக்கிறது. சமையல் மேடையில் பொருள்களை நகர்த்திவிட்டு உட்கார்ந்துவிடுவான்... அது ஒரு காலம்.



''எப்படி என் பாட்டு?''

''ஆஹா... உலக மகா கவிஞர்தான்!''

''என்ன கிண்டலா?''

''ஆமாம்.''

''அப்படின்னா அந்தக் கவிஞரையே கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்க வேண்டியதுதானே?''

''யாரது?'' புரியாத மாதிரி கேட்பாள்.

''அதான்! செகண்ட் இயர்ல இருக்கறப்போ உன்னை வர்ணிச்சு கவிதை எழுதிக் குடுத்தானே - பிரேம்!



அவன் பேர் முழுக்க காதல், கவிதை முழுக்க காதல்...''

''பண்ணிக்கிட்டிருக்கலாம். ஆனா...''

''ஆனா என்ன... என்ன?''

''மோட்டு வளையப் பார்த்துக்கிட்டுக் கவிதைக்கு வார்த்தையை யில்லே தேடிக்கிட்டிருப்பாரு ஐயா! இந்த மாதிரி வெங்காயம் நறுக்கறப்போ நல்ல என்டர்டெய்ன்மென்ட் கிடைக்காதே...''

''அவ்ளோ கிண்டலாப்போச்சில்லே உனக்கு!''

'உதைக்கிறேன் பார்!' என்பதுபோல் இறங்கிவந்து இறுக்கி அணைத்துக் கொள்வான்.

''நிஜமாகவே நீ அவனைக் காதலிக்கலியா பானு?'' என்று தினேஷ் கேட்டபோது, அப்பாவியாகத் தெரிந்தான்.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்தைத் தாண்டி நிழல் விரித்த பெரிய தூங்குமூஞ்சி மரங்களுக்குப் பின்னால் இருந்தனர்.

''ப்த்ஸ்....'' சூள் கொட்

சீதா ரவி

டிய அவன் முகத்தைப் பார்த்தான். காதலுக்கு அணை போட முடியாமல் அவன் கண்கள் பளபளப்பதைப் பார்க்க, அவளுக்கும் சந்தோஷமாக இருந்தது.

''பாவம் எவ்வளவு நேசத்தோட எழுதியிருக்கான்:

பசுந்தளிர் போன்றவளே, பாசமிகு பானுமதி!

கசிந்துருகும் என் உள்ளக் காதல் தெரியலியோ?

சின்னதொரு புன்னகை

தான் என்றாலும் உன் முகத்தில்
பன்னெடும் ஜன்மத்துப் பரிதவிப்பு அடங்குதடி''

- கையிலிருந்த காகிதத்திலிருந்து படித்தான்.

''நிறுத்து தினேஷ்!''

''கவிதை அழகாயிருக்கு பானு... உன்னோட பர்ஸனாலிடியை எப்படி வார்த்தையில அடக்கியிருக்கான்...''

''அதுக்காக ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது.''

தொடர்ந்த மௌனத்தைக் கலைத்து ஒரு மைனா 'சிள் சிள் சிள் சிள்' என்று அழைத்தது. இருவரும் ஒரு சேர அண்ணாந்து, அது அமர்ந்திருந்த மரக்கிளையைப் பார்த்தனர். இறகுகளை ஒருமுறை சிலுப்பிக்கொண்டு அது மீண்டும் 'சிள் சிள் சிள்'ளைத் தொடர்ந்தது.

''அழகாயிருக்கில்லே...?'' என்றாள்.

''பேச்சை மாத்தாதே....'' கோபம் எட்டிப் பார்த்தது அவன் குரலில்.

''இப்போ நான் என்ன செய்யணும்ங்கறே...? என் சிரிப்பைப் பத்தி ஒருத்தன் கவிதை எழுதிட்டான்றதுக்காக அவனைக் காதலிக்கணுமா...? அப்படியெல்லாம் வர்ற விஷயமில்லே காதல்...''

''பின்னே, எப்படி வருமாம் காதல்...?''

''ம்... ? வரும்போது நானா சொல்றேன். அதுவரைக்கும் என்னைத் தொந்தரவு பண்ணாதே.''

''............''

''ஒரு கவிதையால சந்தோஷத்தையோ காதலையோ விலைக்கு வாங்கிட முடியாது... ஒரு புன்னகையைக்கூட வாங்க முடியாது. அதெல்லாம் வரணும்னா வரும். காதலும் சரி, புன்னகையும் சரி... வரணும்னு முடிவு பண்ணிட்டா அடக்க மாட்டாம வரும்...''

அவள் போய்விட்டாள். பொழுது சாயும்வரை அங்கேயே மைனாவின் சிள் சிள்ளைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மறுநாள், அதே மரத்தடியில்,

''நீ இங்க வருவேன்னு தெரியும் தினேஷ்.''

''எனக்கும் தெரியும். நீ வருவேன்னு'' என்று அவன் இறுக்கமாகச் சொன்னபோது, அவள் முகம் புன்னகையால் நிறைந்தது. அவள் கண்களைச் சந்தித்த கணத்தில் அவன் பூட்டிக் கொண்டிருந்த விலங்குகள் தகர்ந்தன.

''இந்தப் புன்னகைக்கு என்ன விலை தரணும்?'' என்றான் மிக அருகில் வந்து.

'எதுவுமில்லை' என்பதுபோல் அவள் தலையசைத்தாள்.



''எடை குறைய டாக்டர்கிட்டே போனேன். முப்பது நாள் டயட்லே இருக்கச் சொன்னார்.''
''எவ்வளவு குறைஞ்சது?''
''பதினைஞ்சு நாள்.''
- ஜி. லட்சுமிபதி

அவிழ்க்க முடியாத
பின்னல்களில்
சிக்குண்டு கிடக்கின்றன
என் சுதந்திர வானமும்
வண்ணத்துப்பூச்சிகளின்
சிறகுகளும்.
எந்த அகராதியாலும்
மொழிபெயர்க்க
முடியவில்லை
அடர்ந்த உன் மௌனம்

– ம.ஞானசேகரன், புதுவை



அதே மைனாவின் சிள்சின்ளோசை அவர்களுடைய காதலுக்குக் குலவையாயிற்று.

திருமணத்துக்குப் பிறகும், பலமுறை பிரேம் எழுதிய பழைய கவிதை அவர்களுடைய உரையாடல்களில் அடி பட்டது; கொஞ்சம் உதை பட்டது. ஒரு கட்டத்தில் தினேஷ் முற்றுப்புள்ளி வைத்தான். ''வேண்டாம். இனிமே நாம அதைப் பத்தி கிண்டலாகக் கூட பேச வேண்டாம். அவனோட அன்புல யும் ஒரு சத்தியம் இருந்ததில்லே. அதை மதிச்சு அப்படியே விட்டுடுவோம்...''

விதிர்விதிர்த்துப் போனாள் பானு. விளையாட்டும் சீண்டலும் இளமை யின் கொப்பளிப்பும் நுரைத்துப் பொங்கிய அவன் உள்ளத்தின் அற்புத ஆழத்தில் ஒரு முங்கு முங்கி எழுந்தது போலிருந்தது. ஒரு கணத்தில் வயது கூடினாற்போல் ஆகிவிட்டது. அவ னுடன் கைப்பிடித்து முன்னேற ஒரு விசாலமான புதிய பாதை பிறந்தது. முன்னிலும் அதிகமாக அவனை நேசித் தாள். பாதையில் எதிர்ப்பட்ட மேடு பள்ளங்களையெல்லாம், அந்த நேசத் தின் பலத்தால் சமன் செய்ய முடிந்தது. அவன் பேச்சும் அசைவுகளும் ஒரு கோணல் புன்னகையில் முடங்கிப் போன பயங்கர தருணத்திலும் அந்தக் காதலே துணை நின்றது.

''இவ்வளவு சின்ன வயசுலகூட ஸ்ட்ரோக் வருமா டாக்டர்?''

''மோஸ்ட் அன்ஃப்பார்ச்சுனேட்'' என்பதற்கு மேலாக மருத்துவரால் எது வும் சொல்ல முடியவில்லை.

வீல் சேர், அடல்ட் டயாபர், ஃபிஸியோ தெரஃபி, பணப் பற்றாக்குறை, நேரத்தைத் துரத்தும் முடிவில்லாத பந்தயம் என்று, வாழ்க்கை தடம் மாறியபோதும் சலிப்பை விரட்டி புன்னகை செய்யமுடிந்தது அவ ளால்.

''எந்த பலத்துல இப்படிச் சுழன் றுக்கிட்டிருக்கே?'' என்று தாரா ஒரு கல் யாணத்தில் கேட்டாள். பந்தி ஓரத்தில் இடம் பிடித்து, வீல்சேரிலேயே அமர்த்தி தினேஷுக்குச் சாதத்தைப் பிசைவதும், தான் ஒரு வாய் சாப்பிட்டு, அவன் ஸ்பூனுக்கு ஒரு வாய் சாதத்தை மாற்றித் தருவதும், அவன் கழுத்தில் செரு கிய நேப்கின்மேல் சிந்திக்கொண்டே பெரும் முயற்சியுடன் சாப்பிடுவதை, நான்கு குழந்தைகள் அச்சம் பூசிய அகன்ற கண்களுடன் நின்று வேடிக்கை பார்ப் பதும்... எதுவுமே பெரிதாக இன்றி, நடக்க வேண்டியவை நடப்பது போல் தோன்றின. வெயில் இருக்கும் திசை நோக்கி வளைந்து வளரும் கோணல் மரத்தின் அழகு குறைந்துவிடுகிறதா என்ன..?

கேள்வியைக் கண்களாலேயே தொடர்ந்து கொண்டிருந்தாள் தாரா.

பானு அப்போதுதான் சற்று நின்று

யோசித்தாள். கடமை உணர்வு மட்டுமே இப்படி ஒரு உந்து சக்தியைப் பிறப்பிக்க முடியாது என்று புரிந்தது. நெஞ்சுக்குள்ளே கண்மூடி மோனத்திலிருந்த பெருங்காதல், ஒரு கணம் கண் மலர்த்தி அவளை நோக்கவும், உடைப்பெடுத்த உணர்ச்சி வெள்ளம் கண்ணீராகப் பெருகி வழிந்தது.

பயந்து போனாள் தாரா.

''இன்னொரு தடவை எங்கிட்டே இப்படிக் கேட்காதே...'' என்று விம்மியவளை அணைத்துக்கொண்டு அவசரமாக அப்புறப்படுத்தினாள்.



காதலின் தரிசனத்தால் பெருகிய கண்ணீரை, சோர்வென்றோ சுயபச்சாதாபமென்றோ தினேஷ் கருதியிருக்க வேண்டும். முடங்கிய வாழ்க்கையின் வலியும் இயலாமையும் தூண்டிய வழக்கமான சிடுசிடுப்புகளைத் தாண்டி, பயங்கர கருமேகமொன்று சில நாட்களாக அவன் முகத்தில்... அவனுடைய இயல்பான நேசத் தென்றலால் கலையாத அந்த மூட்டம் அடித்துப் பெய்தபோதுதான் வீழ்ந்துபோனாள் பானு.

இடதுகை கிறுக்கலாக கோணிச் சிரித்த அவன் எழுத்துக்களின் முயற்சியழகை மூழ்கடித்த வக்கிர வார்த்தைகள்:

''நீ அந்த பிரேமையே கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கலாமில்ல...?''

காலம்தான் ஒரே வாக்கியத்தின் பொருளை எப்படிப் புரட்டிப் போடுகிறது! 'பிரளயம் என்பது இதுதானோ?' என்று நினைத்துக்கொண்டாள் பானு. இப்போது அவளுக்கு இடைவெளி தேவைப்பட்டது. அவனிடமிருந்து, அவனிடம் கரைந்து விட்ட தன்னிடமிருந்து...

தினமும் அதிகாலை, அவன் எழுவதற்கு முன் ஷூக்களை மாட்டிக்கொண்டு தெருவில் அழுந்த நடப்பது ஒரு வடிகாலாக இருந்தது.

எதிரில் தென்பட்ட குப்பைத் தொட்டியில் காகிதமும் பிளாஸ்டிக்கும் சேகரிக்கும் குறத்தியின் போர்க்குணம், வானத்தின் நீலம், அதில் பறக்கும் நாரைகளின் அணிவகுப்பு, நெட்டி முறித்து சோம்பலை உதறிவிட்டு மும்முரமாக நடக்கின்ற தெரு நாய், விளக்குக் கம்பத்து உச்சியிலிருந்து விடாமல் ஒலிக்கும் மைனாவின் சின் சின் சின் சின்...

எல்லாமாகச் சேர்ந்து ஒரு புன்னகையை வரவழைத்திருக்க வேண்டும், அவள் முகத்தில்...

''என்ன, பானுமதி? உனக்கு நீயே சிரிச்சுக்கறே...?'' - எதிரே பால் கவருடன் வந்துகொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பாட்டி.

''ஒண்ணுமில்லே பாட்டி.''

பானு இன்னும் வேகமாக நடந்தாள். 'ஓடறியா? உன்னை விடமாட்டேன்; இங்கே பாரு!' என்று நெஞ்சுக்குள்ளிருந்து எட்டிப்பார்த்த பெருங்காதல் அவள் கன்னத்தைத் தட்டியது. புன்னகை இன்னும் அகலமாக விரிந்தது பானுவின் முகத்தில். ○

எட்டு வயதில் எட்டு வானொலி!

''நீங்க நம்பினாலும் சரி, நம்பாட்டியும் சரி. நான் நாலு வயசுலேர்ந்தே வானொலி கேக்கறேன். ஆறு வயசுலேர்ந்து வானொலி நிலையப் போட்டிகள்ல பங்கெடுத்து வர்ற எனக்கு இப்போ வயசு எட்டு. இந்த ரெண்டு வருஷத்துல வானொலி நிலையங்கள்லேர்ந்து எட்டு ரேடியோக்களைப் பரிசா வாங்கியிருக்கேன். நீங்க எங்க வீட்டுக்கு வந்தா உங்களுக்கு காமிப்பேன்'' என்கிறாள் சிவரஞ்சனி. திருவைகாவூர் கீதா - முருகானந்தம் தம்பதியினரின் செல்ல மகள்.

''என்னோட அம்மா, வீட்ல தையல் மிஷின்ல தைச்சுகிட்டே ரேடியோ கேட்டுக்கிட்டு இருப்பாங்க. என்னோட அப்பா அரசு ஊழியர். அவங்க ரெண்டு பேருமே வானொலியின் தீவிர நேயர்கள். அவங்ககிட்டயிருந்துதான் எனக்கு இந்த நல்ல பழக்கம் ஒட்டிக்கிச்சு. லண்டன் பிபிசி, வேரித்தாஸ், வத்திக்கான், ஐபிசி, சீனத் தமிழ் வானொலி, சிங்கப்பூர் வானொலிகளின் தமிழ்ச் சேவை ஒலிபரப்புகளைக் கேட்டுடுவேன். இதுல வேரித்தாஸ் ஆசிய வானொலி அவசியம் கேட்டுடுவேன். ஏன்னா, அதான் நான் ஸ்கூல் போறதுக்கும், போய்ட்டு வந்து படிக்கறதுக்கும் டிஸ்டர்ப் இல்லாம இருக்குது.

வேரித்தாஸ் ஆசிய வானொலியில இந்த வருஷம் மார்ச் மாதம் பொது அறிவுப் போட்டி நடத்தினாங்க. அதுல ஒரு பிரைஸ் அடிச்சேன். அதுக்குச் சான்றிதழ் தந்தாங்க. திருச்சி வானொலியில நேரா வரச் சொல்லி என்கிட்ட ஒரு பேட்டி எடுத்தாங்க. ஏதோ லோக்கல் தலைவரு ரேஞ்சுக்கு 'பில்ட்-அப்' தரலாம்னு உள்ளே போனேன். பணிவு... பணிவு...ன்னு முணுமுணுத்துகிட்டே தலையில ஒரு குட்டு வெச்சாரு என் அப்பா.

திருச்சி வானொலி மணிமலர் நேர்காணல் நிகழ்ச்சியில என்னோட பேட்டிய பத்து நிமிஷம் ஒலிபரப்புனாங்க. யார் யாரோ பேசறதை ரேடியோவுல கேட்கிற எனக்கு, நான் பேசினதை நானே கேக்கும்போது ரொம்ப சந்தோசமா ஆய்டுச்சு. போன வருஷம்தான் எங்க வீட்டுக்கு டி.வி.யே வாங்கினாரு என் அப்பா. அவங்க ரெண்டு பேரும் எப்பவாவது நியூஸ், சினிமான்னு கொஞ்ச நேரம் பார்ப்பாங்க. நோ சீரியல். நான் எப்பவாச்சும் சுட்டி டி.வி பார்ப்பேன். எங்களுக்கு ரேடியோதான் எப்பவுமே பெஸ்ட்!'' என்கிறார் எட்டு வயது வானொலி நேயர் சிவரஞ்சனி.

– இந்திரா மணாளன்



* சிவரஞ்சனி

என் பயணத்தின் சாரதி

மூன்றாவது படிக்கும்போது பள்ளிக்குள்ளேயே நடந்த ஓவியப் போட்டியில் கலந்துகொண்டேன். மரத்தடியில் நடந்தது. நடப்பதற்கு இடமில்லாத அளவுக்கு மைதானம் முழுசும் போட்டியாளர்கள்! ஒரு யானை ஃபுட்பால் விளையாடுவது போல் வரைய ஆரம்பித்தேன். கொஞ்ச நேரத்தில் தற்செயலாகப் பின்னால் திரும்ப, ஆறேழு பேர் நான் வரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் இருவர் எனது ஆசிரியர்கள். 'கொளுத்திட்டடா! பிரமாதம்!' என்றார்கள். நான் உற்சாகத்தை அடக்கிக் கொண்டு வரைந்தேன். அவர்கள் இன்னும் இருவரைக் கூப்பிட்டுக் காண்பித்தார்கள். தெருவுக்குப் பாம்பாட்டி வந்தால் எப்படி குடும்பம் குடும்பமாக வந்து ஆவலோடு எட்டிப் பார்ப்போமோ, அதே போல் அன்று மொத்த பள்ளிக்கூடமே, நான் வரைவதை சாரை சாரையாக வந்து பார்த்துப் போனார்கள். நான்தான் முதல் பரிசு! ஆசிரியர் ஒருவர் - வெங்காயக் கூடைதான் உனக்குப் பரிசாக வரப்போகிறது எனக் கிசுகிசுத்தார். நான் சிலிர்த்துப் போனேன்! அடுத்த வாரம் திங்கள் காலை அசெம்பிளியில் பரிசு தருவதாகச் சொன்னார்கள்.

ஆனால், தரவில்லை. அதற்கடுத்த வாரமும் தரவில்லை. கிளாஸ் டீச்சரிடம் மெல்ல நான் ஞாபகப்படுத்த, 'முதல்ல வீட்டுப் பாடத்தை ஒழுங்கா செஞ்சியா?' என்றார் அதட்டலாக! நான் அடங்கிவிட, இருந்தாலும் பரிதாபப்பட்டு மாலை ஹெட்மாஸ்டர் ரூமுக்குக் கூட்டிப் போய் அவரிடம் விஷயம் சொன்னார். அவர் டென்ஷனாகி என்னிடம், 'நீ சொல்லியா போட்டி வச்சோம். அதே மாதிரி எங்களுக்கு ப்ரைஸ் தரத் தெரியாதா? இரண்டாவது, மூணாவது ப்ரைஸ் வாங்கினவன் எப்படி அமைதியா இருக்கான். உனக்கென்ன அவசரம்? இன்னொருதரம் கேட்டீன்னா டி.சி.யைக் கிழிச்சுக் கைல குடுத்துருவேன்!' என்றதும் நான் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டேன். கடைசிவரை எனக்கு அந்த வெங்காயக் கூடை கிடைக்கவேயில்லை.

அப்போதெல்லாம் கோகுலம், சிறுவர் மலர், ரத்னபாலா, அம்புலி மாமா போன்ற இதழ்களை விடாமல் படிப்பேன். இன்னொரு பக்கம் க்ரைம் நாவல், பாக்கெட் நாவல் போன்றவைகளையும் விடாமல் படிப்பேன். பார்ப்பவர்களுக்கு நான் எந்த ரகம் என்றே புரியாது. ஒருமுறை, சிறுவர் மலரில் மாணவர்கள் வரையும் பகுதியில் அருமையான விவேகானந்தர் ஓவியம். கீழே 'எஸ்.பார்த்தசாரதி, ஒன்பதாம் வகுப்பு, புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி' என இருந்தது. எனக்குப் பெரும் ஆச்சர்யம். என் பள்ளி மாணவர் இவ்வளவு பெரிய ஓவியரா? அதுவும் எனக்குத் தெரியாமலா? நான் அப்போது ஏழாவது வகுப்பு. அவர் வகுப்பறை தேடிச் சென்று அவரைப் பார்த்தேன். சாந்தமான முகம்; எளிய நபர். ''நான்தான் பார்த்தசாரதி... நீங்க?'' என்றார். ''உங்க டிராயிங்கை சிறுவர் மலர்ல பார்த்தேன். ரொம்ப சூப்பர்!'' எனக் கைகொடுத்தேன். அவர் சோல்னாப் பையிலிருந்து மேலும் பல ஓவியங்களை எடுத்துக் காண்பித்தார். எல்லாம் பிரமாதமாக இருந்தன. ஒரு சிறந்த ஓவியனை முதன்முதலாக நேரில் சந்தித்த மகிழ்ச்சி எனக்கு.

எங்கள் தெருவுக்கு அடுத்த தெருவான மேலப்பொன்னகரம் ஏழாவது தெருவில்

தான் பார்த்தசாரதி வீடும் எனக் கேள்விப் பட்டதும் மிக உற்சாகமடைந்தேன். அந்த வாரத் திங்கள் கிழமை அசெம்பிளியில், மாவட்ட அளவில் ஓவியப் போட்டியில் இரண்டாவதாக வந்த சாரதி பரிசு பெற பள்ளியே கைதட்டியது... அன்று மாலை அவர் வீட்டுக்குப் போனேன். வீட்டு முன் இருந்த குழாயடியில் அமர்ந்து வெகு நேரம் பேசினோம். ''எப்ப நல்லா வரைய முடியும்?'' என்றேன். அவர் ''நெறைய அசிங்கமான படம் வரைஞ்ச பிறகு தான், நல்லா படம் வரைய முடியும்!'' என்றார். பயிற்சியின் அத்தியாவசியம் புரிந்தது.

இரண்டு வருட வித்தியாசம் என்றாலும், நானும் சாரதியும் மிக நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம். ஸ்கூலுக்குச் சேர்ந்துதான் போவோம். சேர்ந்துதான் வருவோம். நான் சாரதி வீட்டிலேயே கிடப்பேன். சாரதி வரைவதை எல்லாம் நான் வரைந்து பார்ப்பேன். ஓவியத்தில் அவர்தான் எனக்குக் குரு; நிறைய டிப்ஸ் சொல்லுவார். அவர் வரைந்த முப்பதுக்கும் அதிகமான



என்னை இயக்கிய ஹீரோக்கள் 13

இயக்குநர் சிம்புதேவன்



ஓவியங்களைப் பார்த்து, தினம் ஒன்றாக அதே போல் வெறித்தனமாக வரைந்தேன். அவர் வரைந்ததை விட அஞ்சு பர்சண்ட்டாவது குறைவாகத்தான் வரைய முடியும். வரைந்து முடித்ததும் நேரே சாரதி வீட்டுக்குப் போய்க் காண்பிப்பேன். அவரின் அப்பா சுப்பிரமணியன் முன்னாள் எழுத்தாளர். சிறந்த கலாரசனை உடையவர். என் ஓவியத்தில் உள்ள குறைகளைச் சொல்லுவார்.

ஆனால் ஆனந்தம்மாவும், முத்தம்மாவும் என்னை உற்சாகப்படுத்தி எனது ஓவியம்தான் நன்றாக உள்ளது என்பார்கள். சாரதி நன்கு வழிப்படுத்துவார். ''உன் லைன் டிராயிங் நல்லாயிருக்கு. வாட்டர் கலர் டிராயிங்லதான் தயக்கம் இருக்கு. ஓவியம் கலர் இப்படித்தான் வரணும்னு முன்னாலேயே தீர்மானிக்காத. பேப்பர்ல கலர் மிக்ஸ் ஆகும்போது தேவையானதைக் கொண்டு வா!'' என்பார். இங்கு எடுத்த பயிற்சியால் நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது மட்டும், மாவட்ட அளவிலான பதினொரு பரிசுகள் பெற்றேன்.

நாங்கள் இருவரும்தான் சைக்கிள் பழகினோம். சாரதிக்கு உடல் பலம் குறைவு. ரொம்ப நேரம் ஓட்ட முடியாது. உள்ளங்கை வியர்த்து விடும். நான்தான் சைக்கிள் பழகுகிறேன் என விதவிதமாக ரோட்டில் செல்பவர்களை இடிப்பேன். ஒரு முறை சர்பத் கடைக்குள் கூட சைக்கிளை விட்டிருக்கிறேன் என்றால் பாருங்கள்.

எங்கள் வட்டம் விரிந்தது. சினிமா பார்ப்பது மாதிரி சொந்த விஷயத்துக்கு வீட்டில் பணம் வாங்க முடியாது என்பதால், வரைந்து சம்பாதிக்க ஆரம்பித்தோம்... வீட்டுக்குத் தெரியாமல்! டீச்சர் டிரெய்னிங் ஆசாமிகளுக்கு சார்ட் வரைந்து தருவோம். நூறு ரூபாய் கிடைக்கும். இரவு போலீஸ் குவாட்டர்ஸுக்குப் போய் அங்கு ஸ்கூட்டர்களில் 'மாநகர காவல்' என பெயிண்டில் எழுத வேண்டும். வண்டிக்குப் பத்து ரூபாய்! மொத்தமாகக் கிடைப்பது ஒரு மாசச் செலவுக்கு ஆகும். 'லாரன்ஸ் ஆஃப் அரேபியா' நல்ல படம் என, முதன் முதலாக மாப்பிள்ளை விநாயகர் தியேட்டருக்கு சாரதிதான் கூட்டிப் போனார். எல்லா ஆங்கிலப் படங்களையும் பார்த்து விடுவோம். ஒரு கட்டத்தில் இருவரும் சேர்ந்து கதைகூட எழுத ஆரம்பித்தோம். பார்த்தசாரதி, செந்தில்குமார் என்ற பெயர்களைச் சேர்த்து சாரதி குமார், சாரல் எனப் பல பெயர்களில் கதை எழுதியனுப்ப... எல்லாம் சுவரில் பட்ட பந்தாக பத்திரிகை ஆஃபீஸிலிருந்து திரும்பி வரும். சாரதி அப்பாதான் அதிலுள்ள குறைகளைச் சொல்லுவார்.

வருடங்கள் செல்லச் செல்ல எங்கள்

நட்பு அடர்த்தியானது. குடும்பங்கள் அளவில் நெருங்கினோம். சாரதியின் அக்காக்களும், அண்ணன்களும், எங்களை அற்புதமாக அன்போடு வழிப்படுத்தினார்கள். புஷ்பாக்கா, உமாக்கா மற்றும் பாலா, தத்துவம், சரவணன் எல்லோருமே கலைத் துறையில் நாங்கள் வளர்வதற்காக நிறைய உதவியிருக்கிறார்கள்.



✱ பார்த்தசாரதி

நான் பி.எஸ்ஸி., படித்தபோது சாரதி எம்.எஸ்ஸி., கெமிஸ்ட்ரி படித்தார். அப்போது அவர் ஆயில் பெயிண்டிங் வரைய ஆரம்பித்தார். அதிலும் பிரமாதமாக வரைந்தார். எவ்வளவு முயற்சித்தும் என்னால் அவர் அளவுக்கு வரைய முடியவில்லை. ஒருமுறை எனது டைரியில் பேனா ஓவியங்களைப் பார்த்தவர், ''உனக்கு கார்ட்டூன் நல்லா வரும்னு நினைக்கிறேன். நல்லா விடாம ப்ராக்டீஸ் பண்ணேன்'' என்றார்.

கல்லூரி முடித்து விகடனில் எனக்கு வேலை கிடைத்தபோது, துள்ளிக் குதித்து சந்தோஷப்பட்டவர் சாரதிதான். ட்ரீட்மெண்ட் காரணமாக அவரால் சென்னைக்கு வர முடியவில்லை. அந்த வருத்தம் எனக்கும் உண்டு. அடிக்கடி கடிதம் எழுதுவேன். மதுரை போகிறபோது இரவு விடிய விடியப் பேசுவோம். எனது கார்ட்டூன்களின் தன்மையை அலசி ஆராய்வார். எனக்கு அது உதவியாக இருக்கும்.

விகடனை விட்டு சினிமாவுக்குப் போகப் போகிறேன் என்றபோது, பலரும் வேண்டாம் என்றபோது, அவர்தான் தோள் தட்டி ஆதரித்தார். ''நல்ல விஷயம்... கஷ்டப்பட்டா பரவாயில்லை... நீ நினைச்சதை அடையணும். அதுதான் முக்கியம்!'' என்றார். சாரதி மதுரையிலேயே கம்ப்யூட்டர் சென்டர் ஒன்று தொடங்கினார். மதுரை செல்லும்போதெல்லாம் சென்டரில் உட்கார்ந்து என் சினிமா அனுபவங்களைப் பேசுவோம். அப்போது நான் மதுரையையே மறந்து விட்டிருந்த, பாண்டவர் பூமி ஷூட்டிங் சமயம். ஒருநாள் மாம்பலம் மேன்ஷனில் துவைத்துக் கொண்டிருந்தபோது ஃபோன் வந்தது, சாரதி உடல் நலக்குறைவால் இறந்து விட்டாரென! சின்ன வயதிலிருந்து வந்த இருதயக் கோளாறு! எனக்கு உலகின் மொத்த சப்தங்களும் நின்று போயின. சோப்புக் கையோடு வெகுநேரம் ஃபோன் அருகிலேயே உட்கார்ந்திருந்தேன்.

இன்று என் நண்பர் என்னுடன் இல்லை. 'இம்சை அரசன் 23-ம் புலிகேசி'யையும், 'அறை எண் 305ல் கடவு'ளையும் அவர் பார்க்கவில்லை. என்றாலும் என்



படைப்பாற்றல் எனும் சிறிய விதை அவரால் பக்குவப்படுத்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டதுதான். இதெல்லாம் அவருடைய கனவுகளும்தான்! நன்றி, சமர்ப்பணம் என்பவைகளையும் கடந்து நான் பார்த்தசாரதிக்கு எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன். என்றும் நினைத்திருப்பேன்.

(பேசுவேன்)

நியூஸ் ஸ்டேஷன்

இசைக் கச்சேரி என்றால் பக்க வாத்தியங்கள் வயலின், ட்ரம்ஸ், கிதார் என்றுதான் இருக்கவேண்டுமா என்ன?

வியன்னாவில் இளைஞர் குழு வொன்று, காய்கறிகளைக் கொண்டு கச்சேரி நடத்த ஆரம்பித்திருக்கிறது. பலவிதமான காய்கறிகளை, சந்தையில் வாங்கி, அவற்றிலிருந்து இசையை வரவழைக்கிறது இந்த இளம் இசைக் கூட்டணி.

'இதுவொன்றும் நகைச்சுவை அல்ல, சவால்' என்று ஆர்ப்பரிக்கிறார் இசைக் குழுவை நடத்தும் ஜோர்க் பிரிங்கர் என்ற இளைஞர்.

மேடையில், பூசணிக்காயை வைத்து அதை வெள்ளரிக்காயால் அடித்தால் எழுகின்ற சப்தம், காதுகளில் இசையாகத்தான் நுழைகிறதாம். மைக்ரோஃபோன் உபயத்தில் ஒலித்துல்லியம் வேறு.

வல்லவனுக்கு வெள்ளரியும் வாத்தியம்.

இங்கிலாந்தின் இளைய இளவரசர் ஹாரி, கனடா நாட்டில் போர்ப்பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தார். பயிற்சியைப் பாதியில் விட்டுவிட்டு அவசர அவசரமாக லண்டனுக்குத் திரும்பினார்.

ஏன்?

ஹாரியின் காதலி ஷெல்லி டேவிக்குப் பல்வலி. காதலனைப் பார்க்க வேண்டும் என்று அவர் பதறித் துடிக்க இளவரசர் ஓடி வந்துவிட்டார்.

லீட்ஸ் பல்கலைக்கழக மாணவியான டேவி, இளவரசரை விரைவில் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுக்கப் போகிறாராம்.


ஜப்பான் நாட்டின் டோக்யோ நகரத்துக்கு அருகிலுள்ள ஒரு உணவகத்தில், சப்தமில்லாமல் ஒரு ஆச்சர்யம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு வரும் வாடிக்கையாளர்களை வரவேற்றுப் பரிமாறும் சர்வர்கள் இரண்டு குரங்குகள்.


'யாட்-சன்', 'புகு-சன்' என்று பெயர் கொண்ட அந்த இரண்டு குரங்குகளும், பார்க்கும் வேலைக்கு என்ன சம்பளம் தெரியுமா?

பட்டாணி.

வருகிற வாடிக்கையாளர்கள் டிப்ஸாகக் கொடுப்பது சோயா.

குட்டிக் குரங்கான புகு-சன், ஆர்டர் செய்வதற்கு முன்பு கைகளைச் சுத்தம் செய்துகொள்வதற்காக டவல் கொடுத்து அசத்துகிறதாம்.





எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் டிக்ஷனரி பார்க்காதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. ஆனால் பார்ப்பவர்கள் படிக்கவும் செய்வார்களா?

நாளைக்கு இரண்டு பக்கம் என்று



காய்கறிக் கச்சேரி!

மொத்த டிக்ஷனரியையும் எத்தனை நாளில் படித்து முடிக்கலாம் என்று திட்டம் போட்டு, நான்காம் நாளே அதை மறந்தும் விடுவது தான் எல்லோருக்கும் பொதுவான வழக்கம்.

ஆனால், நியூயார்க்கைச் சேர்ந்த அமோன் ஷேயா என்பவர், ஆக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் இருபது வால்யூம்



களையும் ஒரே வருடத்தில் படித்து முடித் திருக்கிறார்.

மொத்தப் பக்கங்கள் 21,730. மொத்த வார்த்தைகள் ஐந்து கோடியே தொண் ணூறு லட்சம்.

சீன இளைஞர்களுக்கு ஃபிரான்ஸ் மோகம் பிடித்து ஆட்ட ஆரம்பித்திருக் கிறது. தங்கள் ஜோடிகளை ஃபிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துப்போய், ஃபிரான்ஸ் சம்பிரதாயப்படி மீண்டுமொரு தடவை திருமணம் செய்துகொள்வது ஒரு ஃபேஷ னாக மாறியிருக்கிறது.

சீனத்து குட்டித் தேவதைகள் வெண் ணிற ஆடையில் மின்ன, க்ரே கலர் கோட்-சூட் அணிந்த சீனத்து இளைஞர்கள் கைகோத்து நடக்கிறார்கள். மோதிரம் மாற்றிக்கொண்டபிறகு, கட்டிப்பிடித்து ஃபிரெஞ்ச் ஸ்டைல் முத்தம் வேறு. பின்னணியில் ட்ரம்பெட் இசை...

ஃபிரான்ஸில் இந்தத் திருமணங்களுக் கான செலவு பத்தாயிரம் யூரோக்களைத் தாண்டிவிடும். சீனப் பயணிகளை கவனத் தில்கொண்டு, மொத்தமாக நாற்பது, ஐம்பது திருமணங்களை ஒரே இடத்தில் நடத்தி, சிக்கனம் செய்து செலவைக் குறைக்கின்றன சுற்றுலா நிறுவனங் கள்.

இக்கரைக்கு அக்கரை பச்சை.

– ஸாந்த்

முதல் டெஸ்டில் எப்படியோ தப்பிப் பிழைத்து விட்டது இந்திய அணி. கும்ப்ளேவைத் தவிர எல்லோருமே சிறு பங்களிப்பை அளித்து, தங்கள் தலையைக் காப்பாற்றிக் கொண்டார்கள். ஆஸ்திரேலிய அணியுடன் ஆடி, வெற்றியோ டிராவோ, அதைச் சுலபமாக அடைவது இந்திய அணி மட்டும்தான்.

சொன்னது போல தங்களுடைய நவசிந்தனைகளை மைதானத்தில் காண்பித்து தனித்துவம் காட்டிவிட்டது ஆஸ்திரேலியா. இந்திய வீரர்களின் பலங்களை மட்டும் ஆராய்ந்து அதற்கேற்றவாறு ஆட்களை மைதானத்தில் நிறுத்தினார் ரிக்கி பாண்டிங். இந்திய வீரர்களும் ஆஸ்திரேலிய அணியின் உத்திகளுக்குச் சாய்ந்தார்கள். ஒரு மாதத்துக்கு முன்பே எதற்காக இந்தியாவுக்கு வந்திறங்கினார்கள் என்பது இப்போது புரிகிறது. அதே நேரம் உடல்நலத்திலும், அணிக்குத் தலைமை தாங்குவதிலும் பலவீனமாகக் காணப்பட்டார் அனில் கும்ப்ளே. அவர் ஓடி ஆண்ட மைதானத்தில், ஐம்பது ஓவர்களுக்கு மேல் வீசியும் விக்கெட் எதுவும் எடுக்காதது, அவருடைய தலைமை குணத்தைப் பாதித்தது. சில சமயங்களில் தோனி அவரின் பணியை ஏற்றுக் கொண்டார். பந்து வீச்சாளர்களும் தங்களுக்கு வேண்டிய ஃபீல்டிங் செட்-அப்பைக் கேட்டு வாங்கிக்கொண்டார்கள்.

கும்ப்ளே செயலிழந்த நிலையில், இந்திய அணியின் இதர பந்துவீச்சு சொல்லிக் கொள்ளும்படியாகத்தான் இருந்தது. கபில்தேவுக்குப் பிறகு அதே வெறி, அதே கடும் உழைப்பு ஜாகிர்கானிடம் தென்படுகிறது. சாமுராய் போல மைதானத்தில் போராட்டம் நடத்தி இறுதியில் அவர் வெற்றி பெறுவதைப் பார்ப்பது என்பது கண்ணுக்கு விருந்து. அடுத்த பத்து வருடங்களுக்குக் கவலை இல்லை என்று, ஜாகிர் கானையும் இஷாந்த் சர்மாவையும் பார்க்கும்போது தோன்றுகிறது. கும்ப்ளேவுக்குப் பதிலாக அவர் இடத்தை பியூஷ் சாவ்லா கைப்பற்ற வேண்டும். அப்போதுதான், போட்டி மனப்பான்மையில் தன் பழைய திறமைகளை ஹர்பஜனால் மீட்டெடுக்க முடியும்.

கங்குலி





கழுத்தில் கத்தி?



நீண்ட நாளைக்குப் பிறகு, இரண்டாவது இன்னிங்ஸில் சச்சின் பொறுப்பாக ஆடி அணியைக் கரை சேர்த்தார். அதுவும் கங்குலியிடம், கடந்த இரண்டு வருடங்களில் பார்க்காத பொறுமையும் பொறுப்புணர்வும் தென்பட்டது. ஒருவேளை கங்குலி இல்லாமல் போயிருந்தால், முதல் டெஸ்டில் இந்திய அணி தோற்றுக்கூடப் போயிருக்கும். அணைகிற விளக்கு பிரகாசமாக எரிந்து அணையுமாம். கங்குலிக்கு இது மெத்தப் பொருந்தும்.

இன்றைக்கு மீடியாவின் ஆப்த சிநேகிதராக இருக்கிறார் கங்குலி. எதிர்பார்த்தது போலவே பேட்டியின் போது காரசாரமாகப் பேசிவிட்டு, பிறகு 'நான் அப்படி எதுவும் பேசவில்லை' என்று சத்தியம் செய்திருக்கிறார். மைதானத்தில் அத்தனை பேர் பார்க்கும்போதே உணர்ச்சிவசப்படுபவர் கங்குலி. தனி அறையில் பேட்டி தரும்போது அச்சில் வந்தது போல பொங்கியிருக்கலாம். நிலைதடுமாறிப் பேசியிருக்கலாம். பேசியபிறகு வருந்தினாலும், கங்குலி கூறியதாக பத்திரிகையில் வெளிவந்ததுதான் காலத்துக்கும் நிற்கும்.

கங்குலி சொன்னதுபோல, அவர் தலைமேல் மட்டும் எப்போதும் கத்தி தொங்கிக்கொண்டிருப்பது கிடையாது. அப்படித் தொங்கியிருந்தால் அவர் எப்போதோ அணியிலிருந்து காணாமல் போயிருப்பார். இந்திய அணியில் ஆரம்பத்தில் கொஞ்சம் சாகசம் காட்டிவிட்டால், அதைக் கொண்டே இரண்டு வருடங்கள் ஓட்டிவிடலாம். அப்படித்தான் கடந்த ஒரு வருடமாக தினேஷ் கார்த்திக் வண்டி ஓட்டிக்கொண்டிருக்கிறார். கும்ப்ளேவும் ஓய்வு பெறுவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. ராகுல் திராவிட் முதல் டெஸ்டில் ஆடியது போல அடுத்து இரண்டு டெஸ்டுகள் ஆடினால், அவராக விலகிவிட வாய்ப்பிருக்கிறது. சச்சினைப் பொறுத்தவரைக்கும், அவர் என்ன முடிவெடுக்கிறாரோ அதுதான் வாரியத்தின் முடிவும். ஒருவழியாக இந்திய அணி மீது 2009 முதல் புதிய காற்று வீசப் போகிறது. தோனியின் முழு பலமும் (அல்லது பலவீனமும்) அப்போதுதான் தெரியப் போகிறது.

• ச.ந.கண்ணன்

கிரேஸியைக் கேளுங்கள்

கி. ராமமூர்த்தி, சென்னை

பெண்களின் 'இடையை' சிற்றிடை, மெல்லிடை, கொடியிடை, நூலிடை என்கிறார்கள்... புதுசாக ஓர் உவமை?

பெண்களுக்கு இருக்கும் அழகு என்னும் 'ஆஸ்தி'கத்தைச் சுமக்கும், இல்லை என்னும் 'நாஸ்திகமே' இடை.

பி.சிவா, பாளையங்கோட்டை

பெண்களுக்குத் தித்திப்பது திருமண நாளா... பிறந்த நாளா...?

புகுந்த வீட்டுக்குச் செல்லும் பெண், தாய்மை எனும் அந்தஸ்த்தைப் பெற, புதிதாகப் பிறக்கிறாள். எனவே, திருமண நாள்தான் அவளுடைய பிறந்தநாள்.



வாசுதேவன், அமிரோலி பம்பாய்

'பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்' என்று கூறுகிறார்களே, அப்படி என்றால் வெற்றி பெற அதிர்ஷ்டம் தேவையா?

'இன்று போய் நாளை வா' என்று இதைத்தான் ராமன் வேறுவிதமாக ராவணனுக்குச் சொன்னான். 'அவகாசம் தருகிறேன்; இன்று போய் யோசித்துப் பார்; நாளை 'லக்கு'மியை (சீதையை) வந்து என்னிடம் ஒப்படைத்துவிடு. அதுதான் உனக்கு 'Luck'கு' என்ற ராமனின் எச்சரிக்கையை, பத்து தலை இருந்தும் 'மக்கு' ராவணன் புரிந்துகொள்ளவில்லை. வெற்றி பெற, கிடைத்த அவகாசத்தை பயன்படுத்திக் கொள்ளும் அறிவு தேவை. ஆனால், ஒன்று அவகாசம் கிடைக்க அதிர்ஷ்டம் அவசியம் தேவை.

வைஷ்ணவி, ஸ்ரீரங்கம்

கிரேஸியால் மறக்க முடியாத தீபாவளி எதுவோ...?

1952ம் வருடத்தில் அக்டோபர் மாதம் வந்த தீபாவளி. மறக்கமுடியாத அந்தத் தீபாவளி அன்று நிகழ்ந்தது எல்லாமே, துரதிருஷ்டவசமாக எனக்கு மறந்துவிட்டது. ஒன்றே ஒன்றைத் தவிர. அன்று நான் அழுதேன். நகைச்சுவை எழுத்தாளராக வருவேன் என்று தெரிந்திருந்தால், 'நான் சிரித்தால் தீபாவளி' என்று வாய்விட்டு நிச்சயம் சிரித்திருப்பேன். அந்தத் தீபாவளி அன்று பிறந்ததால் வேறு வழியில்லாமல், 'நான் அழுதால் தீபாவளி' என்று ஆகிவிட்டது. பி.கு. நகைச்சுவை உணர்வு உள்ளவன் என்பதை நிரூபிப்பதுபோல, 'கோ' வென்று அழுவதற்குப் பதிலாக 'சோ'வென்று அழுததாக என் அப்பா சொன்னார்.

என்.கோமதி, நெல்லை

'தேமே'ன்னு இருக்க சொல்றாங்களே... அப்படீன்னா இன்னா மீனிங்பா...?

தன் முயற்சியை நம்பாது, 'தெய்வமே' என்று சரணாகதி செய்து இருப்பது. 'தெய்வமே'தான் மருவி 'தேமே'ன்னு ஆகிவிட்டது. மேலும் வடமொழியில் 'தே' என்றால் 'கொடு'; 'மே' என்றால் 'எனக்கு.' பலனைத் தெய்வத்திடம் விட்டு தேமேன்னு கர்மத்தைச் செய்தால், உனக்கு

தித்திப்பது



திருமணநாளா... பிறந்த நாளா..?

வேண்டியது கொடுக்கப்படும்; 'ஆமென்...!'

குமாரசாமி, காட்பாடி
பதவி வெறி பிடித்தவர்களுக்கு அழிவு எங்கு வரும்?

'இரணியனுக்கு' வந்தது போல, 'சிம்மா'சனத்திலேயே அழிவு வரும்; தெய்வம் அமர்ந்தும் கொல்லும்.

அ.ஷண்முகசுந்தரம், பெங்களூர்
மயிலாப்பூரிலேயே இருந்தாலும், எந்தப் போலீஸ்காரராவது, தன் மகனுக்கு 'கபாலி' என்று பெயர் வைப்பாரா...?

சர்தான் சார்... மயிலாப்பூருக்குக் காவல் தெய்வமே கபாலீஸ்வரர்தான். பெண் போலீஸ் மேடம் கற்பகாம்பாள்.

என்.காளிதாஸ், சிதம்பரம்
மன்னிக்கமுடியாத குற்றம் எது?

மன்னிக்க மறுக்கும் பிடிவாத 'மன்னிதனாக' இருப்பது.

ஜே.துரைராஜ், சென்னை
கலைமாமணி பூர்ணம் விஸ்வநாதன் மறைவு?

நமக்கு நஷ்டம்; சொர்க்கத்துக்கு லாபம். பூர்ணம் சார் நடித்த 'நரேந்திரனின் விநோத வழக்கு' நாடகத்தை எழுதிய சுஜாதா, நிச்சயம் பூர்ணம் வருவது தெரிந்தது, 'தேவேந்திரனின் விநோத வாழ்க்கை' என்ற நாடகத்தை எழுதி ரெடியாக வைத்திருப்பார். இந்நேரம் அந்த நாடகம், 'இந்திரசபா'வில் அரங்கேறியிருக்கும்.

ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி
இரேணியாரே, ஏழைப் பங்காளன் என்றால் என்ன...?

இப்போதெல்லாம், ஏழையின் பங்கை ஆள்பவனே ஏழைப் பங்காளன் என்றாகிவிட்டது.

வஸந்த காலம்

ஆ! 'வஸந்த காலம்' என்று சொன்னதும் எத்தனை எத்தனை இன்பமான நினைவுகள் உண்டாகின்றன? அந்தச் சொற்றொடரைக் கேட்டதும் கிழவர்கள் குமரர்களாகின்றனர்; குமரர்கள் குழந்தைகளாகின்றனர்; குழந்தைகள் சிசுக்கள் ஆகின்றனர்; சிசுக்கள் கருக்காளாகி விடுகின்றன! ஆஹா! வஸந்த காலத்தின் மஹிமையே மஹிமை!

வஸந்த காலம் என்றதும் காளிதாஸனின் சாகுந்தல நாடகத்தில் வரும் வஸந்த கால வர்ணனை ஞாபகம் வரப் பெறாதவர் யார்? அந்த வர்ணனை ஞாபகம் வந்ததும், மாந்தளிர்களையும் மாம்பூக் கொத்துக்களையும் நினைத்துக் கொள்ளாதிருக்க முடியுமா? மாம்பூ ஞாபகம் வந்ததோ இல்லையோ, மாம்பழம் யாருக்குத்தான் ஞாபகம் வராமலிருக்கும்? அதுவும் உயர்ந்த மல்கோவா மாம்பழத்தை நினைத்துவிட்டால் நாவில் ஜலம் சொட்டப் பெறாதவர் யாரோ உளர்? இதிலிருந்து, மாம்பழத்தின் சுவை அறிய முடியாத ஆங்கில நாட்டாரிடம் அனுதாபம் பிறத்தலும் இயல்பேயல்லவா?

எங்கள் வீட்டுச் சுற்றுப்புறத்தில் எங்கும் மாமரத்தைக் காணோம். ஆனால், அழகான வேப்ப மரங்கள் இரண்டு இருக்கின்றன. காலையில் எழுந்து பார்த்தால், தரையெல்லாம் வேப்பம்பூ பரப்பியிருக்கிறது. சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பூக்கள் அவ்வளவும் வாடி வதங்கி, கருகிப் போகின்றன. ஆழ்ந்து நோக்கினால், உலக வாழ்க்கையில் இவ்வாறு உயர்ந்த முயற்சிகள் பல உலர்ந்து, கருகி வீணாகிப் போவதைப் பார்க்கிறோமல்லவா? பகவத் சிருஷ்டியின் மர்மமே மர்மம்.

ஆனால், வஸந்த காலத்துக்கும் வேதாந்தத்துக்கும் வெகு தூரம். வஸந்த காலத்தின் அதிர்ஷ்டமான தெய்வம் மன்மதன் அன்றோ? இவ்விரண்டு மாதமும் மன்மதன் வெகு சுறுசுறுப்பாயிருப்பான் என்று சொல்லப்படுகிறது.

ஓர் இளநங்கையின் மீது அந்தப் பாவி மன்மதன் பாணம் தொடுப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அதுசமயம் அவளுடைய புருஷன் இவளைத் தன்னந்தனியே விட்டுவிட்டு வேட்டையாடச் சென்றிருக்கிறான். அந்தச் சமயம் பார்த்து சுத்த வீரனான மன்மதன் தனது பராக்கிரமத்தைக் காண்பிக்கிறான், அந்தப் பெண் என்ன சொல்லுகிறாள் தெரியுமா? ''மன்மதா! உலகிலேயுள்ள இராஜாங்கங்கள் எல்லாம் ஆயுதப் பரிஹரண முயற்சி நடத்தி வருவது உனக்குத் தெரியாதா? இதற்காக எத்தனையோ கூட்டங்கள், மகாநாடுகள், ஆலோசனைகள் நடக்கின்றனவே?

நீயும் ஏன் உன் ஆயுதங்களைப் பரிஹாரணம் செய்துவிடக் கூடாது?'' என்கிறாள். அதற்கு மாறன் சொல்கிறான்: ''பெண் பேதாய்! உலகிலுள்ள வல்லரசுகள் உண்மையில் ஆயுதப் பரிஹாரணம் செய்யும்போது, நானும் என் ஆயுதங்களைப் போட்டு விடுகிறேன்!'' என்று.



மன்மதனுக்கு உகந்த இந்த இளவேனிற் காலத்தில் எங்கெங்கும் கல்யாணங்கள் நடைபெறுதல் இயல்பேயன்றோ? எங்கே பார்த்தாலும் மேளச் சத்தம் காதைத் துளைக்கின்றது. மலர்களின் நறுமணமும், சந்தனத் தூள் சுகந்தமும், பன்னீர் வாசனையும் கமகமவென்று வீசுகின்றன.

கல்யாணங்களிலே மாப்பிள்ளைகள் திவ்யாலங்கார பூஷிதர்களாய்ப் பரதேசம் போகும் காட்சிதான் மிக இனிமையானது. பரதேசம் புறப்படும் மாப்பிள்ளை ஒருவரை, யாரும் தடுத்து நிறுத்தாமற் போனால் அவருடைய கதி என்னவாகும் என்று நமது சித்திரக்காரர் கேட்கின்றார். அதை நினைத்தாலே பிரம்மசாரியப் பிள்ளைகள் கதிகலங்கிப் போகிறார்கள்.

நாகரிகம் முற்றிப்போன இந்தக் காலத்திலுங்கூடக் கலியாணங்களில் நலங்கு நடத்தாமல் இருப்பதில்லை. ஆனால், ஒரு வித்தியாசம் உண்டு. அந்நாளிலெல்லாம் மணப்பெண் மாப்பிள்ளையின் முன்னால் நாணிக்கோணி நின்றுகொண்டு, பக்கத்திலிருப்பவர்கள் வெகுவாகத் தூண்டியதன் மேல்,

''நலங்கிட வாரும் ராஜா
நாணயமுள்ள
துரையே!''

என்று அழைப்பதும்,

அமரர் கல்கி

மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வெட்கப்பட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டு, சீக்கிரம் எழுந்துவிட்டால் யாராவது பரிகாசம் செய்யப் போகிறார்களே என்று இடித்த புளியைப் போல் உட்கார்ந்திருப்பதும் வழக்கம். இந்த நாளிலோ நலங்குக்கு அழைக்க மணப் பெண் குறிப்பிட்ட காலத்தில் 'பங்க வலா'க வராவிட்டால், மாப்பிள்ளை மணப்பெண்ணைத் தேடிக்கொண்டு கிளம்பிவிடுகிறார்.

வஸந்த காலத்திலேதான் கோயில்களில்கூட வஸந்தோற்சவங்களும் திருக்கல்யாண உற்சவங்களும் நடைபெறுகின்றன. நமக்கெல்லாம் சாதாரணமாக, வாழ்க்கையில் ஒருமுறைதான் கல்யாணம். கோயில் தெய்வங்களுக்கோ வருஷாவருஷம் கல்யாணம்!

வஸந்த காலத்தின் இன்பத்தை அதிகமாக்குவது மந்தமாருதமாகும். இக்காலத்தில் தெற்குத் திக்கிலிருந்து வரும் இனிய குளிர் பூங்காற்று உள்ளத்தையும் உடலையும் பரவசப்படுத்துகிறது.

ஆனால், இளந்தென்றலின் சுகத்தை முழுதும் அனுபவிக்கிறவர்கள் கிராமவாசிகளேயாவார்கள். உடம்பையெல்லாம் அநாவசியமாக உடைகளால் மூடிக்கொண்டு அலையும் நகரவாசிகளுக்குத் தென்றலின் இன்பம் எங்கே தெரியப் போகிறது? இந்த ஓர் அம்சத்தில் கிராமவாசிகள் பட்டணவாசிகளைவிடக் கொடுத்து வைத்தவர்களே, உடம்பை மூடிக்கொள்ளும் அளவுக்குத் துணி வாங்க அவர்கள் கையில் பணம் சேராமல் பார்த்துக்கொண்டு வரும் பிரிட்டிஷ் சர்க்காரைப் போற்றுவோமாக!

நகரவாசிகளிலும், விதேசித் துணி அல்லது ஆலைத் துணி அணிகிறவர்களை விட, கதர் உடை தரிப்பவர்கள் இந்த விஷயத்தில் பாக்கியவான்கள். சீமைத் துணியானது ஒரே அளவாக இயந்திரத்தில் நூற்ற நூலைக் கொண்டு நெருக்கமாக நெய்யப்படுவதால், அதனுள் காற்று நுழைவதற்கு அணுவளவும் இடமில்லை. கதரோ சமமில்லாத கை நூலால் விசாலமாக நெய்யப்படுவதால் துணி முழுவதிலும் காற்று நுழையக் கூடிய மிகச் சிறியதான துவாரங்களைப் பெற்றிருக்கிறது.



குறும் கவிதை

யாரும்
அடிமைப்படுத்த
முடியாத என்னை
எந்த ஆயுதமும்
இல்லாமல்
எப்படி
அடிமைப்படுத்திக்
கொண்டாய்
சில்லென்று குளிரும்
சிரிப்பால்!

– செந்திலன்

நண்பர்களே நான் தோல்வியடைந்துவிட்டதை ஒப்புக்கொள்கிறேன். அதே போல் உங்கள் அனுதாபத்துக்குரியவன்.

'வஸந்த கால'த்தைப் பற்றி ஏன் எழுத ஆரம்பித்தேன் தெரியுமா? சமீபத்தில் வெளியான ஒரு புத்தகத்தில் நான் படித்த பின்வரும் வாக்கியங்கள்தான் என்னை அவ்வாறு எழுதத் தூண்டின;

'பத்திரிகைகள் உண்டாக்கப் படும் அவசரத்தைக் கவனித் தால் அவற்றில் இலக்கியத் தன்மை இருப்பது அரிது. இருந்தபோதிலும், தமிழில் நல்ல ஹாஸ்யச் சுவையுட னும் இலக்கியத் தன்மை யுடனும் எழுதும் 'கல்கி' என் பவர் இப்போது பத்திரி கைத் தொழிலில் இருந்து வருகிறார். நவீன நாகரிகத் தாலும் தேசிய இயக்கத்தா லும் மோதுண்ட தமிழரின் வாழ்க்கையைத் தமக்குப் பொருளாகக் கொண்டு, அதன் பல அம்சங்களின் வேடிக்கைகளையும் விநோ தங்களையும், விபரீதங்களையும், எளிய தாய்ப் புரியும்படி நகைச்சுவை நிரம்பி யதாயுமுள்ள ஒரு வசன நடையைக் கைக்கொண்டு பல கட்டுரைகளில் காட்டி யிருக்கிறார். தமிழர், 'கல்கி'யின் மூலம் நகைச்சுவை இன்னதென்று அறிந்து அனுபவித்து வருகிறார்கள். நகைச்சுவை யுடன் எழுதக்கூடிய தமது சந்தர்ப்பத் தைப் பத்திரிகைகளுக்கு வேண்டிய அவ சரத்துடனும் பரபரப்புடனும் பிரசார மனப்பான்மையுடனும் பல விஷயங் களைப் பற்றி எழுதுவதில் பூராவும் உபயோகப்படுத்திவிடாமல், நிரந்தர மான இலக்கியத் தன்மையுடன் கல்கி எழுத வேண்டுமென்று தமிழ் அபிமானி கள் எதிர்பார்ப்பார்கள்.

இப்போது தெரிகின்றதல்லவா? தமிழ் அபிமானிகளுக்கு ஏமாற்றமளிக் கக் கூடாதென்னும் எண்ணத்துடனே பிரசார மனப்பான்மையின்றியும் நிரந்தர மான இலக்கியத் தன்மையுடனும் எழுத வேண்டுமென்று கருதித்தான் 'வஸந்த கால' வர்ணனை தொடங்கினேன். அது, ஆலைத் துணியைவிடக் கதர் ஏன் சிலாக்கியமானது என்று காட்டுவதில் வந்து முடிந்தது.

ஆகையால், தமிழபிமானிகளே! பிர சார மனப்பான்மையில்லாத நிரந் தரமான இலக்கியத் தன்மையுடன்கூடிய கட்டுரைகளைத் தயவுசெய்து என்னிடம் எதிர்பாராதீர்கள். அத்தகைய கட்டுரை களை, தமிழ்நாட்டில் தோன்றப் போகிற நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நவீன ஆசிரியர்களிடமிருந்து எதிர் பாருங்கள். நான் என்னமோ இத்தனை நாளும் பிரசாரத்துக்கென்று எழுதியே காலம் தள்ளி விட்டேன். பாக்கியுள்ள காலமும் அப்படியே தள்ளிவிட்டுப் போகிறேன்.

எனவே, நண்பர்களே! வஸந்த காலத்தில் கதர் அணியுங்கள். சுதே சியத்தையும் கடைப்பிடியுங்கள். மது பானத்தை ஒழியுங்கள். தீண்டாமையை விலக்குங்கள். கா... (இதைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.)

பாரத மாதாகி ஜே! வந்தே மாதரம்!

– ஆனந்தவிகடன், 01.05.1933

திரள் கவிதை

உனது
புன்னகையை
மொத்தமாய்ச்
சேர்த்து
வைத்துள்ளேன்
ஒருநாள்
அதையெல்லாம்
கொடுத்து
வட்டியாய் வாங்கிக்
கொள்வேன்
முத்தமாய்.

– செந்திலன்



கதவைத் தட்டும் டிஸையர்!

சர்க்கரை நோய் உள்ளவர்களுடைய வாழ்க்கையும் இனிப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 2005 ஆம் ஆண்டில் சுந்தர் டயபடிக்ஸ் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது, 'டிஸையர் ஸ்வீட்ஸ்'. இன்று சென்னையில் இரண்டு, ஹைதராபாத்தில் இரண்டு, பெங்களூரில் ஒன்று... என கிளைகள் பரப்பி பெரிய அளவில் வெற்றி கண்டுள்ளது...

''டிஸையர் ஸ்வீட்ஸில் இந்த வருடத் தீபாவளிக்கு என்ன ஸ்பெஷல்?'' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் லாவண்யாவிடம் கேட்டோம்...



லாவண்யா


''டயபடீஸ்காரர்கள் டிஸையர் ஸ்வீட்களை மிகவும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்பதால், சமீபகாலமாக டிஸையர் ஸ்வீட்களை வாங்கிக் கொண்டு போய் டயபடீஸ் உள்ளவர்களுக்குப் பரிசளிப்பது அதிகரித்துள்ளது. 'ஒரே ஸ்வீட்டை கால் கிலோ அல்லது அரை கிலோ அளவுக்குப் பரிசளிப்பதற்குப் பதிலாக, பலவிதமான ஸ்வீட்கள் கலந்த 'அசார்ட்டட் ஸ்வீட்' ஆக இருந்தால் இன்னும் ரசித்து, ருசித்து சாப்பிடுவார்களே!' என்று சில கஸ்டமர்கள் சொன்னார்கள். அதன்படி, இந்த வருடம் தீபாவளிக்கு 'அசார்ட்டட் ஸ்வீட்' கிஃப்ட் பேக்குகளை அறிமுகப்படுத்தி இருக்கிறோம்'' என்கிறார் லாவண்யா.

''இந்தத் தீபாவளி கிஃப்ட் பேக்குகள் கால் கிலோ மற்றும் அரை கிலோ அளவில் பேக்குகளாகக் கிடைக்கும். இதில் லட்டு, ஜாங்கிரி, பாதுஷா, பேடா, பர்ஃபி என நாவுக்கு ருசியான அனைத்து ரக ஸ்வீட்களும் இருக்கும். கால் கிலோ விலை 129 ரூபாய். அரை கிலோ ரூ.250. இந்த ஸ்வீட்களை பதினைந்து நாட்கள் வரை வைத்திருந்து சாப்பிடலாம்.

பல வெளியூர் வாடிக்கையாளர்கள் அட்வான்ஸாக டிமாண்டு டிராஃப்ட் எடுத்து எங்களுக்கு அனுப்பி வைத்து, தங்களுக்குத் தேவையான ஸ்வீட்களை அனுப்பி வைக்கும்படி கேட்கிறார்கள். இந்தத் தீபாவளிக்கு, நீங்கள் உங்களுடைய நண்பர்கள், உறவினர்களுக்கு டிஸையர் ஸ்வீட்களைப் பரிசளிக்க விரும்பினால், அதற்கு நாங்கள் வசதி செய்து தர முன்வந்திருக்கிறோம். ஸ்வீட் பேக்கின் விலையுடன் கூரியர் செலவையும் சேர்த்து எங்களிடம் செலுத்தினால், அவர்களுக்கு நாங்களே நேரடியாகத் தேவையான டிஸையர் ஸ்வீட்களை அனுப்பி வைக்கிறோம்.''

தொடர்புக்கு : 044-4212 1415

- மானஸா





ஒரு தடவைப் பார்க்கலாம்!



''என்னோட பிறந்த நாளும் கல்யாண நாளும் ஒண்ணா அமைஞ்சது ரொம்ப சங்கடமாயிருக்கு...!''

''ஏன்...?!''

''என் பிறந்த நாளைச் சந்தோஷமா கொண்டாட முடியலையே...!''

- லட்சுமி ஆவுடைநாயகம்

''நம்ம படத்தைப் பத்தி மோசமா விமரிசனம் எழுதியிருக்காங்கன்னா சொல்றே?''

''ஆமா சார், 'ஒரு தடவை பார்க்கலாம்'ன்னு போட்டுட்டு, 'சீக்கிரம் டீ.வி. யில் போடும்போது'ன்னு முடிச்சிருக்காங்க!''

- வெ. சீதாராமன்





''மனைவியைக் காணோம்னு புகார் கொடுத்திருந்தேனே சார்...?''

''அந்தப் புகாரைத் தான்யா நானும் தேடிக் கிட்டிருக்கேன்!''

- சீர்காழி வி. ரேவதி.



''என்னப்பா, ஒரு வடை கொண்டு வர்ற துக்கு இவ்வளவு நேரமா?''

''நீங்க 'மெது' வடைதானே சார் கேட்டீங்க?''

- லெ. நா. சிவகுமார்

மாலை வேளை. தொலைக்காட்சியில் கர்நாடக இசை ஒலித்துக்கொண்டிருக்க, பவித்ராவின் அப்பாவும் அம்மாவும் ரசித்துக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு பாடலையும் அப்பாவும் ஓரிரு வரிகள் பாடுவதும், அம்மா சமையலறையில் சின்னச்சின்ன காரியங்களை நடுநடுவே செய்தபடி கூடத்துக்கு வந்து உட்கார்ந்துகொண்டு, பாடலைப் பற்றி விமர்சனம் செய்வதும் பவித்ராவின் கவனத்தில் பதியவே செய்தன.

அவள் கடும் ஏமாற்றத்தில் இருந்தாள். மிகவும் நம்பிக்கையாக அவள் மால்குடி என்ற வார்த்தையை ஷிப்ராவின் சங்கேத வார்த்தையாகத் தட்ட, அது தவறு என்றாகிவிட்டதே.

திடீரென, ''இதென்ன வேடிக்கை. இப்படியெல்லாம் பாட்டு இருக்கா என்ன?'' என்று வியப்பும் சலிப்புமாக ஈஸ்வரன் கூற, ''எதைச் சொல்றீங்க?'' என்று புவனேஸ்வரி கேட்டார்.

'''பட்டுப்புடவையோ?'ன்னு தொடங்கற பாட்டு இருக்கா என்ன, நான் கேள்விப்பட்டதே இல்லையே!''

புவனேஸ்வரி அம்மாளின் சிரிப்பொலி கேட்டது. ''இங்கிலீஷிலே போட்டதாலே தப்பா படிச்சிருக்கீங்க. அது 'பட்டுப்புடவையோ' இல்லே. 'பாட்டுப் பாடுவாயோ.'''

ஈஸ்வரன் அசடு வழியச் சிரித்தவாறே சமாளிக்கும் விதத்தில், ''பாட்டுன்னா 'P'க்கு பக்கத்திலே ரெண்டு 'A' போடக்கூடாதோ? அப்போ 'பாட்டு'ன்னு தெளிவா படிச்சிருப்பேன்.''

அப்பா கூறியது தொடக்கத்தில் பவித்ராவிடம் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் சில விநாடிகளில் ஒரு தொடர்பு அவள் மூளையில் தோன்றியது.

வெகுவேகமாகக் கணினியை அடைந்தாள். நல்லவேளையாக ஏற்கனவே இண்டர்நெட் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இம்முறை ஷிப்ராவின் சங்கேத வார்த்தையாக 'MAALGUDI' என்று தட்டினாள். அடுத்தகணம் ஷிப்ராவின் மின்னஞ்சல் தகவல்கள் திரையில் தோன்றத் தொடங்கின. 'அனுப்பிய அஞ்சல்கள்' என்ற பகுதியில் க்ளிக் செய்தாள். 'அன்பான லட்சுமி' என்று தொடங்கியது ஒரு கடிதம்.

படிக்கப் படிக்க அதிர்ச்சிகள் காத்திருந்தன. அடக்க முடியாமல் அழுதாள். இரண்டு நாட்களுக்கு முன்னும் இதே போன்று அழும் சந்தர்ப்பம் அவளுக்கு நேரிட்டது.

தூரத்துச் சொந்தக்காரியான அந்த நர்ஸ் தனக்குத் தெரிந்ததை விளக்கினாள்.

''ஓ, அந்த ஷிப்ரா உன் சிநேகிதியா? அவளுக்கு இந்த மருத்துவமனைக்கு வரவே இஷ்டமில்லை போல. நுழையும் போதே தன் புருஷனிடம் அவள் முரண்டு பிடிச்சதைப் பார்த்தேன். 'யாரிடம் குறைன்னு எதுக்காகத் தெரிஞ்சுக்கணும்? ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்

நில்... கவனி... ~~செல்!~~ கொல்!





கலாமே'ன்னு சொன்னா. அதுக்கு அவ புருஷன் ஒத்துக்கலே. கோபமா உள்ளே நுழைஞ்சிட்டார்.''

அருணா சரண்யா

பவித்ராவுக்கு இந்த நெருடலான விஷயம் குறித்து, தான் ஒருமுறை ஷிப்ராவிடம் பேசியது நினைவுக்கு வந்தது. நாகரிகம் காரணமாகவும், தோழியின் மனத்தைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவள் அதுவரை தொடங்காதிருந்த அந்த நுட்பமான பகுதியை, ஷிப்ராவே வெளிப்படுத்திய நாளாக அது அமைந்திருந்தது.

வாடியிருந்த ஷிப்ராவின் முகத்தைப்

பார்த்து அதன் காரணத்தைக் கேட்டாள் பவித்ரா.

''ரொம்பக் கஷ்டமா இருக்கு பவித்ரா. நல்ல நாள்ன்னு நமஸ்காரம் செய்தால்கூட 'அடுத்த வருஷமாவது உனக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும்'னு வாழ்த்தறாங்க. ஆஃபீஸிலே அதிகம் தெரியாதவங்களெல்லாம் 'அந்த டாக்டரிடம் போ. இந்தக் கோவிலுக்குப் போ'ன்னு ஆலோசனை சொல்றாங்க. ஒரு நிமிடம்கூட என்னை இதை மறக்க விடமாட்டேன்றாங்க.''

ஷிப்ராவின் மனத்தில் இருப்பதை அறிந்துகொள்ள, இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகப்பட்டது. ''நீ என்ன நினைக்கிறே ஷிப்ரா?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''இன்னும் சில மாதங்கள் பார்த்த பிறகு ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம்ன்னு இருக்கேன்.''



''இது உங்க தாத்தா யூஸ் பண்ணுன சீப்புதானே?''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

''அதான், சீப்புக்கு பல்லே இல்லையே.''

- சீதாராமன்

''குரு இதற்குச் சம்மதிச்சுட்டாரா?''

''ஒத்துக்குவார்னு ஒரு நம்பிக்கைதான்.''

ஆனால், குரு இதற்குச் சம்மதிக்கவில்லை என்பது, இப்போது இந்த நர்ஸ் கூறுவதைக் கேட்டால் உறுதியாகத் தெரிகிறது.

''டாக்டரம்மா ரொம்ப சந்தோஷமா அவங்க ரெண்டு பேரையும் வரவேற்றாங்க. சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்? சோதனைக் குழாய் குழந்தை, செயற்கை முறை கருத்தரித்தல் அப்படீன்னு லட்சக் கணக்கிலே சம்பாதிக்கறவங்களாச்சே. வந்த உடனேயே ரெண்டு பேரையும் சில சோதனைகள் செய்துக்கச் சொன்னாங்க டாக்டரம்மா'' என்ற அந்த நர்ஸ் வேகமாக உள்ளே சென்றாள். கணினியில் எதையோ அவள் தேடுவது புரிந்தது. பிறகு மீண்டும் பவித்ராவிடம் வந்தாள்.

''குறை உன் சிநேகிதிகிட்டே இல்லை. அவள் புருஷன்கிட்டேதான். அந்த விதத்திலே அவங்க ரெண்டு பேரும் அதிர்ஷ்டக்காரங்கதான்.''

''நீங்க சொல்வது ரொம்ப முன்னுக்குப் பின் முரணாக இருக்குதே'' என்றாள் பவித்ரா குழப்பமாக.

''அடடா, முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் நான் பாட்டுக்கு எதையோ சொல்லிக்கிட்டிருக்கேனே. இங்க டெஸ்ட் செய்துக்கிட்டுப்போன ரெண்டு மாசத்திலே மறுபடியும் அவங்க வந்தாங்க. அப்போ மறுபடியும் டெஸ்ட் செய்தபோது உன் சிநேகிதி கர்ப்பமாகி இருப்பது தெரிந்தது. 'இது கொஞ்சம் மிராக்கிள்தான். ஒரே ஒரு விந்துகூட ஒருவரைத் தகப்பனாக்க முடியும். ஆனாலும் பொதுவாகக் கம்மியான செமன் கௌண்ட் இருக்கிறவங்களுக்கு இந்தப் பாக்கியம் அரிதாகத்தான் கிடைக்குது. வாழ்த்துக்கள்'னு சொல்லி அனுப்பினாங்க எங்க டாக்டரம்மா. மனசுக்குள்ளே 'என்னடா ரெண்டு லட்ச ரூபா போச்சே'ன்னு நினைச்சிருப்பாங்க.''

பவித்ராவின் கண்களில் தன்னையும் அறியாமல் அப்போது கண்ணீர் இறங்கியது. ஆக ஒருவழியாகத் தன் தோழிக்குத் தாய்மைப்பேறு கிட்டியிருக்கிறது. ஆனால், அதை முழுமையாக அனுபவிக்காமல் இறந்துவிட்டாளே!

கணினியில் எழுத்துகள் தொடர்ந்து ஊர்வலம் நடத்தின.

அடுத்தநாள் காலையில் பவித்ரா சிறிதும் எதிர்பாராத வகையில், அவள் வீட்டுக்குக் குமார் வந்திருந்தான்.

''மனசு கேக்கலை. யாராவது ஒருத்தரிடமாவது சொன்னாத்தான் என் பாரம் இறங்கும். தயவு செய்து மன்னிச்சுடுங்க'' என்று கூறத் தொடங்கினான் குமார். வெளிப்பட்டவை வார்த்தைகள் அல்ல, அமிலம்.

(தொடரும்)

''நன்னடத்தைக்காக உனக்குச் சிறைல தண்டனை குறைச்சுருக்காங்களே... எப்படி?''

''உள்ளே இருக்கற காலத்துலகூட மாமூல் கொடுத்தேன்!''

- அம்பை தேவா



லதானந்த்

கார் சவாரியும்

எழுத்தாளர் ஜெயமோகன் கோயமுத்தூர் வர்றார்ன்னு தெரிஞ்ச உடனே, இங்கிருக்கிற சில இலக்கியப் பேர்வழிங்ககிட்ட அவரோட ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு பண்ணலாமான்னு கேட்டேன். ''அவசியம் ஏற்பாடு பண்ணுங்க! அவர்கிட்ட செட்டில் பண்ண வேண்டிய கணக்கு நிறைய இருக்கு!'' உறுமிக்கிட்டே முஷ்டியை உயர்த்தியபடி சொன்னார் ஓர் இலக்கியப் பேரொளி! 'இது ஏதுடா வம்பா இருக்கு'ன்னு நெனைச்சுக்கிட்டே அந்த ஐடியாவ ட்ராப் பண்ணிட்டேன்.

ரயில்வே ஸ்டேஷனுக்கு நானே வரவேற்கறதுக்குப் போயிருந்தேன். அவரும் நானும் முன்னப்பின்னப் பார்த்துக்கிட்டது இல்லை. அதனால 'Lathananth welcomes Ajithan and family' அப்படின்னு கம்ப்யூட்டர்லே ப்ரிண்ட் அவுட் எடுத்துக்கிட்டு, என்னோட ஸ்டாஃப் ஒரு பையன்கிட்ட அதைக் கொடுத்து, நாகர்கோயில் ரயில்லேர்ந்து வர்றவங்களுக்குத் தெரியற மாதிரி கையில புடிச்சிக்கிட்டு என்கூட ஸ்டேஷன்ல நிக்கச் சொன்னேன்.

Lathananth welcomes Jayamohan and familyன்னு வெல்கம் போர்டு வைக்காம, Lathananth welcomes Ajithan and familyன்னு அவர் பையன் பேரோட நின்னோம். எல்லாம் ஒரு பாதுகாப்பு உணர்வுதான்! அவரோ ஒரு நாடறிஞ்ச ரைட்டர்! கோயமுத்தூர்க்காரவுங்க திடீர்னு ரூட் அவுட் ஆவுறவங்க. அவர்கிட்ட இலக்கியக் கணக்கு செட்டில் பண்ணலாம்னு யாராவது இலக்கியப் பேரொளிக்கு நமைச்சல் எடுத்திட்டா என்னா பண்ணறது? அதுக்குத்தான் அந்த ஐடியா!

ரயில் வேற முக்கா மணிக்கூறு லேட். (அட! அவர் கூட மூணு நாள் இருந்தது மணிக்கூறு பாசை நம்பளுக்கும் ஒட்டிக்கிச்சு!)

அவரோட எழுத்து மாதிரியே பேச்சும் ரொம்ப சுவாரஸ்யமா இருந்துச்சு.

அவர்கிட்ட என்னை ஆச்சரியப்படுத்தற விஷயம், இலக்கியம் தாண்டி ரொம்ப விஷயங்களைத் தெரிஞ்சு வைச்சிருக்கறதுதான்.

பேரூர் கோவிலுக்குள்ளே சுத்தி வந்துக்கிட்டிருக்கிறப்ப அங்க இருக்கற சிற்பங்களைப் பார்த்தவர், ''சீனர்களோட பாதிப்பு இந்தச் சிற்பங்களிலே பார்க்கலாம்''ன்னார். என்ன ஆச்சரியம்! பக்கத்திலிருந்த தூணைப் பார்த்தா ஒரு முனிவரோட சிலை. உற்றுப் பார்த்தா சைனாக்காரன் மூஞ்சியும் மீசையும் அச்சு அசலா இருக்கு!

அவலாஞ்சி போற ரோடு பாதி தூரம் மோசமாவும் மிச்ச தூரம் படுமோசமாவும் இருந்துச்சு. நம்ப வண்டியோ புத்தம் புது Accent. பார்த்துப் பார்த்து ஓட்டிக்கிட்டே போனேன்.

க்ரீமி லேயர் பத்தி அலசு அலசுனு அலசினார். இந்த மாதிரி பிரெயின் பாக்ஸ் எல்லாம் ப்ளானிங் கமிஷன் மாதிரியான இடத்துலே இருக்க வேண்டியவருன்னு மனசுக்குள்ளே நெனைச்சுக்கிட்டேன்.

எனக்கு ரொம்ப நாளா இருந்த சந்தேகங்கள் பலதையும் அவர்கிட்டே கேட்டுத் தெளிவடைஞ்சேன். உதாரணமா சில கேள்விகள்...

★ இப்ப இருக்கிற தமிழ் எழுத்து வடிவம் கால்டுவெல் மாதிரி

யானவங்களால மேம்படுத்தப்பட்டது. அப்ப நம்ப பண்டைய இலக்கியங்களில் எல்லாம் எந்த font யூஸ் பண்ணியிருப்பாங்க?


★ சைனாக்காரன் பேப்பரைக் கண்டு பிடிக்கறதுக்கு முன்னாடியே நம்ப இலக் கியங்கள் இருக்கு. அப்படின்னா அதை யெல்லாம் ஓலைச்சுவடியிலே எழுத்தாணி மூலம் எழுதியிருப்பாங்க. அதெல் லாம் ஆயிரக்கணக்கான வருஷமா எப்படி பத்திரமா இருந்துச்சு? ஆயிரக்கணக்கான வருஷம் பத்திரமா இருந்த அவை இப்போ எங்கே?

★ அல்லது பரம்பரை பரம் பரையா மனப்பாடம் செஞ்சு அடுத்த தலைமுறைக்கு இலக் கியங்கள் ட்ரான்ஸ்ஃபர் ஆகி யிருக்குமா? ட்ரான்ஸ்ஃபர் ஆகி யிருக்கும்னாக்க omissions, commissions, additions and deletions ஆகியிருக்க வாய்ப்பு இருக்கா? இல் லியா? வாய்ப்பு இருக்குன்னா இப்ப இருக் கிறதை நாம அப்படியே ஒரிஜினல்னு ஏத்துக்கலாமா?

★ அருமையான செந்தமிழ் பேசிட்டு இருந்தவங்க கொச்சையா அதாவது இப்ப இருக்கிற பேச்சுத் தமிழுக்கு எப்ப மாறினாங்க? எழுத்து நடைக்கும் பேச்சு நடைக்கும் ஏன் முரண்பாடு இருக்கு? எல்லா மொழியிலயும் இதே மாதிரிதானா? தமிழ்ல ரெண்டு நடையையும் ஒன் ணாக்க முடியாதா?

எம்.ஏ. தமிழ் படிச்ச, தாய் மொழியைத் தமிழாகக் கொண்ட பச்சைத் தமிழ னான என்னோட சந்தே

சடன் பிரேக்கும்



கங்களுக்கு அற்புதமான விளக்கம் தந்தாரு ஐயா செயமோகனார்! (நான் தமிழுப் பத்தி ரொம்ப ஈடுபாட்டோட கொஞ்ச நேரமா எழுதிகிட்டிருக்கதோட விளைவு சடால்னு பேரை மாத்திப் போட்டேன் போல!)

ஆன்மிகத்திலும் பலம் மிக்கவராகவே ஜெயமோகன் இருக்கார். சைதன்ய யதி பற்றி அவர் பேசும்போது என்னோட உடம்புதான் காரை

"உங்க கற்பகம் சீரியல்லே பதினாறு மாசமா கர்ப்பம். எப்படி சாத்தியம்?"
"நீங்க தொடர் வராத சனி, ஞாயிறு லீவு நாளையெல்லாம் சேர்த்துக் கணக்கு பார்க்கறீங்க. அது தப்பு."
- ஆர். பி. சாரதி.



ஒட்டிக்கிட்டு இருந்துச்சே தவிர, மனசு அப்படியே அவர் பேசுற விஷய தளங்களுக்குள் போயிருது.

நானும் என்னோட திறமையையும் புலமையையும் காட்டாம இருந்தா எப்படி? அதனால அவர் கொழந்தைங்ககிட்ட ஃபாரஸ்ட் பத்தியும், காட்டின் வகைகள் பத்தியும், [illegible] இனங்கள், வனவிலங்குகள் பத்தியும் அப்பப்ப அள்ளிவிட்டுக்கிட்டே வந்தேன்.

தமிழ் இலக்கியங்களிலே எனக்கு இருக்கிற ஞானத்தையும் காட்டத் தவறவில்லை.

திருமதி ஜெ.மோ. கேட்டாங்க. "இவ்ளோ மேட்டரை அள்ளிவிடுறீங்களே! சுகிசிவம் மாதிரி நீங்களும் ஏன் இலக்கியச் சொற்பொழிவு ஆற்றக் கூடாதுன்னு?"

'என்னால இலக்கியச் சொற்பொழிவு எத்தனையோ ஆற்ற முடியும்! ஆனாக்க சுகிசிவத்தால ஃபாரஸ்ட் ஆஃபீஸர் வேலையையும் உபரியாப் பார்க்க முடியுமா'ன்னு மனசுக்குள்ளே சிரிச்சுக்கிட்டேன்.

மூணு நாள் பயணம் முடிஞ்சது. வர்றப்போ வேற பாதையைத் தேர்ந்தெடுத்தோம். 43 ஹேர் பின் வளைவுகள் கொண்ட பாதை. குந்தாவளியாக் கோவை பயணம். காரமடை தாண்டுனதும், கோயமுத்தூர் வரை சூப்பர் ரோடுங்க.

ரொம்ப நேரம் மௌனத்துக்குப் பின்னாடி ஜெ.மோ. பேச ஆரம்பிச்சார்.

"சமீப காலத்திலே நான் சந்தித்த மனிதர்களிலேயே..." எனக்கு ஒரே கொண்டாட்டம். 4வது கியரில் இருந்து 5வது கியருக்கு மாற்றினேன்.

"ரொம்ப நகைச்சுவை உணர்வு மிக்கவர்னு..." ஜெமோ தொடர்ந்தார்.

எனக்கு ஒரே கிரிகிரியாயிருச்சு. 70கி.மீ.லிருந்து 80க்கு வேகம் ஏறிருச்சு.

"நகைச்சுவை உணர்வு மட்டுமில்லை. ஆழ்ந்த விஷயஞானமும்..."

'ஆஹா! என்னைப் பத்தி ஏதோ சொல்லப் போறார்!'

ஸ்டீரியோவை நிறுத்திப்போட்டேன். மானசீகமாய், ட்ரைவிங் சீட்டுலே இருக்கிற என்னோட காது பின் சீட்டுல இருக்கிற அவர் வாய்கிட்டே போயிட்டுது.

(சீக்கிரம் சொல்லுங்க சார்!) காரின் வேகம் இப்போது 90 கி.மீ.க்கு ஏறியது.

"நான் சமீபத்திலே சந்திச்சு எனக்கு ரொம்ப சந்தோஷத்தைத் தந்த மனிதர் டைரக்டர் மணிரத்தினம்தான்!"

க்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்ர்ர்ர்ர்ர்ரீரீரீரீரீரீரீரீரீ ச்ச்ச்ச்ச்ச்ச்ச்ச். சடன் பிரேக்! ●

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!



புனிதர் பட்டம் பெற்ற இந்திய அருட்சகோதரி அல்போன்சாவின் சக மாணவியும் நெருங்கிய விளையாட்டுத் தோழியுமான லெட்சுமி குட்டியை (வயது 98) சமீபத்தில் சந்தித்தபோது, அல்போன்சாவின் நினைவுகளை நம்முன் விவரிக்கத் துவங்கினார்.

''கல்வெட்டு போல அந்தக் காலம் என்னுள் பதிவாகியிருக்கு. அல்போன்சாவை சக மாணவன் ஜோசப் கிண்டலடித்ததும், வரப்பில் கால் தடுக்கி அல்போன்சா சேற்றில் விழுந்து கசிந்த ரத்தத்தை வாய்க்காலில் கழுவியதும், எங்கு பார்த்தாலும் லில்லி மலரைப் பறித்துக்கொள்ளும் அவள் அழகும் இன்னும் பசுமையாய் நினைவில் நிற்கிறது.

எதிரியை ஒரு நிமிடம் அமைதியாக்கி விடும் அவள் அழகு. ஆனால் அவளுக்கு இறையன்பில்தான் ஈடுபாடு. இது அறியாமல் அல்போன்சாவுக்குத் திருமண ஏற்பாடு செய்ய, அதைத் தடுக்க எண்ணிய அல்போன்சா தனது இரு கால்களையும் எரியும் உமி குண்டத்தில் வைத்து காயமாக்கிக் கொண்டார். பிறகுதான் கன்னியாஸ்திரியாகும் கனவு நிறைவேறியது. கன்னியாஸ்திரிகளுக்கு ஆசிரியரானார்.

திடீரென உடல்நலம் குன்றியிருந்தபோது, தமிழே தெரியாத அல்போன்சா தமிழ் விவிலியத்தைப் படித்து விளக்கம் சொல்லத் துவங்கியது பெரும் ஆச்சரியம்.

1946-ல் அவர் மறைந்தபின் அவர் கல்லறைக்கு வந்து பிரார்த்திப்போருக்கு வேண்டியது எல்லாம் கிட்டியதால், அவர் புகழ் இந்தியா முழுக்கப் பரவியது. 1985-ன்னு நெனைக்கிறேன். போப் ஆண்டவர் இந்தக் கல்லறைக்கு வந்தப்ப, நடக்க முடியாத 1 வயது ஜூலி எழுந்து நடக்க ஆரம்பித்ததை நாடே அதிசயித்தது. அதனால் அல்போன்சாவை அருளாளராக ஏற்று, தற்போது புனிதராகக் கௌரவப்படுத்தியுள்ளது திருச்சபை. அந்தப் புனிதர் என் தோழி என்பது என் வாழ்வின் கௌரவம் மட்டுமல்ல. எனக்கு கிடைத்த இறைப்பேறு'' என்று தனது ஞாபக முத்துக்களை, காலநூலில் கோர்த்துக் காட்டினார் லெட்சுமி குட்டி.



- த.இ.தாகூர்

"மனித உடலில், மொத்தம் ஐம்பத்தொன்பது விதமான சக்தி ரேகைகள் ஓடுகின்றன. இவற்றில் மின்னோட்ட ரேகைகள், மின் காந்த சக்தி ரேகைகள் போன்றவையும் அடங்கும். இதில் மின் காந்த சக்தி ரேகையின் ஓட்டத்தில் தடை ஏற்பட்டாலோ அல்லது ஓட்டத்தின் அளவு குறைந்தாலோதான் மனிதனுக்கு வியாதிகள் வருகின்றன. சக்தி ரேகைகளைச் சீராக இயக்கும் முறையைத்தான் சைனீஸ் அக்குபஞ்சர் மருத்துவம் செய்கிறது" என்கிறார் அசோக்நகர், குமரன் ஹாஸ்பிடலின் சைனீஸ் அக்குபஞ்சர் மருத்துவ நிபுணர் டாக்டர் நந்தகுமார்.

"மனித உடம்பில் மின்காந்த சக்தியா...?



மின்னோட்ட சக்தியா?'ன்னு ஆரம்பத்தில் மருத்துவத் துறையில் நம்ப மறுத்தனர். ஆனால், ஈ.ஸி.ஜி. கருவி வந்த பிறகு, மின்னோட்டம் இருக்குங்கறதை ஒத்துக்கொண்ட அலோபதி மருத்துவர்கள், எம்.ஆர்.ஐ. ஸ்கேனிங் வந்தபிறகு மின்காந்த சக்தி இருப்பதையும் ஒத்துக்கொண்டனர். ஆனால், ஆரம்பக் காலத்திலேயே, இந்தச் சக்தி ரேகைகளை அடிப்படையா வைச்சு இயங்க ஆரம்பிச்சுடுச்சு சைனீஸ் அக்குபஞ்சர் மருத்துவம்" என்றவரிடம், "அக்குபஞ்சர்... சைனீஸ் அக்குபஞ்சர் இரண்டும் ஒண்ணுதானே?" என்றால், "இல்லை. சைனீஸ் அக்குபஞ்சரின் ஒருவகைதான் அக்குபஞ்சர்" என்கிறார் நந்தகுமார். "மொத்தம் பத்துவிதமான சிகிச்சை முறைகளைக் கொண்டது சைனீஸ் அக்குபஞ்சர். அக்குபஞ்சரில் தொடங்கி, டுனா களிம்பு சிகிச்சை, மூலிகை ஒத்தடம், நோய்களுக்கேற்ப சைனீஸ் மூலிகை மருந்துகள், நியூரோ அக்குபஞ்சர், 108 விதமான சுவாசப் பயிற்சி, காஸ்மெடிக் அக்குபஞ்சர், யாங்லீ சிகிச்சைன்னு... பல சிகிச்சை முறைகளைக் கொண்டது. இன்னைக்கு மருத்துவர்கள் யாருமே நோயாளிகள்கிட்டே இரண்டு நிமிஷத்துக்கு மேலே பேசறது இல்லை. இது ரொம்பத் தப்பு. அரை மணி நேரத்திலிருந்து, நாற்பத்தைஞ்சு நிமிஷம் வரைக்கும் ஒரு நோயாளிக்கிட்டே பேசினாதான், அவங்களுக்கு வந்திருக்கிற நோயோட ஆதிமூலத்தைக் கண்டுபிடிக்க முடியும். ஒருத்தருக்கு சின்ன வயசுல நெஞ்சில அடிபட்டிருக்கும். அதனால சதை கன்றிப் போயிருக்கும். இது, ஆரம்பத்துல தெரியாது. வயசான பிறகுதான் உள்தாக்கத்தினால் வினை ஆரம்பிக்கும்.

ரேகைக



உடனே என்ன பண்ணுவாங்க? இதயம் சம்பந்தமான நோய்னு நெனைச்சுப் பதறுவாங்க. ஈ.ஸி.ஜி. டெஸ்ட் பண்ணுவாங்க; எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்பாங்க. எல்லாம் நார்மலா இருக்கும். ஆனால் வலி குறையாது. ஈ.ஸி.ஜி.யும் சரி... எக்ஸ்ரேயும் சரி இரத்தக் கட்டையோ, தசைகள்ல அடிபட்டிருக்கறதையோ காண்பிக்காது. அவங்களோட பேசும்போதுதான் விபத்து பத்தி புரிய வரும். அப்புறம் அவங்க நெஞ்சுக்கு மேலே ஓடுற சக்தி ரேகைகளை ஈ.எம்.பி.எஸ், எம்.ஓ.ஆர்.ஏ. கருவிகளைக் கொண்டு அளந்து பார்க்கும்போதுதான் எதனால வலின்னு தெரியும். இந்தச் சிகிச்சை மூலம் தசைகள்ல மட்டுமில்ல. எலும்புகள்ல ஏற்பட்டிருக்கும் விக்கம்,





மருத்துவம்!

ருமாட்டிஸம் என்கிற மூட்டுத் தேய்மானம், இதயத்தில் வரும் கோளாறுகள், நுரையீரலைத் தாக்கும் சுவாசக் கோளாறு நோய்கள்... போன்றவற்றையும் முதலில் கட்டுக்குள் கொண்டுவந்து, பின்பு முற்றிலுமாக நீக்கலாம். சிலருக்குச் சுரப்பிகளில் சுரக்கும் விகிதம் மாறுபடும். ஒரு சில அதிகமாகச் சுரக்கும். ஒரு சிலது கம்மியாகச் சுரக்கும். இரண்டுமே ஆபத்தானது. இரண்டையும் சரிப்படுத்தி சமநிலையிலே சுரக்க வைக்கும் எண்டோகிரைன் அக்குபஞ்சர் சிகிச்சை முறை இருக்கிறது'' என்கிறார்.

''நாம் சாப்பாட்டுல சேர்த்துக்கற சுவைகளுக்கும் நமக்கு வர்ற நோய்களுக்கும் ரொம்ப சம்பந்தம் இருக்கு. காரம் அதிகமா சேர்த்துக்கிட்டே வந்தோம்னா நரம்புத் தளர்ச்சி வந்திடும். புளிப்புச் சுவை கோபம் படபடப்பைக் கூட்டும்; மனச்சோர்வை உண்டாக்கும். கசப்பு சேர்க்கும்போது இதயம் வலுவடையும். இப்படி நோயாளிகளுக்கு வந்திருக்கிற வியாதிகளுக்கு ஏற்ப உணவு முறைகள் குறித்தும் அக்கறை கொள்கிறது சைனீஸ் அக்குபஞ்சர். அது மட்டுமல்லாம இது அழகுக் கலை சிகிச்சையையும் உள்ளடக்கியது. மாசு மருவற்ற உடல் பொலிவைக் கொடுக்கவும், பருத்த விகாரமான தோற்றம் கொண்டவர்களை மெலிய வைக்கவும் காஸ்மெடிக் அக்குபஞ்சர் சிகிச்சைமுறை இருக்கிறது'' என்கிறார் ''அப்ப அலோபதி மருத்துவம் வேண்டாமா?'' என்றால், ''நான் அடிப்படையில் ஒரு அலோபதி மருத்துவர். அலோபதி மருத்துவம், நம்ம உடலுறுப்புகளின் இயக்கத்தையும் இருக்கும் இடத்தையும் துல்லியமாகக் காட்டக்கூடியது. என்ன கோளாறு என்பதை அலோபதி மருத்துவத்தில் தெரிந்துகொண்டு, சிகிச்சைக்காக மாற்று மருத்துவத்தை நாடி வந்துவிட வேண்டும்'' என்கிறார் சைனீஸ் அக்குபஞ்சர் மருத்துவ நிபுணர் டாக்டர் நந்தகுமார்.

– கமலி

5 ஸ்ரீ லலிதா மூன்றாம் பாகம்

வெற்றி தேவதை, ஆதி தேவதை

ஜயா - வெற்றிக்குத் தலைவியாக இருப்பவள். ஆதி வராஹ க்ஷேத்திரங்களில் அம்பிகைக்கு ஜயா என்ற திருநாமம் வழங்குவதாகக் கணக்கு. இந்திய தேசத்தில் நிறைய ஆதிவராஹ க்ஷேத்திரங்கள் உண்டு.

இரண்டாம் - மூன்றாம் நூற்றாண்டுகள் வரை, நம் நாட்டில் இரண்டுவித வழிபாடுகள்தான் அதிகமாக இருந்தன. அதற்கான ஆதாரங்களைப் பாடல்களில் நாம் பார்க்கலாம். அவற்றில் ஒன்று வராஹ வழிபாடு. அதனால்தான் வராஹ மூர்த்தியைக் குறிப்பிடுகிற போது, 'ஆதி வராஹர்' என்று சொல்வது.

திருப்பதிகூட ஆதிவராஹ க்ஷேத்திரம்தான். வராஹர்தான் அங்கே 'ஒரிஜினல்' மூர்த்தி. திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் ஆதிவராஹர். அப்படி, இந்தத் தேசத்தில் வராஹ வழிபாடு பரிபூரணமாக இருந்தது ஒரு கால கட்டத்தில்.

அதேமாதிரி சைவத்தில், அர்த்தநாரீசுவரனாக அம்மையப்ப வழிபாடு பிரதானமாக இருந்தது. மூன்றாம் நூற்றாண்டில், காரைக்கால் அம்மையார் காலத்தில், அம்மையப்ப வழிபாடுதான். அவர் பாடல்களில் சிவலிங்கத் தோற்றத்தை விட அம்மையப்ப தோற்றத்தைத்தான் அதிகமாகப் பாடியிருப்பார்.

அதன் பிறகு பலவிதமான வழிபாடுகள் வந்து சேர்ந்தன. அப்படி வந்த பிறகும், ஆதிவராஹ க்ஷேத்திரங்களில் அம்பாள் ஜயா என்கிற திருநாமத்துடன் விளங்குவதாகக் கணக்கு.

ஜாலந்தர ஸ்திதா - ஜாலந்தர க்ஷேத்திரத்தில் ஸ்திரமாக விளங்கக் கூடியவள். ஜாலந்தர க்ஷேத்திரம் என்பது இன்றைய ஜலந்தர். ஜாலந்தராயை நம: என்று நாமாவளி உண்டு.

ஓட்யாண பீட நிலயா - ஓட்யாண பீடத்தில் இருக்கக்கூடியவள்.

நம்முள் உறையும் ரகசிய சக்தி!


பிந்துமண்டல வாஸினி - அம்பாளுடைய ஸ்வரூபம் எங்கேயெல்லாம், எப்படியெல்லாம் ஸ்தாபிதமாகியிருக்கிறது என்பதைச் சொல்லக்கூடிய நாமங்களுள் ஒன்று. பிந்து மண்டல ஸ்தானம் என்பது சிவ-சக்தி ஐக்கிய ஸ்வரூபத்தின் ஸ்தானம். இந்த ஸ்தானத்தில் அம்பாளைக் கண்டுணரும்போதுதான் சக்தி வழிபாடு பூரணத்துவம் அடைகிறது.

ரகசிய யாகம்!

ரஹோயாக க்ரமாராத்யா என்பது அடுத்த திருநாமம். ரஹஸ்யமாகச் செய்யக்கூடிய யாகத்தின் மூலமாக ஆராதனை செய்யப்படுபவள் அம்பிகை.

ரஹஸ்யமாகச் செய்யப்படக்கூடிய

சுதா சேஷய்யன்


ஸ்ரீ பிரசன்னநாயகி

யாகம் என்றால் என்ன...? யாருக்கும் தெரியாமல், ஒளித்து வைத்துச் செய்வது என்பதல்ல இதன் அர்த்தம்!

தேவி வழிபாட்டில் சமயாசாரம், கௌலாசாரம் என்ற இரு முறைகள் உள்ளதைப் பார்த்தோம். இவை இரண்டுமில்லாமல் மிஸ்ரம் என்றும் ஒரு வழிபாட்டு முறை உண்டு. இந்த சமயாசாரம், கௌலாசாரம் ஆகிய இரண்டையும் சேர்த்த ஒருமுறைதான் மிஸ்ரம்.

இந்த வழிபாட்டு முறைகளுக்குரிய நாமங்கள், அம்பாளைப் பலவிதமான ஆதார சக்கரங்களில் எப்படியெல்லாம் ஸ்திரமாக ஆவாகனம் செய்யலாம் என்று சொல்கிற மந்திரங்கள். இந்த ஆதார சக்கரங்கள் வழியே, மூலாதாரத்தில் அமைதியுற்று இருக்கிற குண்டலினி சக்தியை எழுப்பி, சஹஸ்ரார கமலத்தில் இருக்கக்கூடிய அம்பாளோடு ஐக்கியப்படுத்துகிற முறைக்கு உரிய மந்திரங்கள். - இது ஒருவிதமான ஆசாரம்.

அண்டத்தில் - உலகில் - எல்லாவற்றையுமே அம்பாளாகப் பார்க்கக்கூடிய தன்மை என்பது, இன்னொரு விதமான ஆசாரம். பிண்டத்திலேயே (நம் உடலுக்குள்ளேயே) அம்பாளை உணர்ந்து ஆராதிக்கக்கூடிய ஆற்றலும் பக்குவமும் எல்லோருக்கும் சாத்தியமில்லை. எனவே அண்டத்தில் கண்டு வழிபடும் ஆசாரமும் அமைக்கப்பெற்றது.

உடலில் இருக்கக்கூடிய ஒவ்வோர் ஆதார சக்கரத்திலேயும் குண்டலினி ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள் அம்பாள் என்று சொல்லப்படுகிறது. மூன்று சுற்றாக வளைந்து சுருங்கி உறங்கும் சக்தி வடிவத்தில் இருக்கிறது குண்டலினி. அதனால்தான் ஸ்ரீ சக்கரத்தில் இதன் அடையாளமாக த்ரிவலயா என்று மூன்று சக்கரங்கள் இருக்கின்றன.

இப்படி மூன்று சுற்றாகச் சுற்றிக் கொண்டு உறங்கும் சக்தியை ஒரு பாம்பாக உருவகப்படுத்திச் சொல்வது வழக்கம். ஏன் பாம்பு என்றால், நிறைய ஆற்றல் இருக்கக்கூடிய ஒரு விஷயத்தை, சிறிய இடத்தில் அடக்கி வைக்க வேண்டுமென்றால், அதை அப்படியே சுழற்றி வைத்தால்தான் முடியும். ஸ்ப்ரிங் என்று ஆங்கிலத்தில் சொல்லும் கருவியை ஒரு சுழற்றுச் சுழற்றி வைத்திருந்து விடுவிக்கிறபோது, நிறைய சக்தி வெளிப்பட்டு அது மேலே எழுகிறது. ஆனால், அழுத்தி வைத்திருக்கையில் அந்த சக்தி கண்ணுக்குத் தெரியாது. இதைப் போன்ற உருவகம்தான் குண்டலினி ஆற்றலைப் பாம்பாகச் சித்திரிக்கிறது.

ஆதி வராஹ க்ஷேத்திரங்களில் அம்பிகைக்கு ஜெயா என்கிற திருநாமம் வழங்குவதாகக் கணக்கு

அம்பாள் குண்டலினி சக்தியின் வடிவமாக (பாம்பாக) சுற்றிக் கிடக்கிறாள். உடலின் மூலாதார சக்கரத்தில் உள்ள அந்த சக்தியை எழுப்பி, ஒவ்வொரு ஆதாரச் சக்கரமாகத் தாண்டித் தாண்டிப் போய் சஹஸ்ரார பத்மம் என்ற இறுதி ஸ்தானத்தில் சேர்ப்பது என்பது ஒரு வகையான வழிபாடு. பிண்டத்திலேயே அம்பாளைக் காணக் கூடிய வழிபாடு.

ஆனால், இந்த வழிபாட்டு முறை எல்லோருக்கும் சாத்தியமில்லை. மிக

அதிகமான முயற்சியும் ஒருமுக சிந்தனையும் இதற்குத் தேவை. கவனமும் தியானமும் வெளிநோக்கில் போகாமல், உள்முகமாகத் திரும்ப வேண்டும். இது சராசரியானவர்களுக்குச் சாத்தியமில்லை. சில பேருக்கு மட்டுமே கைவரும்.

இதற்கு அடுத்தமுறை ஒன்று உண்டு - மிஸ்ரம் என்பதாக - ஸ்ரீ சக்கர தகடு இருக்கிறதல்லவா, கண்ணுக்கு முன்னால் தெரிகிற அந்த அமைப்பில் அம்பாளை ஆவாஹனம் செய்துள்ளதாகக் கருதி வழிபடக் கூடியது.

ஆக, ஒரு பக்கம் மானஸிக வழிபாடும் இருக்கிறது, இன்னொரு புறம் கண்ணுக்கு எதிரே தெரிகிற ஸ்தூல வழிபாடும் இருக்கிறது. இவையிரண்டும் இணைந்த மிஸ்ரம் என்கிற முறையும் இருக்கிறது. மிஸ்ரம் என்றாலே 'கலந்தது' என்றுதான் பொருள். பிரதானமானவை கௌலாசாரமும் சமயாசாரமும்தான் என்றாலும் மிஸ்ரத்துக்கும் அனுமதி உண்டு.



இப்படிப் பல விதமாக வழிபட்டாலும், சமயாசாரமாக வழிபடுகிறபோது, குண்டலினியை எழுப்பி, எழுப்பி, கொண்டு வருகிற முறை இருக்கிறதே, அதுதான் ரகசியமாக நடைபெறும் யாகம் என்று சொல்லப்படுகிறது (ரஹோயாக கிராமாராத்யா).

யாகம் செய்வதானால் அங்கே ஓர் அக்னி குண்டம் வேண்டும். அதிலே நெய்யைப் பெய்து, இன்னும் பலவிதமான பொருள்களை இட வேண்டும். அதே மாதிரி, நம் உள்ளுக்குள்ளே ஒரு யாகம்! நமக்குள்ளேயும் ஓர் அக்னி குண்டம் - அதுதான் சிதக்னி குண்டம். நமது சித்தமாகிற இந்த அக்னி குண்டத்தில், பல பொருள்களைக் கொண்டுபோய்ப் போட வேண்டும்.

எந்தத் திரவியங்களை நாம் சிதக்னி குண்டத்தில் கொண்டு போய்ப் போட முடியும்...?

ஞானமாகிற புஷ்பம், தியானமாகிற மலர், சத்தியமாகிற பூ, தவமாகிற அர்ச்சனை என்ற உயர்ந்த புஷ்பங்களைப் போட்டு, நெய்க்குப் பதிலாகப் புண்ணியத்தைப் பெய்து செய்கிற யாகம் இருக்கிறதே, அதுதான் **அவனை** ஆராதனை செய்கிற ரஹோ (ரகசிய) யாகம்.

இந்த சிதக்னி குண்டத்திலே ஒவ்வொருவருக்கும் உள்ளே அம்பாள் ஆராதிக்கப்படக்கூடியவள், அந்த ஆராதனைக்குக் காட்சி கொடுத்து அருள்பவள் என்றால், அதற்கு என்ன பொருள்?

ஆரம்பத் திருநாமத்தில் பார்த்தோமே, **தேவ கார்ய ஸமுத்யதாவாக**, தேவர்கள் சிதக்னி குண்டத்தில் செய்த யாகத்துக்காகத் தோன்றியவள் என்று... அதேபோல் நமக்குள் நடக்கும் ரஹோ யாகத்தின் போதும் அவள் உற்பவிக்கிறாள் என்றால், நம்மையும் அந்த தேவர் நிலைக்கு உயர்த்திவிட அம்பாள் காத்திருக்கிறாள் என்றே பொருள். நம்மிடம் உள்ள தீமைகளை அழித்துவிட்டு, முழுக்க முழுக்க நன்மைகளைத் தருகிறவள் அம்பிகை பராசக்தி.

(வளரும்)



• இலக்கியம் • சினிமா • ஆன்மிகம்
• பயணம் • ஆராய்ச்சி • அனுபவம் • சமூகம் • பொருளாதாரம்
• தொழில் • நகைச்சுவை • அரசியல் • வரலாறு
இன்னும் ஏராளமாய்...
கல்கி தீபாவளி மலர் 2008
படிக்க... ரசிக்க... பாதுகாக்க...
விரைவில் கடைகளில்...
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...
விலை ரூ.100/- மட்டுமே.
கூரியர் மூலம் பெற ரூ.30/- சேர்த்து எம்.ஓ. அல்லது D.D. அனுப்பவும்
மானேஜர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை - 32
தொலைபேசி : 4343 8888
உள்ளூர் ஏஜெண்டிடமும் பதிவு செய்து கொள்ளலாம்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.